www.padippakam.com

# புதிய ஜனநாயகம்



போபார்ஸ்:
மீண்டும்
புதிய ஆதாரங்கள்!
திட்டமிட்ட
குழப்பங்கள்!

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16-30 செப்'90 5/21 விலை ரூ.2.

குடா நெருக்கடி:
அமெரிக்கக் கழுகு
அடைகாத்தன் விளைவு!




படிப்பகம்

www.padippakam.com

உழுபவர்களுக்கே நிலம்! உழைப்பவர்களுக்கே அதிகாரம்!

## விவசாயிகள் விடுதலை முன்னணியின் அம்மாபேட்டை வட்டார முதல் மாநாடு!

### கருத்தரங்கம் - ஊர்வலம் - பொதுக்கூட்டம் - கலைநிகழ்ச்சி

1990 செப்டம்பர் 22 சனி — குருவாரெட்டியூரில்

அனைவரும் வருக! ஆதரவு தருக!

இவண்

மாநாட்டு வரவேற்புக் குழு.



# கல்லூரி முதல்வரின் ரௌடித்தனம்! தொடரும் மாணவர் போராட்டம்!

மதுரை மாவட்டம் உசிலை தாலுக்கா கருமாத்தூரில் உள்ளது, அருள் ஆனந்தர் (தன்னாட்சி) கல்லூரி. தன்னாட்சி கிடைத்த கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்லூரி நிர்வாகம் செய்துவரும் அடாவடித்தனத்தில் மாணவர்களைத் தாக்குவதும் அடங்கும்! பொறுத்துப் பொறுத்து பார்த்த மாணவர்கள் சமீபத்தில் போராட்டத்தில் இறங்கினர்.



தரமற்ற சாப்பாட்டிற்கு கல்லூரி விடுதி நிர்வாகம் பலமடங்கு பணம் பிடுங்குவதை எதிர்த்து 8.8.90 அன்று விடுதி மாணவர்கள் தங்களுக்குள் கூட்டம் நடத்தினர். இதை உளவறிந்த நிர்வாகம் கருங்காலி மாணவர்களை மா.பொ.சி. வீரன் என்ற கருங்காலி ஆசிரியர் தலைமையில் தாக்குதல் நடத்த அனுப்பி வைத்தது. மாணவர்கள் இந்த ரௌடித்தனத்தை முறைப்படி கல்லூரி நிர்வாகத்திடம் மனு கொடுத்து முறையிட்டனர்.

ஆனால் கல்லூரி முதல்வர் போஸ் "ஒன்பது - பத்து குத்து வெட்டுக்களை சமாளித்தவன் நான். உங்களுக்கு தெரிந்ததை பண்ணுங்கள்" என்று ரஜினி 'ஸ்டைலி'ல் மாணவர்களிடம் 'உதார்' காட்டினார். மாணவர்கள் ஆகஸ்ட் 10-ம் தேதி இரவு நியாயம் கோரி சாலையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். மறுநாள் உசிலை நகரில் உண்ணாவிரத போராட்டத்தை தொடர்ந்தனர். சிவில், போலீசு; அதிகார வர்க்கம் மாணவர்கள் மீது படையெடுத்தது. வழக்கம்போல், மாணவர்களிடம் போராட்டத்தைக் கைவிடும்படி நைந்து பேசி, பிறகு மிரட்டியது.

மறுபுறம் கல்லூரி கருங்காலிகள் கும்பல் உண்ணாவிரத பந்தலிலேயே வந்து மாணவர்களை மிரட்டியது. உசிலைவட்ட விவசாயிகள் விடுதலை முன்னணி மாணவர்கள் போராட்டத்தை ஆதரித்து தட்டி எழுதி வைத்தது. 'சி.பி.எம்' கட்சியை சேர்ந்த தலைமை, மாணவர்களுடன் சேர்ந்து, கல்லூரி நிர்வாகம், அதிகார வர்க்கத்துடன் ஒரு ஒப்பந்தம் போட்டது.

இப்படி போக்கு காட்டிய நிர்வாகம், உடனே காலவரையற்ற விடுமுறை அறிவித்து கல்லூரியை மூடியது. விழிப்படைந்த மாணவர்கள் போராட்டத்தை தொடர்ந்தார்கள். 'ஸ்டடி லீவ்' என்று கூறி கல்லூரி மூடியதை நியாயப்படுத்தியது நிர்வாகம். இந்த இடைப்பட்ட நாட்களில் மாணவர்களின் பெற்றோர்களை தனித்தனியாக அழைத்து பீதியூட்டி எழுதி வாங்கிக் கொண்டது. இந்த விசாரணைக்கு வராததாக சொல்லி 17 மாணவர்களை (போராட்டத்தில் முன்னணி வகித்தவர்கள்) கல்லூரியிலிருந்து நீக்கிவிட்டது. அதிகார திமிர் பிடித்த போஸ் - சொக்கர் கூட்டம் நடத்தும் மமதை போக்கை முறியடிக்க மாணவர்கள் தொடர்ந்து போராடுகிறார்கள். நியாயமான மாணவர்கள் போராட்டம் நிச்சயம் வெல்லும்.

# நம்பிக்கை பாதையில்...

விவசாயிகளின், முழு நம்பிக்கைக்குரிய அமைப்பாய் வளர்ந்துவரும் உத்தமபாளையம் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணியின் முதல் மாநாடு ஆகஸ்ட் 25-ம் தேதி நடைபெறறது. கம்பம் நகரில் தூக்குமேடை தியாகி பாலு அரங்கில் (வாணியர் கல்யாண மண்டபம்) துவங்கியது. வி.வி.மு.வின் செங்கொடியை தோழர் வெண்ணிலா ஏற்றிவைக்க, தியாகிகளுக்கான வீரவணக்கத்துடன் மாநாட்டு நடவடிக்கைகள் ஆரம்பமானது.

தோழர் நாராயணன் (வி.வி.மு. திருவெண்ணெய் நல்லூர் ஒன்றிய அமைப்பாளர்) தலைமையில் கருத்தரங்கமும், தோழர் பி.கே.ராஜன் தலைமையில் பொதுக்கூட்டமும் நடந்தது. செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் மோகன், செயற்குழு உறுப்பினர்கள் தோழர் வசந்தன், தோழர் மகாலிங்கம் ஆகியோரை மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் மாது அறிமுகப்படுத்தி எழுச்சி மிகு உரையாற்றினார்.

ஊர்வலத்திற்கு போலீசு அனுமதி மறுத்தது. பனைமரத்தில் தேள் கொட்ட தென்னை மரத்தில் நெறி கட்டிய கதையாக போலீசு காரணம் சொன்னது. அன்று காலை கூட்டுறவு சங்க தேர்தலில் ஓட்டுக் கட்சிகள் ஓட்டுப் பெட்டியை தூக்கிக் கொண்டு போய் ரௌடித்தனம் செய்ததால் சட்டம் - ஒழுங்கு மோசமாக இருப்பதாக கூறியது. பொதுக் கூட்டத்தில் புகைப்படமெடுத்த உளவு பிரிவு போலீசை தோழர்கள் மடக்கிக் கொண்டனர். பத்திரிக்கை நிருபர் என்று புளுகிய போலீசு புலி, அடையாள அட்டை கேட்டவுடன் அசடு வழிந்தது. பிறகு, மரியாதையாக 'போட்டோ பிலிமை' கழட்டிக் கொடுத்து விட்டு ஓடிவிட்டது.

வி.வி.மு. தோழர்கள் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள் நடத்தி மாநாட்டுக்கு மெருகூட்டினர். போர்குணத்தை நெஞ்சில் ஏந்தி மாநாடு வீரவணக்கத்துடன் முடிந்தது. ●



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஐந்தாமாண்டு

5-21

16-30 செப்'90

உள்நாடு
தனி இதழ்: ரூ.2/-
ஆண்டு சந்தா: ரூ.48/-

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 11

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

எஸ்.மதியழகன்
ஆசிரியர், 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

# பதவிபோனாலும் பாசிசத்தன்மை மாறவில்லை!

**கா**ங்கிரசுக் கட்சியின் டில்லி நகரத் தலைவர்களில் ஒருவர். அதன் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர். அதன் பாசிச குண்டர்படை - ரௌடிக் கும்பலின் கிரிமினல் தலைவன். 1984 நவம்பர் டில்லி சீக்கியர் படுகொலைகளின் போது, பட்டப் பகலில் ஆயிரக்கணக்கான சீக்கியரை உயிரோடு தீவைத்துக் கொளுத்தி, அவர்களது சொத்துக்களை சூறையாடிய, அவர்களது பெண்களைக் கற்பழித்த பாசிசக் கொலைவெறிக் கும்பலுக்குத் தலைமை தாங்கியவன், சஜ்ஜன் குமார். அரசின் அதிகாரத் தலைமைப் பீடமாகிய டில்லியிலேயே, அதன் அதி உயர் அதிரடி, ரகசிய, உளவுப்படையான மத்தியப் புலனாய்வுத் துறை இந்தக் கிரிமினல் குற்றவாளியைக் கைது செய்ய முயன்று முடியாமல் விரட்டியடிக்கப் பட்டிருக்கிறது.

1984 நவம்பர் டில்லி சீக்கியர் படுகொலையை நியாயப்படுத்திய பாசிச ராஜீவ் கும்பல், பொது நிர்பந்தம் காரணமாகத் தனது எடுபிடி நீதிபதி ரங்கனாத் மிஸ்ரா தலைமையில் ஒரு விசாரணைக் குழு அமைத்தது. அது பல மாதங்கள் கண்துடைப்பு விசாரணைகள் நடத்திவிட்டு காங்கிரஸ் கட்சி கலவரத்தில் சம்பந்தப்படவில்லை என்றும் எந்தக் குற்றவாளி மீதும் புகார் கூறாமல் இன்னொரு விசாரணைக்குழு அமைக்கும்படியும் தீர்ப்புக் கூறியது. பிறகு ஜெயின் பேனர்ஜி கமிட்டி அமைக்கப்பட்டு, காங்கிரசுப் பிரமுகர் பிரம்மானந்த குப்தா, சஜ்ஜன் குமார் ஆகிய ஒரு சிலர் மீது, ஓரிரு குற்றச்சாட்டுகள் மட்டுமே வைக்கப்பட்டன. ஆனால் ஜெயின் - பேனர்ஜி கமிட்டி அமைக்கப்பட்டதே செல்லாது என டில்லி உயர்நீதிமன்ற தீர்ப்பு வாங்கி அவர்களும் தப்பித்துக் கொண்டனர்.

பாசிச ராஜீவ் அரசின் மந்திரிகளான எச்.கே.எல்.பகத், ஜகதீஷ் டைட்லர், நாடாளுமன்ற உறுப்பினர்களான சஜ்ஜன் குமார், லலித் மகான், தர்ம்தாஸ் சாஸ்திரி, டில்லி நகரவை உறுப்பினரான அர்ஜுன் தாஸ் போன்ற பாசிச கிரிமினல் கும்பல்தான் 1984 நவம்பர் டில்லி சீக்கியப் படுகொலைகளை, கொள்ளை - சூறையாடலை, கற்பழிப்புகளைத் தலைமையேற்று நடத்தினர் என்பது அனைவரும் அறிந்தது தான். மக்கள் உரிமை மற்றும் மக்கள் விசாரணை கமிட்டிகள் பலவும் இதை நிரூபித்துள்ளன. டில்லியைப் போலவே, டாட்டா நகர், கான்பூர், ரூர்கேலா போன்ற வட இந்திய நகரங்களில் சீக்கியரைப் படுகொலை செய்தது, பாசிச ராஜீவ் கும்பல். இவர்களுக்கெல்லாம் பாதுகாப்பும் பதவிகளும் அளிக்கப்பட்டதே தவிர யாருமே தண்டிக்கப்படவில்லை. அதே சமயம் பாதிக்கப்பட்டு சொத்து - வீடு - உறவு இழந்து அனாதைகளாகவும் விதவைகளாகவும் ஆயிரக்கணக்கானோர் அகதி முகாம்களில் இன்னமும் தரும நிறுவனங்களிடம் கையேந்தும் அவல நிலையில் தள்ளப்பட்டுள்ளனர்.

ஜனதாதளம் - தேசிய முன்னணி தேர்தல் அறிக்கையிலும் ஆட்சிக்கு வந்த பிறகு சீக்கியத் தலைவர்களுடன் பேசும்போதும் டில்லி சீக்கியப் படுகொலைகளுக்குக் காரணமான குற்றவாளிகளைத் தண்டிப்பதாகவும், அகதிகளுக்குத் தகுந்த நிவாரணம் அளிப்பதாகவும் வாக்குறுதி வழங்கியது. பத்து மாதங்களாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது பஞ்சாபில் அரசு பயங்கரவாத ஆட்சியை மேலும் நீட்டிப்பதற்கு சட்ட ஒப்புதல் பெறவேண்டிய நிலைமையுள்ளது. இந்தச் சமயத்தில் டில்லி சீக்கியர் படுகொலைக் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுப்பதாக நாடகமாடுகிறது.

கொலையாளிகளைக் கைது செய்யப்போகும் செய்தி அந்தக் கும்பலுக்கு முன்னமேயே தெரிந்திருக்கிறது. இல்லையானால் கொலைகாரன் சஜ்ஜன் குமாரைக் கைது செய்ய, காலை 5 மணிக்கு சி.பி.ஐ.குழு போனவுடனே நூற்றுக்கணக்கான காங்கிரசு கும்பல் சூழ்ந்து கொண்டிருக்க முடியாது. டில்லி கோர்ட்டுக்குள் புகுந்து வக்கீல்களைத் தாக்கிய காங்கிரஸ் ரௌடிகளின் தலைவன் ராஜேஷ் யாதவ், தர்ம்தாஸ் சாஸ்திரி போன்ற கிரிமினல்கள் தலைமையில் மேலும் சில ஆயிரம் பேர் திரண்டு சாலைகளை மறித்து, போக்குவரத்து வாகனங்களையும் சி.பி.ஐ. கார் - வேனையும் கொளுத்தியிருக்கின்றனர். ஏழு மணி நேரம் நடந்த வெறியாட்டத்தில் சி.பி.ஐ. குழுவே சிக்கிக் கொண்டது. மீட்கப்போன போலீசையும் அக்கும்பல் விரட்டியது. கொலைகாரன் சஜ்ஜன்குமார் மாடியில் நின்று கொண்டு வீரசாகச உரைகள் ஆற்றினார். சி.பி.ஐ. குழுவினரைக் 'காப்பாற்றி' அனுப்பி வைத்தார். உடனே சஜ்ஜன் குமாருக்கு எதிர்பார்ப்பு ஜாமீன் பெற்றதோடு. இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை எனக் கூறும் பாசிச ராஜீவ் கும்பல் அடுத்த நாளே பெரும்பேரணி நடத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் முழுவதும் காட்டுவதென்ன? ராஜீவ் கும்பல் ஆட்சி அதிகாரத்தை இழந்துள்ள போதிலும் அதன் பாசிசத் தன்மை மாறிவிடவில்லை; அதற்குள்ள பின்பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. வாய்ப்புக் கிடைக்கும் போது அந்தப் பாசிசக் கொலைவெறிக் கும்பல் மக்கள் மீது பாயத் தயங்காது. அதே சமயம் இப்போது ஆட்சியிலுள்ள ஜனதாதள - தேசிய முன்னணி அதற்கு எதிராகத் தீர்மானமான நடவடிக்கை எதையும் எடுக்காது. ஏனெனில் வி.பி.சிங், அருண்நேரு இன்னும் பல ஜனதாதள மந்திரிகள் அவசர நிலை ஆட்சி, பொற்கோவில் மீதான இராணுவ தாக்குதல், டில்லி நவம்பர் சீக்கியர் படுகொலை ஆகிய முந்தைய அரசுகளின் பாசிசச் செயல்களை அங்கீகரித்துப் பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தவர்கள்தான். இன்னொரு புறம் இப்போதும் ஆர்.எஸ்.எஸ். மதவெறி பாசிச கும்பலின் தயவிலும், அரசு பயங்கரவாதத்தைத் தொடருவதாகவும் உள்ளது, ஜனதாதள - தேசிய முன்னணி அரசு. ஆகவே 1984 டில்லி நவம்பர் சீக்கியர் படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகளில் இருவரான லலித் மகான் மற்றும் அர்ஜுன்தாஸை சீக்கியத் தீவிரவாதிகள் அழித்தொழித்தது போன்ற நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவை. அந்த வழியிலே தான் குற்றவாளிகளைத் தண்டிக்க முடியும் என்கிறபோது. அது நியாயமானதும், அவசியமானதும் ஆகிவிடுகிறது. ●

படிப்பகம்

www.padippakam.com

# அமெரிக்கக் கழுகு அடைகாத்ததன் விளைவு!

மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு — விலையேற்றம்; பிற பெட்ரோலியப் பொருட்களின் பற்றாக்குறை காரணமாக போக்குவரத்தும் பல ஆலைகளும் நிலை குலைந்து போகும் என்ற பீதி; அரபுநாடுகளில் உள்ள இந்திய அகதிகளின் அவலங்கள்; அமெரிக்கா - ஈராக் யுத்த அபாயம் பற்றிய பரபரப்புச் செய்திகள் நமது நாட்டின் கவனத்தை மத்திய கிழக்கில் உள்ள வளைகுடா நாடுகளின் பக்கம் திருப்பியிருக்கிறது.

''வளைகுடா நெருக்கடி இன்னும் எவ்வவு காலம் நீடிக்கும்?'' ''வளைகுடா நெருக்கடிக்கு என்னதான் தீர்வு, எப்படித்தான் முடியும்?'' ''அமெரிக்கா - ஈராக் போர் மூளுமா? அது உலகப்போராக வெடிக்குமோ?'' - இப்படி ஏராளமான கேள்விகள் உலகின் மூலைமுடுக்கெல்லாம் கேட்கிறார்கள். வளைகுடா நெருக்கடி இன்னும் ஓரிரு வாரங்களிலோ, மாதங்களிலோ தீர்ந்துவிடாது. அதற்கான வாய்ப்பே கண்ணுக்குத் தெரியவில்லை. வளைகுடா போர் தவிர்க்க முடியாதது என்கிற வகையில் இரண்டுதரப்புமே வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றன. சமரசம் - சமரசத் தீர்வுக்கான வாய்ப்பு மிகமிகக் குறைவாகவே உள்ளது. அப்படி ஏதும் ஏற்பட்டால் அது தற்காலிகமானதாகவே இருக்கும். உலகப் போராக வெடிக்காவிட்டாலும், வளைகுடா நாடுகள் பலவற்றையும் தழுவியதாக இருக்கும்; ஒரு உலகப் போருக்குரிய விளைவுகளையும் அழிவுகளையும் ஏற்படுத்திவிடும். அதன் பாதிப்புகள் போரில் சம்பந்தப்படும் நாடுகளோடு நின்றுவிடாது. வளைகுடா நெருக்கடியின் வீச்சு எல்லா நாடுகளையும் நிச்சயம் பாதிக்கும்.

மத்திய கிழக்கு அரபு நாடுகளில் போர் நெருக்கடி ஏற்படும் பொழுதெல்லாம் உலக நாடுகளது பொருளாதாரம் நிலைகுலைந்து போகிறது. ஏனென்றால் உலகின் எண்ணெய்வள இருப்பில் அங்கே மட்டும் 66.3% உள்ளது. அரபு இஸ்ரேல் போரைத் தொடர்ந்து 1973-74-ல் எண்ணெய் ஆயுதத்தின் சக்தியை அரபுநாடுகள் கண்டுகொண்டன. பெட்ரோலியம் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (ஓபெக் கார்ட்டல்) ஏற்படுத்தப்பட்டு எண்ணெய் விலை நான்கு மடங்காக உயர்த்தப்பட்டது. அதன் பிறகு 1979-ல் நடந்த 'ஈரானியப் புரட்சி' மேலும் இரண்டு மடங்கு விலையேற்றியது.

இதனால அரபுநாடுகள், அவற்றை ஆளும் அரசர்களான சேக்குகள் - அமீர்களும், இராணுவ சர்வாதிகாரிகளும் செல்வத்திலும் சுகபோகத்திலும் மிதந்தனர். ஆனால் உலகநாடுகள் குறிப்பாக மூன்றாம் உலகின் ஏழைநாடுகள் தீராத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டன. பணவீக்கம், உற்பத்திப் பின்னேற்றம், விலையேற்றம் அந்நாடுகளின் குரல்வளையை நெறித்தன.

1973-74 எண்ணெய் நெருக்கடியால் மிகவும் பாதிக்கப்பட்டவை ஆஃபிரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகள். மேற்கத்திய வங்கிகளில் குவிந்த அரபு எண்ணெய் பணத்தையே மீண்டும் பெருமளவுக்கு வட்டி கொடுத்து கடனாகப் பெறும்படி அந்நாடுகள் தள்ளப்பட்டன. ஒரு பத்தாண்டுகளுக்குள் அவை கழுத்தளவுக் கடனில் மூழ்கிப் போய்விட்டன. 1979 எண்ணெய் நெருக்கடி மேற்கத்திய நாடுகளிலேயே பணவீக்கத்தையும், பொருளாதார வீழ்ச்சியையும் ஏற்படுத்தியது. அவை வங்கிக்கடன் வட்டியைப் பன்மடங்கு ஏற்றியதோடு ஆஃபிரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகளின் கழுத்தில் துண்டுபோட்டு முறுக்கிக் கடன் வசூலிக்கத் துவங்கின.

மொத்தத்தில் மூன்றாம் உலகநாடுகளின் ஏற்றுமதி அளவும் அவற்றின் விலையும் வீழ்ந்தன; சராசரி வருமானம் குறைந்தது; புதிய கடன் வாங்கமுடியாத நிலையும் ஏற்பட்டது. பலநாடுகள் குறிப்பாக ஆஃபிரிக்கா, தென் அமெரிக்க நாடுகள் பழைய கடனுக்கு வட்டி செலுத்தக்கூடிய அளவுகூட அந்நிய வருமானம் சம்பாதிக்க முடியாமல், அதற்கே கடன் வாங்குமளவுக்கு கடன் - புதைசேற்றுக்குள் சிக்கிக் கொண்டன.


இதனால் மக்களின் வாழ்க்கைத்தரம் பத்தாண்டுகள் பின்னுக்கு விழுந்தன. மூன்றாம் உலகநாடுகள் எங்கும் வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, பட்டினிச் சாவுகள் பற்றிக் கொண்டன.

இந்நிலையில் இப்போது வந்துள்ள வளைகுடா நெருக்கடி பல நாடுகளின் பொருளாதாரத்தைத் 'திவாலா' ஆக்கிவிடும். அதுபோராக வெடிக்குமானால் பேரழிவையே ஏற்படுத்திவிடும். இதில் சந்தேகமே வேண்டாம். ஏற்கனவே ஈராக்குக்கு எதிராக ஐக்கிய நாடுகள் விதித்துள்ள பொருளாதார முற்றுகை - தடை நடவடிக்கையே இந்நாடுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. எண்ணெய் விலை, பணவீக்கம், வட்டி விகிதம் நெட்டுக் குத்தாக ஏறத் துவங்கிவிட்டன.

மேற்கு ஏகாதிபத்திய நாடுகளில் 50% விலை ஏறிவிட்டது. ஜப்பானின் பங்குச் சந்தை விலை 30% வீழ்ந்துவிட்டது. போர் வெடிக்காமல் இருந்தால்கூட, அமெரிக்க இராணுவதளை அரபுநாடுகளில் வைத்திருக்கவே ஒரு நாளைக்கு 75 கோடி ரூபாய் செலவாகும். அமெரிக்க 'பட்ஜெட்' பற்றாக்குறை 4,00,000 கோடி ரூபாயிலிருந்து 6,40,000 கோடி ரூபாயாகிவிடும். இந்தச் சுமை முழுவதும் ஏழைநாடுகள் மீதுதான் சுமத்தப்படும். இதுதவிர எண்ணெய் விலையேற்றம் வேறு பெரும் சுமையாகிவிடும். போர் மூளுமானால் இவையே பன்மடங்காகிவிடும்.

இந்தியாவை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். 40% பெட்ரோலிய கச்சா எண்ணெய் ஈராக் மற்றும் குவைத்தில் இருந்து இறக்குமதி செய்து வந்தது. வளைகுடா நெருக்கடியினால் நின்று போன இதற்கு ஈடு கட்ட வேண்டும். இதுதவிர, ஒரு பீப்பாய்க்கு ஒரு டாலர் வீதம் விலையேறினால் அதற்காக மட்டும் 350 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். குவைத்தில் வாழ்வோர் மாதம் அனுப்பும் 320 கோடி ரூபாய் இழப்ப நேரிடும். இந்திய பட்ஜெட் பற்றாக்குறை 8000 கோடி ரூபாயில் இருந்து 14000 கோடி ரூபாயாகும். இவை தவிர ஈராக், குவைத் நாடுகளில் உள்ள 1,90,000 பேர் வேலையிழந்து, அகதிகளாகி, நிவாரணச் செலவு என்று சுமை ஏறும்.

இதே போன்ற நிலைக்கு பல ஏழை நாடுகள் தள்ளப்படுவதோடு, இந்தியாவைப் போலவே பாகிஸ்தான், வங்கதேசம், இலங்கை, எகிப்து ஆகிய நாடுகள் அகதிகள் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டி இருக்கின்றன. வளைகுடா நெருக்கடியில்





படிப்பகம்

www.padippakam.com

இராணுவ ரீதியில் நேரடியாகத் தலையிடும் அரபுநாடுகளும், பாகிஸ்தானும் மேலும் சுமை தாங்க வேண்டியுள்ளது. இதைக் காரணங்காட்டி பாகிஸ்தான் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும்; இந்தியாவும் கூடவே போட்டி போட்டு மேலும் பல ஆயிரம் கோடி இராணுவத்துக்காக கொட்டும்.

ஆனால் என்ன விலை கொடுத்தாலும் சரி, ஈராக்கை ஒடுக்கியே தீருவோம் என்று கொக்கரிக்கிறது அமெரிக்கா. மேலைநாடுகளைப் பொருத்தவரை ஒரு சொட்டு ஈராக், குவைத் எண்ணெய் பெறாமலேயே இன்னும் இரண்டு ஆண்டுகளுக்குத் தாக்குப் பிடிக்குமளவு சேகரித்து வைத்திருக்கின்றன. இராணுவச் செலவைக் கூட சில மேற்கு நாடுகளும் கொழுத்த அரபுசேக்குகள் - அமீரகளும் பகிர்ந்து கொள்ளப் போகின்றனர்.




இருந்தபோதும் இப்போதைய வளைகுடா நெருக்கடி நீடிப்பதானாலும் சரி; யுத்தம் மூண்டாலும் சரி. மேலும் அதை முற்றவே செய்யும். ஈராக்கின் சர்வாதிகாரி சதாம் உசைன் தோற்றாலும் சரி, வென்றாலும் சரி உலக நாடுகளின் பொருளாதாரம் மீண்டும் ஒரு நிலைகுலைவைச் சந்திக்க வேண்டியுள்ளது.

உலக மேலாதிக்க யுத்த வெறியனான அமெரிக்கா மற்றும் பிராந்திய ஆதிக்க யுத்த வெறியனான ஈராக் ஆகிய இரண்டு தரப்புமே இப்போதைய வளைகுடா நெருக்கடியினால் அதிகபட்சம் ஆதாயம் அடைய முயலுகின்றன. அதிலே இரண்டு தரப்புமே வெற்றி பெற்று வருவதாக எண்ணுகின்றன.

வளைகுடா நெருக்கடியில் அமெரிக்கா தோற்றுப் போகுமேயானால் கடந்த 45 ஆண்டுகாலப் பனிப்போரில் அது ஈட்டிய வெற்றியையும், உலகத் தலைமைப் போலீசுக்காரன் என்கிற அதன் மேலாதிக்கத் தகுதியையும் அது பெரிதும் பாதிக்கும். ஈராக் தோற்றுப் போகுமேயானால், அது பேரழிவையும் வீழ்ச்சியையும் சந்திப்பதோடு அதன் இராணுவ சர்வாதிகாரி சதாம் உசேன் அழிந்தே போவார். எனவேதான் இரண்டு தரப்புமே இவ்வளவு மூர்க்கமான மோதலுக்கு நிற்கின்றன.

ஈராக்கின் பெட்ரோலிய எண்ணெயை குவைத் திருடியது; குவைத்தின் எல்லைப்புற எண்ணெய் வயல் பிராந்தியத்தின் மீது ஈராக் உரிமை பாராட்டுவது; ஆகிய காரணங்களைத்தான் முதலில் கூறி குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தது. ஆனால் அதன் நோக்கமே வேறுதான்! 8 ஆண்டு ஈரானுடனான போரில் கோடி ரூபாய் கடனாளியான ஈராக், குவைத்துக்கு மட்டும் பல கோடி ரூபாய் கடன்பட்டுள்ளது. அந்தக் கடனுக்கு நாமம் சாத்துவதோடு குவைத்தின் அளவற்ற செல்வத்தையும், எண்ணெய் வயல்களையும் கைப்பற்றத் திட்டமிட்டது. பாரசீக வளைகுடாவில் உள்ள இரு தீவுகளைப் பிடிப்பது; ஈராக்கின் ஒரே துறைமுகத்துக்குள்ள வசதிகளைப் பெருக்கும்; அதோடு வளைகுடா நாடுகள் மீது பிராந்திய மேலாதிக்கம் வகிக்க முடியும்; அரபுநாடுகளின் தலைவராக - இன்னொரு நாசராக முடியும் என்று கனவு கண்டார், சதாம் உசைன்.

ஆனால் சதாம் உசைனின் கணக்கு சற்றுப் பிசகிப் போயுள்ளது. தனது மேலாதிக்கம் சவாலுக்குள்ளானதும் அமெரிக்க மேலாதிக்க வல்லரசு ஆத்திரத்துடன் பாய்ந்தது. வளைகுடா பிராந்தியத்திலுள்ள தனது நீண்டகால விசுவாச, அடிவருடியான சௌதி அராபியாவை ஈராக் ஆக்கிரமிக்கும் எனப் பீதியூட்டி தனது அதிநவீன ஆயுத, அதிரடிப் படையைக் குவிக்கத் துவங்கிவிட்டது. எகிப்தின் 12000 கோடி ரூபாய் கடனை ரத்து செய்தும், ஏராளமான பணமும் ஆயுதங்களும் தருவதாக மொராக்கோ, பாகிஸ்தானை விலைபேசியும், நிர்கதியாயுள்ள சிரியாவை மிரட்டியும் ஓமன், ஐக்கிய அரபு அமீர் நாடுகள், யேமன் ஆகிய வளைகுடா நாடுகளிடம் பீதியூட்டியும் தன்பக்கம் திரட்டிக் கொண்டது.

மத்திய கிழக்கிலுள்ள அரபுநாடுகளிலேயே மிகவும் நம்பகமான அடிவருடியாக ஈராக்கை கருதிவந்தது, ருசிய மேலாதிக்க வல்லரசு. இன்னும் அங்கே ருசிய இராணுவ ஆலோசகர்கள் உள்ளனர். அமெரிக்காவுடனான உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இருந்து இப்போது பின்வாங்கியுள்ளது ருசியா. ஆகவே ருசியா உட்பட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஏகமனதான தீர்மானமாக குவைத்தில் இருந்து ஈராக் வெளியேறும் வரை பொருளாதார முற்றுகை - தடை விதிப்பதென்று தீர்மானம் நிறைவேற்றச் செய்வதில் அமெரிக்கா வெற்றி பெற்றுவிட்டது. பிரான்சு, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா போன்ற முதலாளித்துவ நாடுகளின் படைகளோடு ஈராக்கை முற்றுகையிட்டது.

ஆனால் யுத்தம் என்ற சூதாட்டத்தில் துணிந்து விளையாடுவதற்கான துருப்புச் சீட்டுக்கள் ஈராக்கிடம் இன்னமும் இருக்கின்றன. ஜோர்டான், பாலஸ்தீன விடுதலை அமைப்பு, லிபியா, சூடான், துனிசியா போன்றவைகளின் ஆதரவைப் பெறுவதில் ஈராக் வெற்றிபெற்றது. எட்டாண்டுப் போர் நடத்திய ஈரானிடமும் சமாதானம் செய்து கொண்டது. குவைத்தை ஈராக்கின் 19-வது மாநிலமாக இணைத்துக் கொண்டு, அது எப்போதும் ஈராக்கின் ஒரு பகுதிதான்; ஆங்கிலேயக் காலனியச் சூழ்ச்சியின் மூலமாகத்தான் தனி நாடானது; அரபுநாடுகள் அனைத்தும் ஒரு ஆட்சியில் ஒன்றிணைய வேண்டும்; இவ்வளவு காலமும் அரபுக்களைப் பிளவுபடுத்தி, சுரண்டி, ஒடுக்கி, அவமானப்படுத்திய அமெரிக்கா மற்றும் மேற்கு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் புனிதப் போர் நடத்தவேண்டும் — என்று அரபு, இஸ்லாமிய மதவெறியைத் தூண்டுவதில் ஈராக் வெற்றி பெற்றது.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள அரபுப்பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டும்; வளைகுடா பிராந்தியத்தில் இருந்து அந்நியப் படைகள் விலகிப் போகவேண்டும்; வளைகுடா பிரச்சினையை அரபுநாடுகளே - அந்நியத் தலையீடின்றித் தீர்த்துக் கொள்ளும்; ஈராக்குக்கு எதிரான பொருளாதார - முற்றுகை - தடையை நீக்கிவிட வேண்டும் என்கிற நிபந்தனைகளை ஈராக் விதித்தது. இந்நிபந்தனைகளை ஏற்க மறுத்த அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் படைகளையும் ஆயுதங்களையும் குவித்துக் கொண்டே போகின்றன. ஈராக் மீதான தாக்குதல் தொடுப்பதற்கான முகாந்திரமாக ஈராக் ஏதாவது ஆத்திரமூட்டும் தவறிழைக்க வேண்டுமெனக் காத்திருக்கின்றன.

இதற்குப் பலியாகாத ஈராக் எதிரிகளின் கைகளைக் கட்டிப் போடும் இன்னொரு நடவடிக்கையில் இறங்கியது. குவைத்திலும் ஈராக்கிலும் சிக்கியுள்ள பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மேலைநாடுகளின் சிவிலியன்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துக் கொண்டது. அமெரிக்கா தாக்கக்கூடிய முக்கிய இராணுவக் குறியிடங்களில் அவர்களைப் பிரித்துச் சிறை வைத்தது. அமெரிக்கா தாக்குமானால் "குவியல் குவியலாகப் பிணங்கள் விழும்" என எச்சரித்து வருகிறது.

இப்போது இரண்டு தரப்புக்குமிடையே உளவியல் மற்றும் அரசு தந்திரப் போர் உக்கிரமாக நடக்கிறது. பணயக் கைதிகளில் பெண்கள், சிறுவர், சிறுமிகள், நோயாளிகளை விட்டுவிட்டது; தெற்காசிய குடிமக்களை மறைமுகப் பணயக் கைதிகளாக வைத்தும், ஈரான் மற்றும் பிறநாடுகளுடன் பேரங்கள் நடத்தியும் பொருளாதார முற்றுகை - தடையை முறியடிக்க முயலுகிறது.

இதிலே ஓரளவு ஈராக் வெற்றியும் பெற்றுவிட்டது. மே.ஜெர்மனியும், ஜப்பானும் இராணுவத்தை அனுப்பவோ, நிதிதரவோ மறுத்துவிட்டது. பிரான்சு தனியே ஏர் பிடிக்கிறது. பிரிட்டனின் தாட்சர் மட்டுமே புஷ்ஷின் நம்பகமான கூட்டாளியாக நிற்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

மதுரை சட்டக்கல்லூரி

# மாணவர் மீது போலீசு தாக்குதல்!

போலீசுக்கு வயிறு மட்டும் நீளமல்ல! கையும் கூடத்தான்! இதற்கு சமீபத்திய உதாரணம் மதுரை சட்டக்கல்லூரி மாணவர்கள் போலீசாரால் தாக்கப்பட்ட சம்பவம்! வி.ஜெயக்குமார் என்ற சட்டக்கல்லூரி மாணவர் 2.9.90 அன்று ஜெய்ஹிந்த்புரம் நகரில் சைக்கிளில் சென்றார். அங்கு மேய்ந்து கொண்டிருந்த ஜெய்ஹிந்த்புரம் எஸ்.ஐ. முனியாண்டி, போலீசு அய்யாவு, பொன்னுசாமி கும்பல் அம்மாணவரை அநாகரிகமாய் "தாடி இங்கே வாடா" என்று நக்கல் செய்தது. "ஏன் இப்படி அநாகரிகமாக பேசுகிறீர்கள். நான் சட்டக்கல்லூரி மாணவன்" என்று அவர் கூறியதற்கு "சட்டக்கல்லூரி மாணவன் என்றால் பெரிய வெண்ணெயா" என்று போலீசு மேலும் தன் சாக்காடை வாயை திறந்து காட்டியது. அவரை அடித்து போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று சித்திரவதை செய்து மிரட்டி அனுப்பியது. அன்றே அவர் மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதை எதிர்த்து சட்டக்கல்லூரி மாணவர்கள் சாலைமறியல் செய்தனர். உதவிகமிஷனர் போலீசு கும்பலுடன் வந்து மாணவர்களிடம் குழைந்தார். "தலைவா" "தம்பி" என்று பல்லிளித்து தோற்றுப் போனார். உடனே தனது கோரப்பற்களை காட்டினார். "என்ன எதற்கெடுத்தாலும் மறியலுக்கு வந்து விடுகிறீர்கள். கலைந்து போகாவிட்டால் லத்தி சார்ஜ் செய்வேன்" என்று குதித்தார். மாணவர்கள் கோமாளியைக் கண்டது போல், சட்டை பண்ணாமல் போராட்டத்தில் உறுதியாக இருந்தனர். பிறகு இறங்கி வந்து "6-ம் தேதிக்குள் நடவடிக்கை எடுக்கிறேன்" என்றார். மாணவர் கலைந்து சென்றனர். 10-ம் தேதிவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாணவர்கள் இப்போது



சாகும்வரை உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கி விட்டனர். தற்போது, போலீசு கும்பல், ஓட்டுக் கட்சிகள் மூலம் தூதுவிட்டு மன்னிப்பு கேட்பதாக மாணவர்களின் காதைக் கடிக்கிறது.

இதே போலீசு, ஜெய்ஹிந்த்புரம், சுப்ரமணியபுரம், பகுதிகளில் இயங்கும் சமூக விரோத கோஷ்டிகளைக் கண்டு தொடை நடுங்குகிறது. அக்கும்பலால் இதுவரை 6 பேர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்தும் இருக்கின்றனர். டி.எஸ்.பி; இன்ஸ்பெக்டர் முன்னிலையிலேயே ஒருவரை குத்திவிட்டுப் போன கும்பலைக்கூட பிடிக்க திராணியற்று இருக்கிறது. போலீசு.

ஆனால், இந்த ரௌடித்தனங்களை அடக்குவது என்று பொதுமக்களை வேட்டையாடுவதில் தன் வீரத்தைக் காட்டுகிறது. பட்டறைகளில் வேலை செய்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள், கடைகளில் பொருட்களை வாங்கிக் கொண்டிருந்த பொதுமக்கள் என்று அனைவரையும் அடித்து நொறுக்கியது. சாதாரண மக்களை அல்ல; சட்டம் படித்த மாணவர்களையே போலீசு கடித்து குதறுகிறது! போலீசு தன்னை எதிர்ப்பவர்கள் யாரையும் பிரித்துப் பார்ப்பதில்லை. நாம்தான் பிரிந்திருக்கிறோம் என்பது தெரியவில்லையா?

— தகவல்: ம.க.இ.க. மதுரை.

---

கூட்டுச்சேரா' நாடுகள் ஈராக்குடன் ஊடலும் கூடலுமாக உறவு கொள்வதோடு, தகுந்த நட்டஈடும் கோருகின்றன.

இத்தனைக்கும் மேலாக, ஈராக்குடனான போரில் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் வெல்ல முடியுமா என்கிற கேள்வி பெரிதாக எழுந்துள்ளது. 2 லட்சம் துருப்புக்களோடு அதிநவீன விமானங்கள், ஏவுகணைகள், பீரங்கிகள், கவசவண்டிகளை அமெரிக்கா குவித்து வருகிறது. அவை இலக்குகளைத் தானே தேடி அழிக்கும் கம்ப்யூட்டர் கருவிகள், அணுசக்தி, விஷவாயு நிரம்பியவை. பாலைவனப் போருக்குச் சிறப்புப் பயிற்சி பெற்றவை.

என்னதான் இருந்தாலும், விமானப் போரில் மட்டுமே அமெரிக்கா ஆதிக்கம் உள்ளது. 10லட்சம் துருப்புக்களைக் கொண்ட ஈராக் எட்டாண்டு ஈரானுடனான போரில் பயிற்சி அனுபவம் பெற்றது; தாக்குதலை விடத் தற்காப்பு நிலையில் உள்ளது. அதோடு ருசியாவின் அதிநவீன விமான, டாங்கு, ஏவுகணை ஆயுதங்களைப் பெற்றுள்ளது. இவற்றைவிட எதிரிக்குப் பீதியூட்டும் இரசாயன ஆயுதமுனை கொண்ட ஏவுகணைகள் ஏராளமாக உள்ளன.

இன்னும் முக்கியமாக சில ஆயுதங்கள் ஈராக்கிடம் உள்ளன. இது ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான அரபு - இஸ்லாமியப் புனிதப்போர் என்கிற 'வெறி'யைத் தூண்டி, அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள அரபு நாடுகளுக்கு எதிராகவே திருப்புவதில் ஈராக் வெற்றி பெற்றுள்ளது. பல அரபு நாடுகளில் ஈராக் ஆதரவு பெரும் எழுச்சி ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. துரோகிகளான சேக்குகள், அமீர்கள், சர்வாதிகாரிகளைத் தூக்கியெறியக் கலகங்கள் நடத்தும்படி சதாம் அரபு மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். போரில் ஈராக்கை வென்றால் கூட அத்துரோகிகளின் ஆட்சி நீடிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேலைநாட்டு பணயக் கைதிகளைப் பிடித்து வைத்திருப்பதோடு அரபு பயங்கரவாத அமைப்புகளை வைத்து அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளைத் தாக்குவதற்கும் திட்டமிட்டுள்ளது. இப்போதைய இக்கட்டான நிலை நீடிப்பது கூட ஈராக்கை அதிகம் பாதிக்காது. ஈராக் ஏற்றுமதி அளவுக்கு உணவு தயாரிக்கும் நாடு ஆதலால், பொருளாதார முற்றுகை தடையும் கூட உடனடிப் பலனளிக்காது. பணயக் கைதிகள் விவகாரமும், எண்ணெய் நெருக்கடியும் அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகளை நெருக்குகின்றன.

அதேசமயம், இதுவரை அமெரிக்காவின் போர்த் தயாரிப்பை ஆதரித்துவரும் அமெரிக்க மக்களிடையே பின்வரும் கேள்விகள் எழுந்துள்ளன.

"சதாம் உசைன் கொடூரமான ஆக்கிரமிப்பாளானாக இருக்கலாம். ஆனால் 1980-ல் ஈரானை அவர் ஆக்கிரமித்தபோது அதைப் பற்றி யாருமே அக்கறைப்படவில்லை. உண்மையில் அமெரிக்காவும் வேறு பல நாடுகளும் அப்போரில் அவரை மறைமுகமாக ஆதரித்தன. குவைத் மீதான படையெடுப்பு அதைவிட மோசமானதா? எவ்வாறாயினும் இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலம் வரை ஈராக்கின் ஒரு பகுதியாகவே குவைத் இருந்தது. பனாமா நமது செல்வாக்கின்கீழ் இருப்பதைப் போலத்தான் குவைத் ஈராக்கின் கீழ் உள்ளது எனலாம். மேலும் குவைத்திகள் குறுக்கே கிணறு தோண்டி ஈராக்கின் எண்ணெயைத் திருடினார்கள். நாம் மீண்டும் அரியணையில் அமர்த்த விரும்பும் அமீரின் கரங்களோ, கறை படிந்தவை. சௌதிகள் மட்டும் என்ன? அவர்கள் கோமான்கள். வேற்றாரிடம் மணஉறவு வைத்துக் கொண்டதற்காக இளம்பெண்களைக் கொல்கிறார்கள். எங்கேயுமே இல்லாத ஜனநாயக விரோத அரசு சௌதி அரேபியாவில் உள்து. எண்ணெய் விலையை அடிமட்டத்துக்கு வீழ்த்துவதற்காக அமெரிக்கா ஏன் சாகவேண்டும்? நமது படைகள் அங்கிருப்பதை அராபியர்கள் ஏன் வெறுக்க வேண்டும். பணக்கார சேக்குகள், அமீர்கள், எண்ணெய் திருடிகளுக்காக இந்த உலகைப் பாதுகாப்பதற்கு இரத்தம் சிந்துவது எந்த வகையில் நியாயமானது?"

அமெரிக்க மக்களின் நியாயமான இக்கேள்விகளுக்கு அதன் ஆட்சியாளர்களிடமிருந்து பதில் இல்லை. யுத்தவெறி, மேலாதிக்க சுயநலக் கூச்சல்களே ஓங்கியிருக்கின்றன.

சொந்த மக்களையே இரசாயன - விஷவாயு ஆயுதங்களை வீசிக் கொன்று குவித்த, அண்டைநாடுகளை ஆக்கிரமிக்கும் யுத்தவெறிபிடித்த, சர்வாதிகாரி சதாம் உசைன் பணயக் கைதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு சவால் விடுகிறார். உலகின் எரிபொருள் மூலாதாரமான அரபு மணல்வெளியில் 'காலவெடிகுண்டு' வைக்கப்பட்டிருக்கிறது. அந்த இராட்சதக் குண்டு வெடிக்கும் போது உலகநாடுகள் அனைத்துமே அதிர்ச்சிக்குள்ளாகும். ஆனாலும் மாபெரும் வல்லரசுகள் உட்பட எவையுமே எதையும் செய்ய முடியாத நிலையில் கைகளைப் பிசைந்து கொண்டிருக்கின்றன. காரணம் சர்வாதிகாரி சதாம் உசைனை எதிர்த்து நிற்பதற்கான நியாயவுரிமை எதுவுமே இப்போதைய ஆட்சியாளர்கள் யாருக்குமே கிடையாது!

■ கரீம்



படிப்பகம்

 www.padippakam.com



# படர்ந்துவரும் ஆர்.எஸ்.எஸ். பார்த்தீனியம்

சென்னை திருவல்லிக்கேணி பகுதி இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு 200 ஆண்டு காலம் முன் உதாரணமாக விளங்குகிறது. இங்கு இதுவரை இருபிரிவினருக்கும் இடையே மத அடிப்படையில் சிறிய மோதல் கூட நடந்ததில்லை. ஒருவர் உணர்வை மற்றவர் மதித்து பழகினர். ஏன் கடந்த ஆகஸ்டு மாதம் கூட ஐஸ்ஹவுஸ் மசூதிக்கு எதிரேயுள்ள அம்மன் கோவிலில் பெரிய அளவில் திருவிழா ஒன்று நடந்தது. அப்பொழுது சிறிய சலசலப்புக்கூட எழுந்ததில்லை. ஆனால், செப்டம்பர் 2-ல் விநாயக சதுர்த்தியை முன்னிட்டு நடந்த பிள்ளையார் ஊர்வலம் ஐஸ்ஹவுஸ் மசூதியைக்கடக்கும் பொழுது மட்டும் கலவரம் நடந்ததற்கு காரணம் இல்லாமல் இல்லை!

கலவரத்திற்கு முற்றிலும் காரணமாகவும் அடிப்படையாகவும் இருந்தது இந்து மதவெறி ஆர்.எஸ்.எஸ் - பா.ஜ.க. கும்பலே! போலீசு இவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டு பாதுகாப்புக் கொடுத்தது; சிறுபான்மை முஸ்லீம்களை இந்து மதவெறிக் கும்பலுடன் சேர்ந்து கொண்டு காட்டுமிராண்டித் தனமாக தாக்கி இரண்டு உயிரைக் குடித்தது. ஆனால், அனைத்து பத்திரிக்கைகளும் உண்மைச் சம்பவங்களை மறைத்து போலீஸ் தரப்பு செய்திகளையும் இந்துமத வெறித் தலைவர்களது கருத்துக்களையும் வாந்தியெடுத்தன. இதற்கு இந்து - பார்ப்பன பத்திரிக்கைகள் முன்னின்று வழி காட்டின.

சில வார இதழ்களோ இந்து - முஸ்லீம் ஒற்றுமையாக இருந்த பகுதியிலே இச்சம்பவம் எப்படி நடந்தது என்றே தெரியவில்லையென அப்பாவி போல் புலம்பின. சில பத்திரிக்கைகள் போலீசு நடந்து கொண்டதில் குறைபாடு உள்ளதாக கடிந்து கொண்டன. சில இதழ்கள் இந்து வெறியர்கள் நடத்திய வெறியாட்டத்தில் சிலவற்றை எழுதி கலவரத்திற்கு இவை எண்ணை ஊற்றியது போல் ஆகியது உண்மைதான் என 'நடுநிலை' வகித்தன. சாராம்சத்தில் அனைத்துப் பத்திரிக்கைகளும் இந்து-பார்ப்பன வெறியர்களுக்கு ஆதரவாக முஸ்லீம்களே கலவரத்திற்கு காரணம் என்று திரித்து எழுதின. 'பிள்ளையார் ஊர்வலம் ஐஸ்ஹவுஸ் மசூதியைக் கடக்கும் பொழுது கலவரத்தைத் தூண்ட திட்டமிட்டு மசூதியில் கூடியிருந்த கும்பல் ஊர்வலத்தினர் மீது செருப்பு வீசியதால் கலவரம் மூண்டது. பின்னர் போலீசார் தலையிட்டு அமைதிபடுத்தி ஊர்வலத்தை மேலும் செல்ல உதவினர். போலீசார் ஒரு சார்பாக நடந்து கொண்டதாக நினைத்துக் கொண்டு முஸ்லீம்கள் திரண்டு வந்து போலீசைத் தாக்கவே தவிர்க்க முடியாமல் போலீசு துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டியதாகி விட்டது' என்று புளுகின. ஆனால் உண்மையோ வேறு.

விநாயக சதுர்த்தியை முன்னிட்டு சென்னை திருவல்லிக்கேணி திருவேட்டீசுவரர் கோவிலில் இருந்து பிள்ளையார் சிலையை ஊர்வலமாக எடுத்துச் சென்று கடலில் கரைப்பது வழக்கம். விழாவை வருடந்தோறும் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் தலைமை தாங்கி நடத்தி வருகிறது. இம்முறை விழாவின் மூலம் மதவெறியைத் தூண்டி ஆதாயமடைய திட்டமிட்டு பல ரகசிய கூட்டங்களை நடத்தியது. ஊர்வலத்திற்கென்று வெளியூர்களிலிருந்து தனது ஆட்களைக் கொண்டு வந்து குவித்தது. முஸ்லீம் கடைகளில் பொருட்கள் வாங்கவேண்டாம் என்றும், முகமது நபி பிறந்தநாளை மத்திய அரசு விடுமுறையாக அறிவித்துள்ளதை ரத்து செய்யக் கோரியும், முஸ்லீம் மசூதிகளைக் காரணம் காட்டி ஊர்வலத்திற்கு தடைவிதிக்க முயற்சிக்காதே என்றும் பிரசுரம், சுவரொட்டி, பத்திரிக்கை மூலம் பிரச்சாரம் செய்து இந்துமத வெறியைத் தூண்டியது.



ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலின் திட்டத்தை உணர்ந்த மசூதி நிர்வாகத்தினர் ஒருவாரத்திற்கு முன்பே கமிஷனர், போலீசு அதிகாரிகள் மற்றும் முதலமைச்சருக்கு மனு அனுப்பி ஊர்வலத்தை வேறுபகுதியில் திருப்பிவிடக் கோரியிருந்தனர். போலீசு இதைப் புறக்கணித்து ஊர்வலம் மசூதி வழியே செல்வதற்கு அனுமதி வழங்கியது.

ஊர்வலம் ஐஸ்ஹவுஸ் மசூதியருகே வந்தடைந்ததும் திட்டமிட்டிருந்தபடி இந்து மத வெறிக் கும்பல் செயல்படத் தொடங்கியது. முஸ்லீம்களுக்கு எதிராக அவர்களது 'சுன்னத்' முதலான சடங்குகளை எல்லாம் சொல்லக் கூசாத வார்த்தைகளால் இழிவுபடுத்தி கோஷமெழுப்பினர். சுமார் அரை மணி நேரமாக பட்டாசுகள் வெடித்தும், வாத்தியங்கள் காட்டுக் கூச்சலுடன் வாசித்தும் அட்டகாசம் செய்தனர். மதியம் சுமார் 2.30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. அன்றைய தினம் தொழுகையை முடித்து அனைவரும் சென்று விட்டதால் ஒரு சிலரே மசூதியில் அந்நேரத்தில் இருந்தனர். இவர்களை ஊர்வலத்திலிருந்த மதவெறிக் கும்பல் கம்பு, கத்தியைக் காட்டி மிரட்டி தாக்கவும் செய்தது. கற்களால், கம்புகளால் மசூதியைத் தாக்கி மசூதியின் கலசத்தையும் உடைத்தனர்.

இதுவே முஸ்லீம்களின் ஆத்திரத்தை அதிகப்படுத்தி திருப்பித் தாக்குவதற்கு அடிகோலியது. கலவரத்தை தூண்டும்வண்ணம் இந்துமத வெறிக் கும்பல் செய்த அட்டகாசங்களை எல்லாம் வேடிக்கைப் பார்த்த போலீசு, கலவரம் மூண்டதும் முஸ்லீம்களைத் தாக்கி கைது செய்தது. இந்து வெறியர்களுக்கு பாதுகாப்புக் கொடுத்து ஊர்வலம் மேலும் செல்வதற்கு வழியமைத்துக் கொடுத்தது. ஒப்பிற்கு திருவல்லிக்கேணி பகுதி ஆர்.எஸ்.எஸ். செயலாளர் முரளி என்பவரையும் கைது செய்தது. இதைக் கண்டித்தும், முரளியை விடுவிக்கக் கோரியும் மதவெறியர்கள் ஊர்வலத்தை அப்படியே நிறுத்திவிட்டு சாலையின் குறுக்கே அமர்ந்து இரண்டரை மணி நேரமாக கூச்சல் போட்டனர். அப்பொழுதும் முஸ்லீம்களுக்கு எதிராகவே கோஷங்களை எழுப்பினர். இதையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த போலீசு இறுதியாக அவர்களது தலைவர்களையே அழைத்து வந்து சமாதானம் கூற வைத்தது. பின்னரே ஊர்வலம் கடற்கரையை நோக்கிச் சென்றது.

வழியிலேயே ஊர்வலத்திலிருந்து நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய கும்பல் ஒன்று பிரிந்து வந்து முஸ்லீம் கடைகளை எல்லாம் அடித்து நொறுக்கியது; கண்ணில் பட்டவர்களை எல்லாம் தாக்கியது. கடலில் பிள்ளையாரை கரைத்து விட்டுத் திரும்பியவர்களும் இத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டனர். இச்செய்தி முஸ்லீம் பகுதிக்குள்

படிப்பகம்

www.padippakam.com

பரவவே இளைஞர்கள் திரண்டு வந்து பாதுகாப்பிற்காக தாக்கத் தொடங்கினர். கலவரத்தில் போலீசு வேன் தீப்பிடித்து எரிந்ததைக் காரணமாக வைத்துக் கொண்டு போலீசு துப்பாக்கிச்சூடு நடத்தியது. துணை ராணுவப் படை காட்டுமிராண்டித் தனமாக அப்பாவி மக்களையும் சேர்ந்து தாக்கியது. பாதிக்கப்பட்டவர்களும் தாக்கப்பட்டவர்களும் முஸ்லீம்களே அதிகமானவர்கள். இரண்டு முஸ்லீம் இளைஞர்கள் உயிரிழந்தனர். ஒருவர் மருத்துவமனையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

ஒருபுறம் கலவரம் நடந்து கொண்டிருந்த பொழுதே மறுபுறம் உள்ளூர் சமூக விரோத ரெளடிக் கும்பலும் கிடைத்தது ஆதாயமென கடைகளில் புகுந்து சூறையாடியது. போலீசு, சமூக விரோதக் கும்பலை கைது செய்வதை விடுத்து முஸ்லீம் இளைஞர்களை கைது செய்து 'வேனி'ல் ஏற்றியது. சில இடங்களில் முஸ்லீம் மற்றும் இந்து இளைஞர்கள் தங்கள் பகுதிக்குள் மத வெறியர்கள் நுழையாவண்ணம் பாதுகாப்பிற்காக நின்றனர். இன்னும் சில பகுதிகளில் முஸ்லீம் வீடுகளுக்கு இந்துக்களும், இந்துக்கள் வீட்டிற்கு முஸ்லீம்களும் காவலாக நின்றனர். இவர்களையும் போலீசு கைது செய்தது. கலவரம் முடிந்த பின்னும் வீடுவீடாக வந்து அசிங்கமாக திட்டி அப்பாவி முஸ்லீம் இளைஞர்களை எல்லாம் அடித்து இழுத்துச் சென்றது.

இறந்தவர்களுக்கும் காயம் பட்டவர்களுக்கும் முதலமைச்சர் நிவாரண நிதி கிடைக்கும் என்று சோக வசனம் பேசினார் கருணாநிதி. கலவரத்தை தூண்டியவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பொதுவாக அறிவிப்பு கொடுத்தார். குறிப்பாக, முஸ்லீம்கள் மீதான போலீஸ் அராஜகத்தையும், அடக்குமுறையையும் கண்டு கொள்ளவேயில்லை. தி.மு.கவின் கூட்டாளிக் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் 'எம்மதமும் சம்மதம்' என கூச்சல் போட்டனவே ஒழிய கலவரத்திற்கு காரணமாக இருந்த இந்துமத வெறிக் கும்பலையும் உடந்தையாக இருந்த போலீசையும் சுட்டிக் காட்டவில்லை.

ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பலுக்கு உயிர் மூச்சே இந்துமத வெறிதான். வடக்கே ராமஜென்ம பூமி; கிருஷ்ணஜென்ம பூமி மற்றும் காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினையின் மூலமும் இந்துமதவெறியைத் தூண்டி செல்வாக்கு பெற்று விளங்குகிறது. பா.ஜ.க மத்திய பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசத்தில் தனித்தும் ராஜஸ்தான், குஜராத் மாநிலத்தில் ஜனதாதளக் கூட்டுடனும் ஆட்சியைப் பிடித்ததும் இந்த அடிப்படையிலேயே! வடக்கே பல இடங்களில் இந்துமத வெறியைத் தூண்டி முஸ்லீம்களையும் படுகொலை செய்த இக்கும்பல் அண்மை காலங்களாக தமிழகத்திலும் வெறியாட்டம் போட்டு வருகிறது. தமிழகத்தில் குறிப்பிடும்படி திண்டுக்கல், ஆம்பூர், நாகூர் கலவரங்களுக்கு காரணமாக இருந்து பல உயிர்களை குடித்ததும் இக்கும்பலே! இதைத் தொடர்ந்து தம் கைவரிசையை இன்று சென்னையிலும் அரங்கேற்றியுள்ளது. வினாயக சதுர்த்தி பிள்ளையார் ஊர்வலத்தை முன்னிட்டு சென்னையில் மட்டுமல்ல தமிழகத்தின் பல இடங்களிலும் ஒசூர், சேலம் ஆகிய இடங்களிலும் கலவரங்களை அரங்கேற்றியது. ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி கும்பல்.


போலீசின் வீரம்! அப்பாவிகள் மீது தாக்குதல்!

தென்னிந்தியாவில் கட்சியைப் பலப்படுத்தப் போகிறோம் என அறிவித்துக் கொண்டு கடந்த ஜூலை மாதம் இறுதி வாரத்தில் பா.ஜ.க. சென்னையில் தனது செயற்குழு கூட்டத்தை நடத்தியது. இச்செயற்குழுக் கூட்டத்தில் பண்டாரி தலைமையில் தெற்கே கட்சியைக் கட்டுவது எப்படி என ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி 'தற்காலிக அமைப்புக் குழு' ஒன்றை நியமித்தார்கள். ஏற்கனவே கல்கத்தாவில் நடந்த கூட்டத்திலும் இதுபோன்று குழு ஒன்றையும் நியமித்தனர். இத்தகைய குழுக்களின் ஆலோசனையின்படியே பல இயக்கங்களை நடத்தி மதவெறியைத் தூண்டி பா.ஜ.க. வளர்ந்து வருகிறது. இக்கும்பலின் இன்னொரு அமைப்பான விசுவ ஹிந்து பரிஷத், ராமஜென்மபூமி - பாபரி மசூதி விவகாரத்தின் மூலம் 'செங்கல் பூஜை, ஜலபூஜை, தீ மூட்டும் நிகழ்ச்சி' என பல இயக்கங்களை நடத்தி வடக்கே காலூன்றி வருகிறது. இவ்வமைப்பு தெற்கேயும் வளர்வதற்கு முயற்சித்து வருகிறது. இம்மாதம் 8-ம் தேதி வட ஆற்காட்டிலுள்ள குடியாத்தத்தில் 'துறவியர்கள் மடாதிபதிகள் மாநாடு' ஒன்றை நடத்தியுள்ளது. இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டான குடியாத்தம் பகுதியிலும் தனது விஷக் கொடுக்கை நுழைத்து மதவெறியை விதைத்து வருகிறது.

இப்படி திட்டமிட்ட ரீதியில் மதக்கலவரங்களை உருவாக்கி ஆதாயம் தேடி வளரத் துடிக்கும் இக்கும்பலை வேரோடு வேரடி மண்ணோடு பிடுங்கி எறிவதுதானே சரியானது?

## ஆர்.எஸ்.எஸ்.-இன் பேடித்தனம்!

சென்னை 'பாரீஸ்' பேருந்து நிலையத்தில் 14.9.90 அன்று மக்கள் கலை இலக்கிய கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் பேருந்தில் 'புதிய ஜனநாயகம்' பத்திரிக்கை விற்றனர். திருவல்லிக்கேணி மதக் கலவரத்திற்கு காரணமான இந்துமத வெறி அமைப்புகளை அம்பலப்படுத்தினர். அப்பொழுது அங்கிருந்த ஆர்.எஸ்.எஸ். விடலைகள் மூவர், தோழர்களை திட்டி மிரட்டினார்கள். இருந்தும் தொடர்ந்து பேருந்தில் தோழர்கள் பத்திரிக்கை விற்றனர். இவர்களை பின்தொடர்ந்து வந்து அவ்விடலைகள் தொல்லைக் கொடுத்தனர். ஒரு தோழர் தனியாக இருந்த பொழுது பேடிகள் கன்னத்தில் அறைந்துவிட்டு ஓடிப் போய்விட்டார்கள். பின்னர், தோழர்கள் இதை எடுத்துக்கூறி அம்பலப்படுத்தி பேசியதை பொதுமக்கள் கேட்டு மதவெறிக் கும்பலின் முகவிலாசத்தை தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டனர்.

சமீபத்தில் சென்னையில் பா.ஜ.க. செயற்குழு கூட்டம் நடத்தியபொழுதும் சரி, திருவல்லிக்கேணி மதக்கலவரம் நடந்த பொழுதும் சரி மதவெறிக் கும்பல்களை மற்ற அமைப்புகளைக் காட்டிலும் முன்கூட்டியே - உடனுக்குடன் - அம்பலப்படுத்தி பேருந்துகளில் ம.க.இ.க. சுவரொட்டி ஒட்டியது. மேலும் 'புதிய ஜனநாயகம்' இந்துமத வெறியர்களை ஒவ்வொரு நடப்புப் பிரச்சனைகள் மூலமும் இனங்காட்டி வருகிறது. இதைப் பொறுக்காத மதவெறியர்கள் பழிவாங்குவதாக நினைத்து இதுபோன்ற பேடித்தனமான செயல்களில் ஈடுபடுகிறார்கள். ஆனால் இறுதியில் தங்கள் மூஞ்சியிலேயே கரியைப் பூசிக் கொள்கிறார்கள்.

தகவல்: ம.க.இ.க. சென்னை.



படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் புதிய ஆதாரங்கள்! திட்டமிட்ட குழப்பங்கள்!

பீரங்கித் திருடன் பதவி இழந்து ஒரு ஆண்டாகி விட்டது. ஆனால் திருட்டைத் துப்புதுலக்கும் பணியே இன்னும் முடிந்தபாடில்லை. வி.பி.சிங் அரசால் முடக்கப்பட்ட சந்தேகத்திற்குரிய ஸ்விஸ் வங்கிக் கணக்குகளின் விவரங்களைப் பெறுவதற்காக ஸ்விஸ் நீதிமன்றத்தில் சி.பி.ஐ தாக்கல் செய்த மனு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

தரகுத் தொகையை சுருட்டியவர்களில் அமிதாப்பச்சனும் ஒருவர் என்று எழுதிய 'டேஜன்ஸ் நைடர்' என்ற பத்திரிக்கை மீது தொடர்ந்த மான நட்ட வழக்கில் அமிதாப் வெற்றி பெற்றுவிட்டார்; பம்பாயிலிருந்து வெளியாகும் 'இண்டிபெண்டெண்ட்' நாளேடு போபார்ஸ் தொடர்பாக வெளியிட்டுள்ள சில ஆவணங்களில் 1985-இல் போபார்ஸ் பீரங்கி பேரப் பேச்சு வார்த்தையில் அருண்நேருவும் கலந்து கொண்டிருக்கிறார் என்பது அம்பலமாகியுள்ளது.

மேற்கூறிய சமபவங்களைத் தொடர்ந்து போபார்ஸ் இடைத்தரகில் கணிசமான தொகையைச் சுருட்டிய இந்துஜாவும், அவரது நெருங்கிய நண்பரான ராம்ஜெத் மலானியும், 'இல்லஸ்டிரேடட் வீக்லி' ஆசிரியர் பிரீதிஷ் நந்தியும், முன்னாள் பத்திரிக்கையாசிரியரும் இந்நாள் காங்கிரஸ் பிரமுகருமான எம்.ஜே.அக்பரும், அமிதாப் பச்சனும் புதிய வேகத்துடன் வி.பி.சிங் அரசைத் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

☆ ☆ ☆

மிகுந்த பரபரப்புடன் பேசப்பட்டு, இடையில் பத்திரிக்கைகளின் முதல்பக்க அந்தஸ்தை இழந்துவிட்ட போபார்ஸ் ஊழல் குறித்த பழைய விவரங்கள் சிலவற்றை மட்டும் வாசகர்களுக்கு நினைவுபடுத்துகிறோம்.

போபார்ஸ் நிறுவனத்திற்கும் இந்திய அரசுக்கும் இடையிலான பீரங்கி பேரத்தில் விற்பனைத் தொகையில் 7 சதவீதம் கமிஷனாகத் தரப்பட்டிருக்கிறது என்றும் இந்தத் தொகையை போபார்ஸ் நிறுவனம் இந்திய அரசின் உயரதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் கொடுத்துள்ளது என்று ஸ்வீடன் வானொலி முதன்முதலில் இவ்விஷயத்தை வெளிக் கொணடு வந்தது. இச்செய்தி வெளியானவுடனேயே ராஜீவ் அரசு பலமாக இதை மறுத்தது. ஆயுத பேர ஒப்பந்தங்களில் இடைத் தரகர்கள் இருக்கக்கூடாது என்ற விதிகளை இந்திய அரசு கறாராகப் பின்பற்றி வருகிறது என்றும், போபார்ஸ் பேரத்தில் தரகுத்தொகை என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் மறுத்தது.

டெல்லியிலுள்ள 'அனட்ரானிக்ஸ்' என்ற நிறுவனமும் அதன் உரிமையாளர் வின் சத்தாவும் போபார்ஸ் நிறுவனத்தின் இந்தியத் தரகர்களாகச் செயல்பட்டிருப்பதற்கும், வின் சத்தாவிற்குத் தரகுத் தொகை கொடுக்கப் பட்டிருப்பதற்கான ஆதாரங்களும் வெளிவந்தன. அவை போலி ஆவணங்கள் என்று முதலில் மறுத்துப் பார்த்த ராஜீவ் கும்பல், பிறகு அடுக்கடுக்காக ஆதாரங்கள் வரத்தொடங்கியவுடனே புதிய வியாக்கியானங்கள் கொடுக்கத் தொடங்கியது.

பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ள ஆதாரங்களிலேயே கூட 'தரகுத்தொகை' என்று குறிப்பிடப்படவில்லை; அவை இடைத் தரகரின் சேவையை முடிப்பதற்காக போபார்ஸ் நிறுவனம் சத்தாவுக்குக் கொடுத்த தொகை என்றது ராஜீவ் அரசு. சேவையை முடிப்பதற்கு லட்சக்கணக்கில் கொட்டிக் கொடுப்பார்களா என்ற கேள்வி எழுந்தவுடன் ராணுவ தளவாடக் கொள்முதல் தொடர்பான தகவல்கள் கொடுப்பதற்காக போபார்ஸ் நிறுவனம் ஏன் கொடுத்திருக்கக்கூடாது என்று வெட்கங்கெட்ட முறையில் நியாயப்படுத்தினார் ராஜீவ்.

இனியும் சமாளிக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்ட பின் சங்கரானந்த் தலைமையில் கூட்டு பாராளுமன்றக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. 'கூட்டு' என்ற சொல்லுக்கு நியாயம் கற்பிக்க, அன்று காங்கிரசுக்கு வால்பிடித்துக் கொண்டிருந்த அ.தி.மு.க வின் சார்பில் ஆலடி அருணா எம்.பி. மட்டும் 'எதிர்'க்கட்சி உறுப்பினராக அதில் பங்கேற்றார். விசாரணைக்கு அழைக்கப்பட்ட போபார்ஸ் நிறுவன அதிகாரிகள் சங்கடத்திற்கு ஆளாகும்படி எதுவும் கேட்கக் கூடாது என்ற சங்கரானந்தின் வழிகாட்டுதலுடன் அந்த நாடகம் நடந்து முடிந்தது.

ஆதாரங்கள் அம்பலமாக அம்பலமாக ராஜீவ் கும்பல் உளறத் தொடங்கியது. கமிஷனே கொடுக்கப்படவில்லை என்பதிலிருந்து இந்தியர்கள் யாருக்கும் கொடுக்கப்படவில்லை என்று இறங்கி பின்னர் நானோ என் குடும்பத்தினரோ இதில் சம்பந்தப்படவில்லை என்று தற்காப்பில் இறங்கினார் ராஜீவ்.

மறுபுறம் சந்தேகப்படுவோர் மீது கிரிமினல் வழக்கு தொடுக்கப்படவில்லை. கிரிமினல் வழக்கு தொடரப்பட்டால்தான் ரகசிய ஸ்விஸ் வங்கிக் கணக்குகளை முடக்குமாறு ஸ்விஸ் அரசைக் கோர இயலும் என்று தெரிந்தும் வழக்கு எதுவும் தொடராமல் ஸ்விஸ் அரசு ஒத்துழைக்க மறுப்பதாகப் போக்கு காட்டியது ராஜீவ் அரசு. குற்றம் சாட்டப்பட்டிருந்த வின்சத்தா இந்தியாவிலிருந்து தப்பிச் செல்ல அனுமதித்தது. இறுதியாக 'இந்து' பத்திரிக்கை வெளியிட்ட ஆவணங்கள் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 100 பேரும் ராஜினாமா செய்து எதிர்ப்பைக் காட்டுவதற்கான வாய்ப்பாக அமைந்தன.

வி.பி.சிங் அரசு ஆட்சிக்கு வந்தவுடனே 14 இந்திய அதிகாரிகள், தரகர்கள் மற்றும் போபார்ஸ் நிர்வாகிகள் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்தது. சந்தேகத்திற்குரிய ஸ்விஸ் வங்கிக் கணக்குகளை அந்நாட்டு அரசின் ஒத்துழைப்புடன் முடக்கி

'இல்லஸ்டிரேடட் வீக்லி' ஆசிரியர் பிரிதீஷ் நந்தி; வி.பி.சிங் அரசை தாக்கும் எதிர்தரப்பு முகாம்!








படிப்பகம்

www.padippakam.com

யது. வின் சத்தாவின் கடவுச்சீட்டை (பாஸ்போர்ட்) முடக்கியது. மேலும் துப்பு துலக்குவதற்காக அதிகாரிகள் குழுவொன்று ஐரோப்பாவிலேயே முகாமடித்துள்ளது.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்குப் பிரதான காரணமான போபார்ஸ் விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பதன் மூலம் தனது 'நேர்மை'யை நிரூபிக்க முயல்கிறார் வி.பி.சிங். ஆனால் ராஜீவ் கும்பலோ தான் ஆட்சியிலிருந்த போது விசாரணை நடத்துவதாக நாடகமாடிக் கொண்டே "ஊழல் நடப்பதொன்றும் புதிதல்ல; எப்போதும் உள்ளதுதான்" என்றும் பேசி வந்தது: இன்றும் பேசி வருகிறது. இதன் மூலம் அனைத்து அரசியல் ஒழுக்கக் கேடுகளையும், ஊழல்களையும் நியாயப்படுத்த முனைகிறது. அரசியல் நல்லொழுக்கத்தின் தூதராக அவதரித்திருக்கும் வி.பி.சிங்கோ தன் தகுதியை நிரூபித்துக் கொள்வதில் குறியாக இருக்கிறார். ஆனால் அது அத்தனை எளிதல்ல.

தனது ஆதரவு கோஷ்டியைக் காப்பாற்றி, எதிரியை மட்டும் தண்டிக்க நினைக்கும் வி.பி.சிங்கின் கனவில் ராஜீவ் கும்பல் மண்ணள்ளிப் போட்டுவிட்டது. நேற்றைய தனது சகபாடிகளும், இன்றைய வி.பி.சிங் சகாக்களுமான அருண்நேரு போன்றோரை சந்திக்கு இழுக்கிறது. இதன் விளைவால் புதிய ரகசியங்கள் அம்பலமாகின்றன.

### லண்டன் வழக்கு என்ன?

போபர்ஸ் ஊழலை துப்புதுலக்கும் குழுவினர் ஸ்விஸ் வங்கியில் ஆறாவதாக ஒரு ரகசியக் கணக்கைக் கண்டுபிடித்திருப்பதாகவும் அந்தக் கணக்கு அமிதாப்பின் தம்பி அஜிதாப் பச்சனுடையது என்றும் ஆணித்தரமாகக் குற்றம் சாட்டியது 'டேஜன்ஸ் நைடர்' எனும் பத்திரிக்கை. தனது குற்றச்சாட்டுக்கு இந்திய புலனாய்வுக் குழுவுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவலளித்ததாகவும் கூறியது. ஆனால் இதை சி.பி.ஐ. உறுதிப்படுத்தவில்லை என்றும் எழுதியது.

இப்பத்திரிக்கையின் மீது அஜிதாப் வழக்கு தொடர்ந்தார். தனது குற்றச்சாட்டுக்கு உடனடி ஆதாரங்கள் எதையும் காட்ட முடியாததால் அமிதாப்பச்சனுக்கு ஒரு தொகையை மான நட்ட ஈடாகத் தருவதாக கோர்ட்டுக்கு வெளியே பேசி முடித்துக் கொண்டது அந்தப் பத்திரிக்கை. இந்த 'வெற்றி'யைக் காட்டி, தான் நிரபராதி என்றும், லண்டன் கோர்ட் ஒன்றில் இந்தியாவின் மானம் கப்பலேறி விட்டதாகவும் மாபெரும் தேசபக்தனைப் போல வசனம் பேசுகிறார் அமிதாப்பச்சன். நட்ட ஈடாகப் பெற்ற தொகையை - இது எவ்வளவு என்று யாருக்கும் தெரியாது. அறக்கட்டளை ஒன்றிற்கு அளித்துவிட்டார் அமிதாப். இந்தச் செய்திக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன பத்திரிக்கைகள்.

அஜிதாப் ஸ்விஸ் நாட்டில் வாங்கிய வீடு ஒன்றிற்கு பணம் கொடுத்தது வெளிநாட்டு நபர், வெளிநாட்டு வர்த்தக நிறுவனம். யார் கொடுத்தது என்ற விவரத்தை இன்றுவரை அஜிதாப் வெளிடவில்லை. ராஜீவ் அரசும் அதைக் கேட்கவில்லை. போபார்ஸ் விவகாரத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் தரகு முதலாளிகளான இந்துஜா குடும்பத்தின் அறக்கட்டளைக்கு தன் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை செலுத்தி வருகிறார் அமிதாப். அமிதாப்பின பல திரைப்படங்களுக்கு இந்துஜாக்கள் முதல் போட்டிருக்கின்றனர். இந்த வகையிலும் போபார்ஸ் திருடர்கள் பட்டியலில் அமிதாப்பின் பெயர் இடம் பெறுகிறது.

போபார்ஸ் ஆவணங்களை அம்பலப்படுத்திவரும் முன்னாள் இந்து நாளேட்டு நிருபர் சித்ரா சுப்பிரமணியத்தை சுவிட்சர்லாந்துக்குச் சென்று சந்தித்து, அடுத்து எந்த ரகசிய ஸ்விஸ் வங்கிக் கணக்கு விவகாரத்தை அவர் வெளியிடப் போகிறார் என்பதை விசாரித்துள்ளனர். அதுமட்டுமல்ல: "உண்மையான ஊழல் பேர்வழிகள் என் பெயரை வேண்டுமென்றே சம்பந்தப்படுத்தி போலி ஆவணம் ஒன்றை தயாரித்து வெளியிட்டால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?" என்று எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற பாணியில் பத்திரிக்கைகளில் உளறியிருக்கிறார் பச்சன்.

எனவே லண்டன் நீதிமன்றத் தீர்ப்பை வைத்து 'நான் நிரபராதி' என்று அமிதாப் போடும் கூச்சலும், அதற்கு வரிந்து கட்டிக் கொண்டு சில பத்திரிக்கைகள் தரும் விளம்பரமும் பிரச்சனையைத் திசை திருப்புவதற்கான நாடகங்களே. ராஜீவின் குடும்ப நண்பர் இந்துஜா குடும்பத்தின் தொழில் பங்குதாரர். போபார்ஸ் தரகர்கள் குடும்பத்திலும் உறுப்பினர்தான் - ஆனால் நிருபிக்கப்பட வேண்டும்.

### ஜெனிவா கோர்ட் தீர்ப்பு விவகாரம்!

முடக்கப்பட்ட 6 ஸ்விஸ் வங்கிக் கணக்குகளின் உண்மையான உரிமையாளர் யார், என்னென்ன தேதிகளில், யாரால், எவ்வளவு தொகை செலுத்தப்பட்டிருக்கிறது என்ற விவரங்கள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. இவற்றைக் கண்டுபிடிப்பதற்கு சி.பி.ஐ. ஸ்விஸ் போலீசின் மூலமாகத்தான் முயலவேண்டும். இதற்காக ஸ்விஸ் போலீசுக்கு சி.பி.ஐ கொடுக்கின்ற வேண்டுகோள் கடிதத்தின் (Letter Rogatory) அடிப்படையில் சம்பந்தப்பட்ட வங்கி அமைந்துள்ள மாநிலத்தின் நீதிமன்றத்தில் ஸ்விஸ் போலீசு மனுதாக்கல் செய்ய வேண்டும். வங்கி ஆவணங்களை கோர்ட் வசம் ஒப்படைக்கலாமென நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் அவை கோர்ட் வசம் ஒப்படைக்கப்பட்டு, அவற்றைப் பார்வையிடும் நீதிபதி அந்தக் கணக்கில் சந்தேகப்படும்படியாக கொடுக்கல் வாங்கல்கள் நடந்திருப்பதாகக் கருதும் பட்சத்தில் ஸ்விஸ் போலீசிடம் அதை ஒப்படைப்பார். பிறகு அது சி.பி.ஐ. யின் கைக்கு வந்து சேரும். இதற்கு ஆட்சேபம் தெரிவிப்பது, தடை வாங்குவது, உச்ச நீதிமன்றத்துக்கு முறையீடு செய்வது ஆகிய அனைத்து உரிமைகளும் சம்பந்தப்பட்ட 'பெயரில்லாத' நபருக்கு உண்டு.

முடக்கப்பட்ட 6 கணக்குகளில் ஒன்று சூரிச் மாநில எல்லைக்குள், மற்ற ஐந்து ஜெனிவா எல்லைக்குள்ளும் உள்ளன. சூரிச் உயர் நீதிமன்றம் ஆவணங்களை ஒப்படைக்க உத்தரவிட்டு விட்டது. ஆனால் மற்ற 5 கணக்குகளுக்காக ஜெனிவா நீதிமன்றத்தில் செய்த முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. 'மொழிபெயர்ப்பு சரியில்லை', 'புகைப்பட நகல் தெளிவாக இல்லை' என்பன போன்ற தொழில் நுட்ப மற்றும் நிர்வாகக் காரணங்களுக்காகவே இது தள்ளுபடி செய்யப்பட்டது.

ஆனால் ஜெனிவா கோர்ட் தள்ளுபடி செய்த உடனேயே இந்தியப் பத்திரிக்கைகளில் ஒரு பிரிவினர் 'துப்பறியும் முறை சரியில்லை: குற்றவாளிகளைத் தான் சி.பி.ஐ. தேடுகிறதா என்று சந்தேகமாக உள்ளது' என்று பலவிதமான சந்தேகங்களை எழுப்பத் தொடங்கி உள்ளனர். குற்றவாளியை விரைவாகக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்பதோ, அதற்கேற்ற வகையில் துரிதமாக இந்திய உளவுத்துறை செயல்படவில்லை என்பதோ இவர்களது நோக்கமல்ல; பிரச்சனையைத் திசை திருப்புவதும் குழப்புவதும்தான்.

இதற்கும் காரணம் இருக்கிறது. இந்திய உளவுத்துறை கடைசியாக முடக்கியுள்ள ஆறாவது ஸ்விஸ் வங்கிக் கணக்கு பற்றிய

இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் அருண்ஷோரி; போபார்ஸ் ஊழல் ஆதாரங்களை வெளிக்கொணர்ந்த சித்ரா சுப்பிரமணியம்! — புதிய பிளவு!







படிப்பகம்

www.padippakam.com

ஆவணங்களை ஜெனிவா நீதிமன்றத்தில் கோரியபோது கொடுக்க இயலாதென்று எதிர் வழக்காடியவர்களில் இந்துஜாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. வழக்கைத் திசை திருப்புவதும், இழுத்தடிப்பதும், ஆறப்போடுவதும் இந்தக் கும்பலுக்குச் சாதகமானது என்பதை சொல்லத் தேவையில்லை.

### வி.பி.சிங் அரசு நேர்மையாகத்தான் விசாரணை நடத்துகிறதா?

இந்துஜாவும், இந்துஜா ஆதரவு பத்திரிக்கையாளர்களும் பிரச்சினையை திசைதிருப்புகிறார்கள் என்றால் சி.பி.ஐ. பாரபட்சமற்ற முறையிலும் துரிதமாகவும் தான் விசாரணையை நடத்துகிறதா என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.

தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், வி.பி.சிங்கை மிரட்டவும் வி.பி.சிங்கிற்கு எதிராக ஒரு காயை நகர்த்தியிருக்கிறது இந்துஜா கும்பல். போபார்ஸ் பீரங்கி பேர பேச்சுவார்த்தையில் அருண்நேரு நேரடியாக ஈடுபட்டதற்கான ஆவணங்களை பம்பாயிலிருந்து வெளிவரும் 'இண்டிபெண்டென்ட்' நாளேடு வெளியிட்டுள்ளது. டெல்லியிலுள்ள ஸ்வீடன் தூதரகத்தின் உயரதிகாரியும், போபார்ஸ் பேரத்தில் நேரடியாக ஈடுபட்டவருமான ரால்ஃப் காஃபின் ஸ்வீடன் அரசுக்கு எழுதிய குறிப்புகளில் அருண்நேருவின் பெயர் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

இந்த பேரத்தில் தானும், ராஜீவும் பேச்சுவார்த்தை நடத்தியது பற்றிய விஷயம் எக்காரணம் கொண்டும் வெளிவரக் கூடாது என்றும் ஒப்பந்தத்தின் 'அரசியல் விவகாரங்கள்' பற்றி பேசி முடிவு செய்துவிட்டால் மற்றவற்றைப் பற்றிக் கவலையில்லை என்று அருண்நேரு கூறியதாகவும் அக்குறிப்புகளில் காஃபின் குறிப்பிடுகிறார். அதுமட்டுமல்ல: இந்திய அரசில் அருண்நேரு 'மிக முக்கியப் புள்ளி' என்றும் அந்தக் குறிப்பு குறிப்பிடுகிறது.

எரிசக்தி அமைச்சரான அருண்நேருவுக்கு இராணுவ அமைச்சகத்தில் என்ன வேலை? அவ்வாறு தலையிடுவது சகஜம் தான் என்றால் தானும் ராஜீவும் பேரத்தில் பேச்சுவார்த்தை நடத்தியது ரகசியமாக இருக்க வேண்டும் என்று எதற்காகச் சொல்ல வேண்டும்? ஒப்பந்தத்தின் 'அரசியல் விவகாரங்கள்' என்பவை என்ன? ஒப்பந்தம் தொடர்பான மற்ற ஆவணங்களையெல்லாம் ஸ்வீடன் அரசிடம் கோரிப் பெற்ற சி.பி.ஐ. இதைமட்டும் ஏன் இன்று வரை வாங்கவில்லை? தனக்கும் ஊழலுக்கும் சம்பந்தமில்லை என்றால் இந்த உண்மையை அருண்நேரு ஏற்கனவே பகிரங்கமாக்கி இருக்க வேண்டியதுதானே! என்று அடுக்கடுக்காய்க் கேள்விகள் எழுகின்றன.

அருண்நேரு கமிஷன் தொகையில் பங்கு பெற்றாரா இல்லையா என்ற பிரச்சனை ஒருபுறமிருக்கட்டும்; ஏன் இத்தனை நாள் வாய்மூடி மவுனியாக இருந்தார் என்பதுதான் முதல் கேள்வி. இத்தனை கேள்விகள் எழுப்பப்பட்ட போதும் இன்றுவரை அருண்நேரு இதுபற்றி வாய்திறக்கவில்லை. "கவனிக்கிறேன்" என்று ஒரு வார்த்தையில் பதில் அளித்திருக்கிறார் திருவாளர் 'பரிசுத்தம்' வி.பி.சிங். ஒருவேளை இவையெல்லாம் ஏன் போலி ஆவணங்களாக இருக்கக் கூடாது? என்று ராஜீவ் பாணியில் கேள்வி எழுப்புகின்றனர் சில ஜனதாதள. எம்.பிக்கள்.

ராஜீவ் கும்பலின் முக்கிய புள்ளியாக அருண்நேரு இருந்ததும், காங்கிரஸ் கட்சிக்கு நிதி திரட்டும் வேலையை அவர்தான் செய்தார் என்பதும் ஊரறிந்த ரகசியம். இருப்பினும், சி.பி.ஐ.யின் விசாரணைப் பட்டியலில் அருண்நேரு இன்னமும் வரவில்லை.

அன்றாடம் 10 கேள்விகள் கேட்டு ராஜீவை விரட்டிய ராமஜெத்மலானி, போபார்ஸ் விவகாரத்தில் தனது நெருங்கிய நண்பர் இந்துஜாவின் பெயரும் சம்பந்தப்பட்டவுடனேயே ஓரம் கட்டிவிட்டார். இந்துஜா அப்படி செய்யக் கூடியவரல்ல என்று பிளேட்டைத் திருப்ப ஆரம்பித்தார். இப்போது அருண்நேரு ராஜினாமா செய்ய வேண்டும் என்ற முதல் குரல் எழுப்புகிறார், ராம்ஜெத்மலானி.

தேவிலால் வி.பி.சிங் மோதலின் போது போபார்ஸ் விசாரணையை முதலிலிருந்து மீண்டும் தொடங்க வேண்டும் என்றும், போபார்ஸ் திருடர்களில் அருண்நேருவும் ஒருவர் என்றும் தேவிலால் குற்றம் சாட்டியது வாசகர்களுக்கு நினைவிருக்கும். தேவிலாலின் 'வழிகாட்டி'யான சந்திரசேகர் தான் இந்துஜாவின் நண்பன் என்று பகிரங்கமாக அறிவித்ததும் நினைவிருக்கலாம்.

போபார்ஸ் விவகாரத்தில் ராஜீவுக்கு எதிராக 'யுத்தம்' தொடுத்த இந்தியன் எக்ஸ்பிரஸ், அருண்நேரு விவகாரம் கிளம்பியவுடனே 'சித்ரா சுப்பிரமணியம்' அனுப்பிய தகவல்களை வெளியிட மறுக்கிறது. 'இல்லஸ்டிரேடட் வீக்லி' 'இண்டிபெண்டெண்ட்' போன்ற பத்திரிக்கைகளோ அருண்நேருவை அம்பலப்படுத்தும் முகாந்திரத்தில் 'யாரையும் கண்டுபிடிக்க முடியாது' என்று அவநம்பிக்கையைப் பரப்புகின்றன.

"அருண்நேரு கமிஷனில் பங்கு பெற்றார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை எனினும் போபார்ஸ் பிரதிநிதியுடன் 1985-ல் நடத்திய முதல் சுற்று பேச்சுவார்த்தையில் போபார்ஸ் தரகர்களாக செயல்பட்டுள்ள இந்துஜா, வின்சத்தா பற்றி அருண்நேரு பேசினாரா? பேச்சுவார்த்தைக்கு ராஜீவ் கொடுத்த ஆலோசனைகள் என்ன? ராஜீவிடமிருந்து உத்தரவு வராமல் அன்றைய ராணுவ அமைச்சர் நரசிம்மராவை ஓரங்கட்டிவிட்டு அருண்நேரு பேச வேண்டிய அவசியமில்லையே! இது குறித்து அருண்நேரு மட்டுமல்ல, ராஜீவும் விசாரிக்கப்பட வேண்டும் என்கிறார் 'இந்து' ராம்.

"தேசத்தின் பணத்தைத் திருடியவர்கள் யாராயிருந்தாலும் விடமாட்டோம்" என்று சவடால் அடித்த வி.பி.சிங் இப்போது மழுப்புகிறார். தனது கோஷ்டியைக் காப்பாற்றி எதிர்கோஷ்டியை மட்டும் அம்பலப்படுத்த வேண்டும் என்ற வி.பி.சிங்கின் முயற்சிக்கு கிடைத்திருக்கும் பதிலடி இது. ஊழல் பேர்வழிகள் கண்டுபிடிக்கப் படுவதோ, தண்டிக்கப் படுவதோ சமீப எதிர்காலத்தில் நடக்கப் போவதில்லை. இவர்களிடையேயான குடுமிப்பிடி சண்டையிலிருந்து தரகு முதலாளிகளுக்கும் பல்வேறு கட்சிகள் மற்றும் அதிகார வர்க்கத்திற்கும் இடையேயான கள்ளக் கூட்டுகள் பற்றிய விவரங்களும், சிலந்தி வலை போல ஒருவரோடொருவர் பின்னப் பட்டிருப்பதும் நிச்சயம் வெளிவரும். இவற்றின் பரிமாணம் எந்த அளவுக்கு வெளியாகிறதோ அந்த அளவிற்கு ஊழல் ஒழிப்பு என்பது இந்த அமைப்பு முறைக்குள் சாத்தியமில்லை என்ற உண்மை விளங்கும். புரட்சியின் அவசியம் புரியும்.

● அஜித்



அமிதாப் பச்சன், தம்பி அஜிதாப்பச்சன் குடும்ப வக்கீலுடன். போபார்ஸ் ஊழலில் நிரபராதியாம்!

படிப்பகம்

www.padippakam.com

# வேலைவாய்ப்பு:

# அடிப்படை உரிமையாக்க அடிப்படையே இல்லை!



தேசிய முன்னணி ஆட்சியாளர்களுக்கு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதல் அவாதி அக்கறை வந்துவிட்டது! ''வி.பி.சிங் அண்ணாச்சி, வாக்குறுதி என்னச்சி'' என்று அடுத்த தேர்தலில் மக்கள் வெறுத்து ஒதுக்கும் முன்னர் சில கண்துடைப்பு நடவடிக்கைகளை காட்டி, வாக்குறுகளை நிறைவேற்றிவிட்டதாக மாய்மாலம் செய்வது என்பது இன்றைய ஆட்சியாளர்களின் புதிய உத்தியாக உள்ளது.

ஏற்கனவே தமிழகத்தில் தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கருணாநிதி, ஆட்சிக்கு வந்த நூறு நாட்களிலேயே தமது தேர்தல் வாக்குறுதியில் 90 சதவீதத்தை நிறைவேற்றி விட்டதாக கணக்கு காட்டினார். இப்போது வி.பி.சிங் அரசும் அதே வழியில் விவசாயக் கடன் தள்ளுபடி, மண்டல் கமிசன் பரிந்துரைகளை அமுலாக்குவது, தொலைக் காட்சிக்கு தன்னாட்சி உரிமை முதலான தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி விட்டது.

அடுத்த கட்டமாக, வேலை வாய்ப்பை அடிப்படை உரிமையாக்கும் வாக்குறுதியை நிறைவேற்றப் போவதாகவும், அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் இதற்கான மசோதாவைக் கொண்டு வரப் போவதாகவும் தே.மு அரசு கூறுகிறது. வேலை வாய்ப்பு அடிப்படை உரிமையாக்கப்படும் என்றதும் அனைவருக்கும் அரசாங்கமே வேலை கொடுக்கும்; வேலை கொடுக்க முடியாத பட்சத்தில் நிவாரணத் தொகை கொடுக்கும்; அல்லது சுய வேலை தொடங்க கடனுதவி செய்யும் என்று படித்தவர்களும் பாமரர்களும் ஆசைக் கனவுகளோடு எதிர்பார்க்கின்றனர்.

ஆனால் அதற்கான பொருளாதார அடிப்படை எதுவுமே இன்றைய ஆட்சியாளர்களிடம் கிடையாது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருவதாக வாக்களித்து ஏய்த்த எம்.ஜி.ஆரின் புஸ்வாணத் திட்டம் போன்றதுதான் இதுவும் என்பதை இம்மசோதா கொண்டு வருமுன்பே ஆட்சியாளர்கள் தமது செயல்பாடுகள் மூலம் நிரூபித்துக் காட்டிவிட்டார்கள்.

### அடிப்படை உரிமையாக்க அடிப்படை இல்லை!

வேலை வாய்ப்பை அடிப்படை உரிமையாக்குவது என்றால் என்ன? இதன்படி, ஒவ்வொரு தனிமனிதனும் நம் நாட்டில் வேலை கோருவது அரசியல் சாசனப்படி அடிப்படி உரிமையாக்கப்படும். அதாவது ஒவ்வொரு குடிமகனுக்கும் வேலை வாய்ப்பை வழங்கவும், வேலை வாய்ப்பு இல்லாத நிலையில் அதற்கான உதவித் தொகை வழங்கவும் அரசு நேரடியாகப் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறினால் பாதிக்கப்பட்ட குடிமகன் அரசுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியும். பேச்சுரிமை, எழுத்துரிமை போலவே வேலைவாய்ப்பையும் அடிப்படை உரிமையாக்குவதன் மூலம் மகத்தான சோசலிச நடவடிக்கையை மேற்கொள்வதாக ஆட்சியாளர்கள் மார்தட்டிக் கொள்கின்றனர். தே.மு.அரசு மட்டுமல்ல, அநேகமாக எல்லா ஓட்டுக் கட்சிகளுமே வேலை வாய்ப்பு பிரச்சினையை தங்களது தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளன.

எனவே ஏகோபித்த ஆதரவுடன், வேலைவாய்ப்பை அடிப்படை உரிமையாக்கும் மசோதா சட்டமாக நிறைவேற்றப் பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

ஆனால் சட்டத்தை நிறைவேற்றிய பிறகு அதை அமுல் படுத்துவதற்கு அறவே சாத்தியமில்லை. ஏனெனில் இந்த உரிமையைச் செயல்படுத்த வேண்டுமானால் மத்திய அரசு ஆண்டொன்றுக்கு 39 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும். 1988-ம் ஆண்டில் வேலை வாய்ப்பகங்களின் பதிவேடுகளில் காணப்பட்ட வேலையில்லாதவர்களின் எண்ணிக்கையான 3 கோடிப் பேரையும் குறைந்தபட்ச ஊதியக் கணக்கையும் அடிப்படையாகக் கொண்டு இந்த தொகையை முதலாளித்துவப் பொருளாதாரவாதிகள் கணக்கிட்டுள்ளனர்.

ஒரு மத்திய பட்ஜெட்டில் 48 சதவீதமும், மத்திய-மாநில அரசுகளின் மொத்த பட்ஜெட்டில் 31 சதவீதத்தையும் இற்காக ஒதுக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறினால் மொத்த தேசிய உற்பத்தில் 10 சதவீதத்தை இது விழுங்கும். வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்யாதவர்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் மொத்தச் செலவு 69,000 கோடி ரூபாயைத் தாண்டிவிடும் என்று பொருளாதாரவாதிகள் அச்சுறுத்துகின்றனர். இதைவிட திறமைக்கேற்ற



படிப்பகம்

www.padippakam.com

வேலையை அளிக்க வேண்டுமானால் முத லீட்டுத் தொகையை மேலும் பலமடங்கு உயர்த்த வேண்டியிருக்கும். தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற தே.மு.அரசு இத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமானால் ஏராளமாக பணத்தை அச்சிட வேண்டிய நிலை ஏற்படும். அல்லது எதிர்பாராத அளவுக்குப் புதிய வரிகளை விதிக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இவையெல்லாம் பணவீக்கத்தையும் பொருளாதார நெருக்கடியையும் மேலும் தீவிரப்படுத்தும். ஏற்கனவே கடன் புதைகுழிக்குள் சிக்கியுள்ள நிலையில் இது ஒரு தற்கொலை பாதையாகவே இருக்கும் என்கின்றனர்.

### தண்ணீரில் எழுதிவைத்த தேர்தல் வாக்குறுதி

தேசிய முன்னணி அரசுக்கு இது தெரியாததல்ல. இச் சட்டத்தைக் கொண்டு வரும் முன்பே அதை செல்லாக் காசாக்கும் முயற்சிகளில் ஏற்கனவே இறங்கிவிட்டனர். கடந்த ஜனவரியில் இம் மசோதாவைக் கொண்டு வருவதாக கூறிவிட்டு பின்னர் அதைக் கிடப்பில் போட்டனர். பின்னர், இதை நாடு முழுவதற்குமான திட்டமாக அல்லாமல், ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு மட்டும் வேலை வாய்ப்பை உருவாக்குவது என்பதாக வெட்டிச் சுருக்கினர். இப்போது, நிதி மந்திரி "வேலைவாய்ப்புரிமை கட்டுப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமையாக மட்டுமே இருக்க முடியும்" என்கிறார். தொழிலாளர் நல மந்திரியோ, "இன்றைய நிலையில் வேலை வாய்ப்புரிமை அளிப்பது அறவே சாத்தியமற்றது; இருப்பினும் நாம் மாற்று வழி காண வேண்டும்" என்று அடுத்த நாடாளுமன்ற கூட்டத் தொடரில் இம்மசோதாவை கொண்டுவரப் போவதாகக் கூறியுள்ளார்.

ஏட்டளவிலான உரிமையாக நீர்த்துப் போகச் செய்த பிறகாவது இச்சட்டம் நிறைவேற்றப்படுமா, இல்லையா என்பது ஒரு புறமிருக்கட்டும். இன்றைய நிலையில் இருக்கின்ற வேலையே நிலைக்குமா என்பதே கேள்விக்குறியாக உள்ளது. வேலைக்கான வாய்ப்புகள் மேலும் மேலும் சுருங்கிக் கொண்டே போகிறது. அதை விட வேலையற்றோரின் எண்ணிக்கை பூதாகரமாக உயர்ந்து கொண்டே போகிறது.

### பெருகி வரும் வேலையில்லாப் பட்டாளம்

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட (1985 - 90) மதிப்பீட்டின்படி 1985ல் ஒரு கோடிப் பேர் வேலையில்லாமல் இருந்தனர். இவர்களின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 2.56 சதவீத அளவில் உயரும் என்று கணக்கிடப்படுகிறது. இதன்படி நடப்பாண்டின் இறுதியில் வேலையற்றவர்களின் எண்ணிக்கை 4 கோடியே 90 லட்சமாகிவிடும். இது கூட நகர்ப்புறங்களில் வேலை வாய்ப்பு நிலையங்களில் பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ள கணக்குதான். எண்ணிக்கையற்ற கோடிக்கணக்கான இந்திய மக்கள் வாழும் கிராமங்கள் இந்த வரைபடத்துக்குள் வருவதே இல்லை. எப்படிப் போனாலும் குறைந்த பட்சம் 10 கோடிப் பேர் நாட்டில் வேலையின்றித் தவிக்கின்றனர் என்பதே உண்மை.

கடந்த பத்தாண்டுகளில் 1,50,000 சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. பல லட்சம் தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப் பட்டுள்ளனர்.

1981லிருந்து 1984க்குள் நாடு முழுவதும் 778 துணி ஆலைகள் மூடப்பட்டன. ஏறத்தாழ ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலையிழந்தனர்.

ஆண்டுக்கு 2500 பேருக்கு வேலை வாய்ப்பு தருவது அரசின் கட்டுப்பாட்டிலுள்ள வங்கித்துறை. தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் இருப்பதாகக் கூறி மூன்றாண்டுகளுக்கு புதிதாக வேலைவாய்ப்பளிக்க அரசே தடை விதித்துள்ளது.

25 பேருக்கு மேல் வேலை செய்யும் தொழில் நிறுவனங்கள் வேலை வாய்ப்பகங்களின் மூலம் தான் ஆளெடுக்க வேண்டும் என 1959லிருந்தே சட்டமிருக்கிறது. ஆனால் எந்த முதலாளியும் இதை மதிப்பதில்லை. 1981ல் 928 நிறுவனங்கள் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்தோரை வேலைக்கு எடுத்தன. 1985ல் அது 371 நிறுவனங்களாகி விட்டதாக அரசே ஒப்புக் கொள்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் போவதாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆட்சியாளர்கள் வாக்குறுதி அளித்தனர். ஆனால் முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களில் வேலை வாய்ப்பு விகிதம் 4.9% லிருந்து 0-ஆகச் சுருங்கிப் போனது. அடுத்த இரு ஐந்தாண்டுத் திட்டங்களில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சனையே கிடப்பில் போடப்பட்டது.

பிரச்சினையின் அளவையும் கடுமையையும் உணராமல் எல்லா வகையிலும் ஆளும் வர்க்கங்களுக்குச் சேவை செய்யும் வகையில் தாறுமாறான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்றியதன் விளைவாக வேலையில்லாத திண்டாட்டம் மேலும் பெருகத் தொடங்கியது. குறிப்பாக பாசிச இந்திராவும் அவரது வாரிசு ராஜீவும் வேலையின்மையை ஒழிப்பதாக சவடால் அடித்துக் கொண்டே அதை அதிகரிப்பதறகான திசையில் நாட்டை இழுத்துச் சென்றார்கள். அவர்களது கேடு கெட்ட ஆட்சியில் நவீனப்படுத்தல், தானியங்கி மற்றும் கம்ப்யூட்டர்களைப் புகுத்துதல் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் ஊழியர்களும் ஆண்டு தோறும் வேலையிழந்தனர். பாசிச இந்திரா ஆட்சியில் 1982ல் நடந்த பம்பாய் துணி ஆலை வேலை நிறுத்தப் போராட்டத்தில் 50000 தொழிலாளர்கள் வேலையிழந்தனர். பாசிச ராஜீவ் ஆட்சியில் 17,000 தொழிலாளர்களை தேசிய துணிக் கழக ஆலைகள் (என்.டி.சி) வெளியேற்றின.

### எந்த தொழிலுக்கு முன்னுரிமை தருவது?

தொழில் வளர்ச்சி அடைந்த மூன்றாம் உலக நாடுகளில் முன்வரிசையில் இந்தியா நிற்பதாக பெருமையடித்துக் கொண்டே உழைப்பவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் ஆலைகளை பாசிச இந்திராவும் ராஜீவும் திட்டமிட்டே புறக்கணித்தனர். அரசுத் துறை ஆதிக்கத்தில் மூலதன அழுத்தம் கொண்ட கனரகத் தொழில்களுக்கு நேரு - இந்திரா கும்பல் முக்கியத்துவத்துவம் அளித்தது. போலிக் கம்யூனிஸ்ட்டுகள் இதை சோசலிசம் என்று வரவேற்றனர்.

பாசிச ராஜீவ் கும்பலோ தென்கொரிய, சிங்கப்பூர் பாணியில் நுகர் பொருள் சந்தையைக் குறிவைத்து லேசுரக உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்தது. சுருக்கமாகச் சொன்னால் நேரு பரம்பரை ஆட்சி விவசாய உற்பத்தியை புறக்கணித்தது. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களை நம்பி வாழும் நாட்டின் 60 சதவீத கிராமப்புற மக்க



நிவாரணத் திட்டங்களால் நிரந்தர வேலை கிடைக்குமா?

படிப்பகம்

www.padippakam.com

ளின் வேலை வாய்ப்புக்கான அடித்தளமே நொறுக்கப்பட்டு விட்டது.

பாசிச காங்கிரசின் தேசிய மாற்றாக, விவசாயிகளின் நண்பனாக பகல் வேஷம் போடும் தேசிய முன்னணி அரசும் பாசிச ராஜீவ் கும்பலின் அடியொற்றியே செல்கிறது. ஏகாதிபத்தியங்களின், தரகு முதலாளிகளின் நலனுக்காக நுகர் பொருள் கலாச்சாரத்தை ஊக்குவித்து லேசுரக உற்பத்திக்கே முக்கியத்துவம் அளிக்கிறது. வி.பி.சிங் அரசின் புதிய பொருளாதாரக் கொள்கையும், தரகு முதலாளிகளுக்கு கஜானாவை காலி செய்து வழங்கியுள்ள சலுகைகளும் இதையே நிரூபிக்கின்றன. நுகர் பொருள் சந்தையை விரிவாக்கும் நோக்கத்தோடு அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வும் கடன் சலுகைகளையும் வாரியிறைக்கிறது. அதே சமயம் விவசாயத்துறையை பாசிச ராஜீவ் வழியிலேயே புறக்கணித்து வருகிறது.

இப்படி வேலை வாய்ப்புக்கான எல்லா அடிப்படைகளையும் தகர்த்தெறிந்து விட்டு வேலை வாய்ப்பை அடிப்படை உரிமையாக்கப் போவதாகக் கூறுவது அப்பட்டமான அயோக்கியத்தனம். வேலையற்ற இளைஞர்களுடன் ஆட்சியாளர்கள் நடத்தும் வக்கிரமான விளையாட்டு.

### கேழ்வரகில் நெய் வடியுமா?
### நிவாரண திட்டங்களால் வேலை பெருகுமா?

வேலைவாய்ப்பைப் பெருக்கப் போவதாக அவர்கள் கூறுவதெல்லாம் உழைப்பவருக்கு முக்கியத்துவம் அளிக்கும் புதிய ஆலைகளைத் துவக்குவதல்ல; ஏற்கனவே உள்ள வறட்சி நிவாரணத் திட்டங்களைக் கொண்டு வேலை வாய்ப்பை சற்றே அதிகரிப்பதைத்தான் அவ்வாறு குறிப்பிடுகிறார்கள். ஆனால் இத்திட்டங்கள் அனைத்தும் தோற்றுப் போய்விட்டன என்பதை திட்ட மதிப்பீட்டாளர்களே ஒப்புக் கொள்கின்றனர்.

"ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் (NREP), கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம் (RLEGP) போன்றவைகள் அதிக பலன் அளிக்காததையே இது காட்டுகிறது. 6 வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக ஐயாயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. இதர இரண்டு திட்டங்களுக்காக சுமார் மூவாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஏழாவது திட்ட காலத்தில் மொத்தம் 7,600 கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டுள்ளது. இவ்வளவு பெரும் தொகைகள் முதலீடு செய்யப்பட்ட பின்னரும் இத்திட்டங்களின் மூலம் கிடைத்த வேலை வாய்ப்பு மிகவும் குறைவானதே ஆகும். ஜவஹர்வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஒரு வருடத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு 20 நாட்களுக்கு மட்டுமே வேலை கொடுக்க முடிந்துள்ளது.

"அபிவிருத்தித் திட்டங்களைப் பரிசீலனை செய்து பார்த்தால் கிராமப்புற வேலையின்மைக்கான தீர்வு எதுவும் புலப்படவில்லை. நாற்பதாண்டுகளுக்குப் பின்னரும் கிராமப்புற வேலையின்மை முன்பிருந்த அளவுக்கே இருக்கிறது" என்று அரசு சார்புடன் வெளியிடப்படும் "திட்டம்" என்ற இதழே (மே 1 - 31) ஒப்புக் கொண்டுள்ளது. அதிகாரத் தரகர்களும், ஏற்கனவே வசதி படைத்தவர்களும் இத்திட்டத் தொகைகளை உறிஞ்சி விட்டனர். பின் தங்கிய நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையும், சாதியக் கட்டமைப்பும், மூலாதாரப் பற்றாக்குறையும் காரணமாக கிராமப்புறங்களில் புதிய வேலைக்கான வாய்ப்புகள் அறவே கிடையாது என்பதே எதார்த்த நிலைமையாக உள்ளது. இதனால் கொத்தடிமைத்தனமும், வறுமையும் பட்டினிச் சாவும் நிரந்தரமாகிப் போய் விட்டது.

வேலையின்மையைத் தீவிரப்படுத்தும் குளறுபடியான திட்டமிடுதலையும் தாறுமாறான நிர்வாக அமைப்பு முறையையும் வசதியாக மூடி மறைத்து விட்டு, மக்கள் தொகை பெருக்கம்தான் காரணம் என்று மக்கள் மீதே பழிபோட்டு ஆட்சியாளர்கள் தப்பித்துக் கொள்கின்றனர். அரசு எவ்வளவு பேருக்கு வேலை தர முடியும்? சுயவேலைக்கு இளைஞர்கள் முயற்சிக்க வேண்டும் என்று உபதேசிக்கவும் செய்கின்றனர்.

ஆனால் மக்கள் தொகை பெருக்கத்தை விட உணவு தானிய உற்பத்தி விகிதம் தொடர்ந்து அதிகரித்தே வந்துள்ளது. அதே போல, நவீன பெருவீத ஏகபோக முதலாளிகளுடன் சிறு தொழில்களோ, சுய வேலைத் தொழில்களோ போட்டியிட முடிவதில்லை. நீலப் புரட்சி என்ற பெயரில் மீன்வளப் பெருக்குத் திட்டத்தின் மூலம் விசைப்படகு முதலாளிகள் ஆதாயமடைய முடிந்ததே தவிர, கட்டுமர மீனவர்களின் பிழைப்புக்கே வழியில்லாத நிலைமைதான் ஏற்பட்டது.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் போவதாக போலியான வாக்குறுதிகளை அளித்துக் கொண்டே ஏகாதிபத்தியங்கள், தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், அதிகார வர்க்கத்தின் நலன்களுக்காகவே இதுவரையிலான எல்லா அரசுகளும் திட்டமிட்டு வருகின்றன. நமது நாட்டின் பொருளாதாரம் அவர்களின் இரும்புப் பிடியிலே சிக்கியிருக்கிறது. அரசியல் அதிகாரத்தை அவர்களிடமிருந்து உழைக்கும் மக்கள் மீட்டெடுக்காமல் வேலையின்மையை ஒழித்துவிட முடியாது. இந்த அதிகாரத்தைக் கொண்டுதான் அவர்களின் பொருளாதார ஆதிக்கத்தை வீழ்த்திட முடியும்; அனைவருக்கும் வேலை கிடைக்கும் வகையில் விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு முதல் முக்கியத்துவம், இலேசுரக, கனரகத் தொழில்களுக்கு இரண்டாவது, மூன்றாவது முக்கியத்துவம் என்கிற வரிசையில் முன்னுரிமை அளித்து நாட்டின் பொருளாதாரத்தை திட்டமிட்டு வளர்க்கவும் முடியும். அதுவரை வேலை வாய்ப்பை பெருக்குவதற்காக ஆட்சியாளர்கள் அளிக்கும் வாக்குறுதிகள் எல்லாம் வஞ்சக மோசடியாகவே இருக்கும். வேலை வாய்ப்பு அடிப்படை உரிமையாக்கப் பட்டாலும், உயிர் வாழவே உரிமையற்ற நிலையில் வேலையின்றித் தவிக்கும் கோடானுகோடி மக்களுக்கு அது ஏட்டுச் சுரைக்காயாகவே இருக்கும்.

● மனோகரன்

# காவிரியில் நீரில்லை!

காவிரிநீர்ப் பிரச்சினை: தேர்தல் காலத்தில் விவசாயிகளின் ஓட்டைப் பொறுக்குவதற்கு ஓட்டுக் கட்சிகளுக்கு சிறந்த ஆயுதம். ஆனால் அதுவே தமிழக விவசாயிகளின் உயிர்ப் பிரச்சினை. காவிரி காய்ந்து போனதால் விவசாயிகளின் அவலக்குரல்கள் ஓங்கி ஒலிக்கின்றன. துயரங்களும், கொடுமைகளும் ஓய்ந்தபாடில்லை.

"வருடாவருடம் ஆடிப்பெருக்கு விழாவிற்கு காவிரியிலே தண்ணீர் கரை புரண்டு ஓடும். அதில் இளைஞர்கள் உல்லாசமாக குதித்து விளையாடுவதும், தாலி பெருக்கிப் போட புதுமணத் தம்பதிகள் கூடுவதும், புண்ணிய நீராட மக்கள் வெள்ளம் அலை மோதுவதையும் பார்க்க முடியும். ஆனால்... இன்று இவையெல்லாம் பொய்யாய் - பழங்கனவாய் போய்விட்டது. இந்த ஆண்டு ஆடிப்பெருக்கிற்கும் தண்ணீர் வரவில்லை. வீட்டிலே குளித்து முடித்து விட்டு போய்தான் காவிரியிலே விழா கொண்டாடினோம்" என்று நீண்ட பெருமூச்சுடன் ச. நூகிறார் தஞ்சையைச் சேர்ந்த விவசாயி சின்னக்கண்ணு.

"மாசிக்கும் பங்குனிக்கும் மத்தளக் கொட்டு; சித்திரை பிறந்தால் குப்புறக் கொட்டு" என்பதற்கிணங்க அறுவடை காலங்களில் விவசாயிகள் கையில் பணம் இருக்கும். அப்பொழுது ஊர்த்திருவிழா, வீட்டுவிழாக்கள் என கொண்டாடி மகிழ்வர். பின்னர் பணம் தீர்ந்ததும் - சேமித்து வைத்த தானியங்களும் தீர்ந்ததும் பண்ட பாத்திரங்களை அடகு வைத்தும், ஐந்து வட்டிக்கு பணம் வாங்கியும் காலம் தள்ளுவர். இது கிட்டத்தட்ட 15 வருடங்களுக்கு முன்பு இருந்த நிலை. காவிரியில் தண்ணீர் ஒழுங்காக வராத நாளிலிருந்து அவர்களது வாழ்க்கையும் மாறிவிட்டது. எந்த விழாக்களையும் கொண்டாட முடிவதில்லை. தற்பொழுதெல்லாம் 'மாசிக்கும் பங்குனிக்குமே குப்புறக் கொட்டாகி விட்டது'.

நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளுமே காவிரியில் நீரில்லா விட்டாலும் ஆழ்குழாய் கிணறு அமைத்து மூன்று போகம் வரை பயிர் செய்கிறார்கள். இதனால் பக்கத்திலுள்ள நடுத்தர விவசாயிகள் கிணற்றில் நீரின்றி போய் விடுகிறது. இவர்களால் செலவு செய்து ஆழ்குழாய் கிணறு போட முடியவில்லை; மணிக்கு 8ரூ, 9ரூ என்று பணம் கொடுத்து நிலப்பிரபுக்களிடமும் பணக்கார விவசாயிகளிடமும் நீர் பெற்று பாசனம் செய்கிறார்கள். இதோ நடுத்தர விவசாயி இளங்கோ கூறுகிறார் கேளுங்கள்!

"இப்ப செலவு அதிகமா போச்சு. 6 மா நிலத்தை (198 சென்ட் நிலம்) ஒத்திக்கு வச்சி



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயி-களுக்கும் வாழ்வில்லை!

ருக்கேன். வெளிக்கடன் 20 ஆயிரம் ரூபாய் இருக்கு. போன வருஷம் 5000 ரூபாயிலே கிணறுவெட்டி எஞ்சின் வாங்கி வச்சேன். உளுந்து ஒரு சாகுபடிதான் செஞ்சிருக்கேன். அதுக்குள்ள பக்கத்து வயலிலுள்ள இரண்டு பேர் 200-லிருந்து 300 அடி வரை 'போர்' போட்டதால எங்க கிணத்தில தண்ணீர் வத்திடுச்சு. நாங்களும் 'போர்' போட்டால்தான் தண்ணீர் சப்ளையாகும். போர் போடலாமுன்னா கடன் அதிகமா இருப்பதாலே முடியலை. பேங்கிலும் கடன் வாங்க முடியாது. ஏன்னா ஏற்கனவே பேங்கில வாங்கின கடனை இன்னும் அடைக்கல'' என்கிறார்.

நடுத்தர விவசாயிகள் தங்கள் வாழ்க்கைக்கான உத்திரவாதத்திற்காக பெரிதும் போராடுகிறார்கள். ஓரடி எடுத்து வைத்தால் ஈரடி சறுக்குகிறது. ஆடு, மாடு, கோழி வளர்ப்பு மூலம் வரும் சிறிதளவு வருமானத்தைக் கொண்டே சிலர் காலத்தை தள்ளுகின்றனர். எனினும் சிறிது சிறிதாக கடனாளியாகி இறுதியில் நிலத்தையும் வீட்டையும் விற்று கடனடைக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

கூலி விவசாயிகள் தெற்கு மாவட்டங்களிலிருந்து அறுவடை காலங்களில் தஞ்சைக்கு வேலைக்கு சென்ற காலமெல்லாம் மாறி விட்டது. தஞ்சையிலுள்ள கூலி விவசாயிகளுக்கே இன்று வேலையில்லை ''ஆற்றில் தண்ணீர் வராததால எல்லாரும் குறுவை சாகுபடி செய்யறதை விட்டுட்டு கரும்பு, வாழைன்னு பயிரிட ஆரம்பிச்சிட்டாங்க. இதனால முன்ன இருந்த வேலையும் இப்ப இல்ல. கூலி வேலைக்கு எல்லா சாதிக்காரர்களும் (நடுத்தர விவசாயிகள்) வர ஆரம்பிச்சுட்டாங்க... ஒரு நாளைக்கு வேலை கிடைச்சா 7 நாளுக்கு வேலை கிடைப்பதில்லை. நாஙக மூணு வேளையும் சாப்பிட முடியறதில்லை. குழந்தைகள் பட்டினி கிடக்காம பாத்துக்கத்தான் முடியுது. நேத்திக்குக் கூட ஒரு பாத்திரத்தை அடகு வைத்துதான் சாப்பிட்டோம். இதுவரை நான் யாரிடமும் கடன் பட்டதில்லை. இருந்தால் சாப்பிடுவோம்; இல்லைன்னா சாவோம் என்றுதான் உள்ளேன்'' என்கிறார் வீரப்பன் என்கிற கூலி ஏழை விவசாயி.

'வந்தாரையெல்லாம் வாழ வைக்கும் அளவிற்கு செழித்த பூமியைக் கொண்ட தமிழகம்; சோறுடைத்த சோழநாடு' என்றெல்லாம் போற்றுதற்குரிய பூமியில் - மண்ணில்தான் ஒரு உழைக்கும் விவசாயி இன்று இவ்வாறு முடிவெடுக்கிறார். இது வெறும் முடிவோ வெற்றுப் பேச்சோ அல்ல. எத்தனையோ விவசாயிகள் பட்டினிச் சாவிற்கு பலியாகி இருக்கிறார்கள். வறுமையின் கொடுமையினால் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளைப் பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. காலம் காலமாக பரம்பரை பரம்பரையாக நிலப்பிரபுத்துவச் சுரண்டலுக்கு உள்ளான கூலி விவசாயிகள் இன்றும் அதிலிருந்து விடுதலை பெறவில்லை. நிலப்பிரபுக்களிடமும், பணக்கார விவசாயிகளிடமும் மேலும் மேலும் கடனாளியாகி எழுதப்படாத நிரந்தர அடிமையாகி கிடக்கிறார்கள்.



''வீட்டில் யாருக்கும் உடம்பு சரியில்லை அல்லது வேறு நல்லது கெட்டது நடந்தாக்க கடன் வாங்க வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. எங்களை நம்பி யாரும் கடன் கொடுப்பதில்லை. எப்போதும் வேலை செய்யற வயலிலே - வீட்டிலே வேலை செய்வதா சொல்லித்தான் பணம் கடன் வாங்குகிறோம். இந்த பணம் மொத்தமா கிடைக்காது. கொஞ்சம் கொஞ்சமாத்தான் தருவாங்க'' என்கிறார் இன்னொரு கூலி விவுசாயி பிரமையா.

சிலர் நூறு ரூபாய் தேவைக்காக கூலி வேலை செய்து அடுத்த வருடம் ஒரு மூட்டை நெல் தருவதாகக் கூறி நடுத்தர விவசாயிகளிடமும், வியாபாரிகளிடமும் கடன் வாங்குகிறார்கள். திடீர் தேவைக்கு இப்படி கடன் வாங்கி விட்டாலும் அன்றாட சாப்பாட்டிற்கு நித்தம் கடன் வாங்க முடியுமா? இதனால் படித்துக் கொண்டிருக்கும் தங்கள் பிள்ளைகளை நிறுத்திவிட்டு நகரங்களில் ஹோட்டல்கள், மளிகைக் கடை, துணிக்கடை முதலானவற்றில் 50ரூ. 100ரூ. மாதச் சம்பளத்திற்கு சேர்த்து விடுகிறார்கள். இறுதியில் வேறு வழியில்லாமல் விவசாயத்தையே விட்டு நகரத்தை நோக்கி நாடோடிகளாக வேலை தேடி குடும்ப சகிதமாக பா[illegible]மாகிறார்கள்.

நகரங்களில் கட்டிடவேலை, சர்வர் வேலை, சாலைபோடும் வேலை, துணியாலை, தீப்பெட்டி தொழிற்சாலை முதலானவற்றில் தினக் கூலிகளாக வேலை செய்கிறார்கள். இத்தகைய உதிரி வேலைகளும் கிடைக்காதவர்கள் கள்ளக்கடத்தல், போதைப்பொருள் விற்பனை, கள்ளச்சாராய விற்பனை, விபச்சாரம் என சீரழிவுகளை மேற்கொள்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல; நடுத்தர விவசாயிகளும் இதே நிலைக்கு இன்று தள்ளப்பட்டு விட்டார்கள். கூலி விவசாயியாக மாறிய இவர்கள் கௌரவம் கருதி தங்கள் ஊரிலேயே வேலைக்குச் செல்வதில்லை; பக்கத்து ஊர்களுக்குச் செல்கிறார்கள்.

நேர்மையாக உழைத்து வாழ்ந்த விவசாயிகளை நாடோடிகளாக, பஞ்சைப் பராரிகளாக ஏன் கடத்தல்காரர்களாக, திருடர்களாக, மோசடிக்காரர்களாக மாற்றிய சாதனையைத்தான் படைத்திருக்கிறார்கள் அனைத்து ஆட்சியாளர்களும். காவிரிநீர் பிரச்சினையை தீர்ப்பதாக 15 வருடங்களாக மாற்றி மாற்றி ஏய்த்து வருகிறார்கள். பேச்சுவார்த்தை டிரிப்யூனல் - நீதிமன்ற நடுவர் தீர்ப்பு என்று பலவாறாக நாடகமாடி வருகிறார்கள். டிரிப்யூனல் அமைத்து பிரச்சினையை தீர்த்து விட்டதாக அண்மையில் சுயதம்பட்டம் அடித்தார் கருணாநிதி. ஆனால், டிரிப்யூனல் தீர்ப்பிற்கு காலவரை கூட தீர்மானிக்கப்படாமல் உள்ளது.

காவிரியின் கடைமடைப் பகுதியான தமிழகத்திற்கு - தமிழக விவசாயிகளுக்கு காவிரி நீரில் கர்நாடகத்தைப் போலவே உரிமையிருக்கிறது. காவிரிநீரில தங்கள் உரிமையை நிலைநாட்டுவதற்காக விவசாயிகள் இனி புரட்சியாளர்கள் தலைமையில் அணிதிரண்டு போராடுவதைத் தவிர வேறு வழியில்லை.

— தகவல்: இருட்டு



படிப்பகம்

www.padippakam.com




● பார்ப்பன, சத்திரிய, வைசிய வழிவந்த சாதிகளே இரு பிரிவாக நின்று இட ஒதுக்கீட்டை ஆதரித்தும் எதிர்த்தும் நடத்தும் இந்தச் சண்டையில் எதையும் ஆதரிக்க முடியாது; இதனால் சமூக நீதியும் கிட்டாது என்று தலையங்கத்தில் குறிப்பிட்டு எழுதியிருந்தது. இவ்வாறு நாம் நடுநிலை வகிப்பது என்பது ஏற்கெனவே, மத்திய அரசு பணியில் மேலாதிக்கம் செலுத்திவரும் மேல்சாதியினர் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பது போலாகாதா? மேலும், ஒரு பிரச்னையில் மார்க்சிய - லெனினிய வாதிகள் நடுநிலைமை வகிக்க முடியுமா? (சாருமஜூம்தாரின் மேற்கோள்: 'நாம் யார் பக்கம்? யார் பக்கம் இல்லை? நாம் வறுமையிலுள்ள நிலமற்ற விவசாயிகள் பக்கம்தான். ஆனால் சிறு விவசாயிகளுக்கும் நிலமற்ற விவசாயிகளுக்கும் இடையிலான நலன்களில் மோதல்கள் உருவாகும்போது கட்டாயமாக நிலமற்ற விவசாயிகளின் பக்கம் நிற்க வேண்டும். சிறு விவசாயிகளுக்கும், பணக்கார விவசாயிகளுக்கும் இடையிலான நலன்களில் மோதல்கள் உருவாகும் போது நாம் சிறு விவசாயிகள் பக்கம் நிற்க வேண்டும்'). மஜூம்தாரின் கூற்றுப்படி பார்ப்பனர்களுக்கும் இடைச் சாதியினருக்கும் இடையே நடக்கும் சண்டையில் நாம் இடைச் சாதியினரை ஆதரிக்க வேண்டும் அல்லவா?

— விஜயக்குமார், பம்பாய்.

★ வாசகர் குறிப்பிடுவதைப் போல இட ஒதுக்கீட்டை ஆதரித்தும் எதிர்த்தும் நடக்கும் இந்தச் சண்டையில் நமது நிலைப்பாட்டை ''நடுநிலை'' என்று எடுத்துக் கொள்வது சரியாகாது. உலக நாடுகளைப் பங்கீடு - மறுபங்கீடு செய்வதற்காக ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலே நடக்கும் சண்டையில் - போர்களில் எந்தத் தரப்பையும் பாட்டாளி வர்க்கம் ஆதரிக்க முடியாது. ஏகாதிபத்திய அரசுகளுள் எது கூடுதலான நாடுகளை ஏற்கெனவே பிடித்துள்ளது, எது முதலில் தாக்குதலைத் தொடுக்கிறது என்றும் எது குறைவான நாடுகளை வைத்திருக்கிறது. எது தாக்குதலுக்கு உள்ளாயிருக்கிறது என்றும் பாகுபடுத்தி பிந்தியதை ஆதரிப்பது என்ற பேச்சுக்கே இடம் கிடையாது: அப்படி ஏகாதிபத்தியங்களுக்குள் போர் மூளும்போது அதை உள்நாட்டுப் போராக மாற்றி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முயல வேண்டும் என்கிறார் லெனின். இவ்வாறு நிலைப்பாடு எடுப்பது நடுநிலையாகுமா? இரண்டு தரப்புகளையும் நிராகரித்து. எதிர்த்து நின்று மூன்றாவது ஒரு நிலை எடுப்பதாகாதா?

இன்னொரு உதாரணம். இப்போது நடக்கும் வளைகுடா நாடுகளின் பிரச்சினையில் அமெரிக்கா மற்றும் பிற மேற்கு ஏகாதிபத்தியங்கள் ஒரு அணியாகவும் ஈராக் ஒரு அணியாகவும் நின்று மோதுகின்றன. ஒன்று உலக மேலாதிக்க ஆக்கிரமிப்பு சக்தி: இன்னொன்று பிராந்திய மேலாதிக்க - ஆக்கிரமிப்பு சக்தி. இதில் இடைநிலைச் சக்தி - குறைந்த அடாவடிக்காரன் என்று எதையாவது ஆதரிக்க முடியுமா? இல்லை என்றால் நடுநிலை வகிப்பதாகுமா?

இங்கேயே ஒரு உதாரணம். பஞ்சாபில் அரசு பயங்கரவாதம், சீக்கிய மதவெறி பயங்கரவாதம் இரண்டுக்கும் இடையிலான சண்டை நடக்கிறது. இரண்டினாலும் 'அப்பாவி' பஞ்சாப் மக்கள் பலர் கொல்லப்படுகின்றனர். அதே சமயம் இவை இரண்டில் ஏதாவது ஒன்றை ஆதரிக்கமுடியுமா? முடியாது: இரண்டுமே எதிர்த்து முறியடிக்க வேண்டிய சக்திகள் என்று நாம் தான் ஆரம்பத்திலிருந்தே எழுதி வருகிறோம். அரசு பயங்கரவாதம் தான் கொடியது: நவீன ஆயுதங்கள், அதிகார பலம் வாய்ந்தது: அதை எதிர்த்துக் கிளம்பிய மதவெறி பயங்கரவாதம் ஒப்பீட்டு ரீதியில் பலவீனமானது என்றும் பாதிக்கப்படும் மக்கள் சார்பாக அவர்கள் ஆதரவு பெற்றது என்றும், தேசிய இனப்பிரச்சினை, தேசிய இனவிடுதலை சக்தி என்றும் கூறிச் சில குழுக்கள் ஆதரவு தெரிவித்தன: இன்னும் கூட சில குழுக்கள் சீக்கிய மதவெறி பயங்கரவாதத்தை ஆதரிக்கின்றன. ஆனால் எது சரியானது என்று நிரூபிக்கப்பட்டது? ஆகவே இரண்டு ஆதிக்க சக்திகள் தமது நலன்களுக்காக மோதிக் கொள்ளும்போது ஏதாவது ஒன்றை ஆதரிப்பது சரியானதும் ஆகாது! அவற்றில் எதையும் ஆதரிக்கக் கூடாது என்பது நடுநிலையும் ஆகாது!

தற்போதைய மக்கள் விரோத. தேச விரோத. ஜனநாயக விரோத அரசு எந்திரம் முழுவதையும் ஒரு வன்முறைப் புரட்சியின் மூலம் அடித்து நொறுக்கித் தூக்கி எறிவதற்காகவே மார்க்சிய - லெனினியவாதிகளாகிய நாம் நாளும் பாடுபடுகிறோம். அரசு எந்திரம் என்பது ஆட்சியைக் கைப்பற்றுபவர்கள் தமக்குக் கிடைத்த வெற்றியின் சன்மானங்களாகக் கருதி அரசு பதவிகளைத் தம்மிடையே பகிர்ந்து கொள்கின்றனர்; நடுத்தர. மேட்டுக்குடி வர்க்கத்தினரின் மிகப்பெரிய பதவி வேட்டைக்கான தளமாக விளங்கும் அரசு எந்திரம் தனி ஒரு 'சாதி'யாக வளர்க்கப்பட்டு, ஊதிப் பெருக்கப்பட்டு புரட்சியின் தாக்குதலுக்கான தனிப்பெரும் இலக்காகிறது. என்கிறது அரசு பற்றிய மார்க்சியம். இந்தியா இதற்கு விதிவிலக்கல்ல.

இன்றைய இந்தியாவில் அரசு ஆதிக்கத்தின் தனிப்பெரும் 'சாதி'யாக பார்ப்பனர், முதலியார், பிள்ளைமார், மறவர், கஸ்யாத், ராஜபுத்திரர் போன்ற மேல்சாதியினர் இருக்கின்றனர். இதை நாம் மறுப்பதில்லை என்பது மட்டுமல்ல அரசு அதிகாரத்தில் பார்ப்பன ஆதிக்கம் நிலவுவதை நேரடியாகக் குறிப்பிட்டுக் குற்றஞ்சாட்டி ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வருவது — மார்க்சிய-லெனினிய குழுக்களுக்குள்ளேயே நாம் மட்டும் தான். பிறகுதான் மற்ற பிற குழுக்கள் இதைப் பின்பற்றின. அதோடு அரசு ஆதிக்கத்தில் இருப்பவர்களின் லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், அக்கிரமம் அட்டூழியங்களை சமரசமின்றி எதிர்த்து போராடி வருகிறோம். இவர்களின் இந்தக் குற்றங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். திருத்த முடியும் என்றா நாம் போராடி வருகிறோம்? இவர்கள் திருந்தவே மாட்டார்கள். திருத்தவே முடியாது; தூக்கி எறிய வேண்டியவர்கள்; அதாவது புரட்சியின், எதிரிகள் என்றுதானே போராடுகிறோம்.

ஆகவே, புரட்சியின் தனிப்பெரும் எதிரியாக. இலக்காக அரசு எந்திரத்தைக் கருதிப் போராடுகிறோம் என்றால் அதில் ஆதிக்கம் வகிக்கும் மேற்கண்ட மேல்சாதியினர் அனைவரையும் தூக்கி எறிவதற்காகத்தான் அவ்வாறு செய்கிறோம். அப்படி இருக்கும்போது அரசுப் பணியில் மேலாதிக்கம் செலுத்தி வரும் மேல்சாதியினர் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்த எப்படி நாம் அனுமதிப்பது போன்றதாகும்? அதே சமயம் பிற மேல்சாதி மேட்டுக் குடிக்கான இட ஒதுக்கீட்டிற்காகப் போராடுபவர்களின் கோரிக்கை என்ன? புரட்சியின். தனிப்பெரும் எதிரியாக. இலக்காகிய அரசு எந்திரத்தில் தனக்குரிய பங்கைக் கோருவது தானே! அதாவது லஞ்ச ஊழல். அதிகார முறை கேடுகள். அக்கிரம - அட்டூழியங்களில் ஈடுபட்டு நாட்டையும் மக்களையும் கொள்ளையிட்டு அடக்கி ஒடுக்கும் அரசு அதிகாரத்தில் பார்ப்பன - பனியா சாதிகள் மட்டும் ஆதிக்கம் வகிப்பதா? அவற்றிலே எங்களுக்கும் பங்கு வேண்டும் என்பதுதானே!

பிற மேல்சாதி. மேட்டுக்குடிக்கான இடஒதுக்கீட்டிறகாகப் போராடுபவர்கள் தமது கவனத்தை எங்கே குவிக்கிறார்கள் பாருங்கள். மந்திரிகள், உச்ச - உயர்நீதிமன்ற நீதிபதிகள். ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். ஐ.எஃப்.எஸ், பொதுத்துறைத் தொழில் நிறுவனங்களின் தலைவர்கள். அரசு முதல்நிலை அதிகாரிகள் — இந்தப் பதவிக்களுக்குத் தமது சாதியினரின் நியமனங்களிலேயே குறியாக இருக்கிறார்கள். அவர்கள் வாதிடுவது போல கல்வி மற்றும் வாழ்வுக்கான வேலை வாய்ப்பு தான் கோரிக்கை என்றால் அடிப்படைக் கல்வியை கட்டாயமாக்குவது, பல்கலைக் கழகக் கல்வியை இலவசமாக்குவது, வேலை தருவதை அடிப்படை உரிமையாக்குவது என்பதற்காக அல்லவா போராட வேண்டும்? அவ்வாறின்றி புரட்சியின் தனிப்பெரும் எதிரியாகிய அரசு எந்திரத்தில் பங்கு கோரிப் போராடுபவர்கள், அதை எதிர்த்துத் தூக்கி எறியப் போராடும் நம்மை பார்ப்பன - பனியா கைக்கூலிகள் என்று ஏசுகின்றனர்.

அடுத்து. இட ஒதுக்கீடு பற்றி நமது நிலைப்பாட்டைப் பல முறை எழுதியுள்ளோம். அது ஒரு சீர்திருத்தம். ஆளும் வர்க்கங்களின்



படிப்பகம்

www.padippakam.com

அடக்குமுறை, சுரண்டல் நீடிப்பதற்காக, அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, தனது சமூக அடித்தள ஆதரவைப் பெருக்கிக் கொள்வதற்காக செய்யப்படும் நில உச்சவரம்பு, சத்துணவு, தீண்டாமை - சதி ஒழிப்புச் சட்டங்கள் போன்று, இட ஒதுக்கீடு என்பதும் சீர்திருத்தம். ஆட்சியாளர்கள் கூறிக் கொள்வதைப் போல சமூக நீதியோ, சமூக புரட்சியோ, வகுப்புரிமையோ கிடையாது. இட ஒதுக்கீடு போன்ற முதலாளித்துவ சீர்திருத்தங்களுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல; அதே சமயம் இத்தகைய சீர்திருத்தங்களால் அரசியல், சமூக, பொருளாதார அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டுவிடும் என்கிற வாதத்தை, மாய் மாலத்தை ஈவிரக்கமின்றி எதிர்த்துப் போராடுகிறோம். அரசாங்கம் ஏதாவது ஒரு சீர்திருத்தத்தை எப்போதும் கொண்டு வரும் (ஆளும் வர்க்கங்கள் இதை மகிழ்வுடனே செய்வார்கள் என்கிறார் லெனின்). அவற்றில் முற்போக்கு அம்சங்களைத் தேடி வலியுறுத்துவதும், மேலும் கூடுதலான சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதும், இதையே வேலை முறையாகக் கொள்வதும் பாட்டாளிகள் வர்க்க அமைப்பை சீர்திருத்தக் கட்சியாக சீரழித்துவிடும். இரண்டு போலிக் கம்யூனிஸ்டு கட்சிகளும், முன்பு 'இடது' சந்தர்ப்பவாதம் பேசிக்கொண்டிருந்து விட்டு, இப்போது வலது திரிபுவாதச் சகதிக்குள் வீழ்ந்து விட்ட போலிப் புரட்சிக் குழுக்களும் இப்படித்தான் சீரழிந்து போயின.

இப்போது பார்ப்பன மற்றும் பிற மேல்சாதிகளுக்கு எதிரான இட ஒதுக்கீடு கோரும் சாதிகள் அனைத்தையும் இடைநிலைச் சாதிகளாகக் கருதி ஆதரிக்க முடியாது. மிகவும் பிற்பட்ட, பிற்பட்ட சாதிகள் என்று கூறப்படும் சாதிகளில் கூலி ஏழை விவசாயிகள் முதல் நிலப் பிரபுக்கள் வரை எல்லா வர்க்கத்தினரும் உள்ளனர். உதாரணமாக, தமிழகத்தில பெரும்பான்மையாக உள்ள கள்ளர், வன்னியர், வெள்ளாளக் கவுண்டர் சாதிகளைப் பாருங்கள். இவற்றிலே பெரும்பான்மையோர் கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகள்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதே சாதிகளின் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள்தான் தாழ்த்தப்பட்ட மக்களோடு தமது சாதிக்கூலி,

**இடஒதுக்கீட்டில் 'நடுநிலை' வகிப்பது மேல்சாதியினரை ஆதரிப்பதாகாதா?**

ஏழை விவசாயிகளையும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டுகின்றனர். இருந்த போதும் இவ்வாறு பொருளாதார ரீதியிலும் வர்க்க ரீதியிலும் பாகுபடுத்திப் பார்க்கக்கூடாது; பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதிகளில் உள்ள அனைவரும் சூத்திரர்களாக நடத்தப்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கல்வி ரீதியிலும் சமூக ரீதியிலும் பிற்படுத்தப்பட்டுள்ளனர் என்பதுதான் மண்டல் கமிஷன் மற்றும் அதன் ஆதரவு போராட்டக்காரர்களின் வாதம்.

இது உண்மையா? பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதிகளின் கூலி, ஏழை, நடுத்தர விவசாயிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்கள் ஆகிய நமது நாட்டின் பெரும்பான்மை உழைக்கும் மக்கள் கல்வி ரீதியிலும், சமூக ரீதியிலும் பின் தங்கி, அடக்கி ஒடுக்கப்பட்டிருப்பதால் ஆதாயம் அடைபவர்கள், அந்த நிலைமையைப் பாதுகாத்து வருபவர்கள் முற்பட்ட சாதியினர் மட்டுமா? பிற்பட்ட மிகவும் பிற்பட்ட சாதிகளின் நிலப்பிரபுக்கள் பணக்கார விவசாயிகள் இந்த நிலையைக் காத்து வருவதோடு ஆதாயம் அடைவதில்லையா? குறிப்பாக சமூக ரீதியிலான பின்தங்கிய நிலை என்றால் என்ன? கல்வி உரிமை, சொத்துரிமை, சமூக உரிமை மறுக்கப்பட்டு அடிமைகளாக உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவது தானே! முற்பட்ட சாதிகள் மட்டுமல்ல, அவர்களின் சார்பாகவும் நின்று இத்தகைய சமூக ஒடுக்கு முறையை மூர்க்கமாக, காட்டுமிராண்டித்தனமான வெறியோடு கட்டவிழ்த்து விடுபவர்கள் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதிகளின் நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகள்தான்.

இவ்வாறு சமூக ஒடுக்கு முறையில் முன்னணியில் நிற்பவர்களே சமூக ஒடுக்கு முறைக்குப் பலியானவர்களாகவும் சமூக ரீதியில் பிற்பட்டவர்களாகவும் கூறிக் கொண்டு இடஒதுக்கீடு உரிமை கோருகின்றனர். எதற்காக? சமூக ஆதிக்கத்தோடு, மேலும் மேலும் அரசியல் ஆதிக்கம் பெறுவதற்காகத்தான்! ஒரு உதாரணம் சொல்வோம். கிராமப்புறத்தில் நிலப்பிரபுவாகவோ, பணக்கார விவசாயியாகவோ இருப்பவன் உழைக்கும் மக்களை உயிரோடு கொளுத்துவான், வெட்டிப் போடுவான்; அதற்கு வலுக்கூட்டும் வகையிலே 'நம்ம ஆள் கலெக்டராக இருக்கார், சூப்பிரண்டெண்டா இருக்கார்' என்று சமூகப் பிற்பட்ட நிலைமையைக் காட்டி இடஒதுக்கீடு பெற்ற அதிகாரியின் பலத்தையும் சேர்த்துக் கொள்வான்.

இதையே வேறு மாதிரிக் கேட்கிறோம். சமூக ஒடுக்கு முறை, சமூக ரீதியில் பிற்பட்ட நிலையைக் காட்டி இடஒதுக்கீடு பெறும் சாதிகள், நபர்கள் இன்னொரு சாதியை இன்னொரு நபரை சமூக ஒடுக்குமுறை செய்ய மாட்டோம் என்று உத்திரவாதம் தர முடியுமா? பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதிகளின் உழைக்கும் மக்களே கூட வர்க்க ரீதியில் திரட்டப்படும் போது தான் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதி மக்களுடன் சேர்ந்து போராடுகிறார்கள். கூலி ஏழை விவசாயிகளே கூட சாதி உணர்வில், சாதிய ரீதியில் திரட்டப்படும் போது அவர்களுக்கு எதிராக இவர்களே சமூக ஒடுக்கு முறைச் சக்திகளாக நிற்கின்றனர்; சாதிய ரீதியில் திரட்டப்பட்டு பிற ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடன் சேர்ந்து நின்று போராடியதாக வரலாறோ, அனுபவமோ கிடையவே கிடையாது; அப்படியே இருந்தாலும் வேறு மதச் சிறுபான்மையினருக்கு எதிராகவே இணைந்து நின்றிருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்? தீண்டாமை போன்ற 'சூத்திர, சண்டாள' வர்ணங்களுக்குரிய சமூகக் கொடுமைகள் கூலி, ஏழை விவசாயிகளாக இருந்தாலும் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதிகள் அனைத்திற்கும் இருப்பதாகக் கூற முடியாது. எனவேதான் இவர்களுக்கும் மேல் சாதி என்கிற சாதி வெறியூட்டித் தேவையான போது தாழ்த்தப்பட்ட மற்றும் மதச் சிறுபான்மையினருக்கு எதிராக நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகளால் இவர்களைத் திரட்டிக் கொள்ள முடிகிறது. அதே மாதிரித்தான் இப்போதும் சாதிவெறியூட்டி மற்றபிற மேல் சாதிகளுக்குப் போட்டியாக அரசியல் அதிகாரத்தில் பங்குகோரி இடஒதுக்கீடு சண்டைக்கும் இவர்களைப் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சாதி நிலப்பிரபுக்களும், பணக்கார விவசாயிகளும் பிறமேட்டுக் குடியினரும் திரட்டிக் கொண்டுள்ளனர். எனவே தான் இடஒதுக்கீட்டை எதிர்த்தும் ஆதரித்தும் நடக்கும் இந்தச் சண்டையில் எதையும் ஆதரிக்க முடியாது என்கிறோம்.

● *''மண்டல் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்த மத்திய அரசு எடுத்த நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) வரவேற்றுள்ளது. இடஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சியை ஆதரித்துள்ளது'' என்று 28.8.90 தினமணியில் ஒரு செய்தி படித்தேன். இதற்கு மாறாக 16-31 ஆகஸ்ட் புதிய ஜனநாயகம் ஏட்டிலே எழுதியுள்ளீர்கள். எனக்கு ஒரே குழப்பமாக உள்ளது. எதை முழுமையாக நம்புவது என்று தெரியவில்லை. தெளிவாக விளக்கவும்.*

*— மீனாட்சிசுந்தரம், ஆவராணி.*

★ வாசகரின் குழப்பங்களுக்கு காரணம் இ.க.க. (மா-லெ) பற்றிய சில விவரங்கள் அறியாததுதான். 1969 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட புரட்சிகரக் கட்சியான இ.க.க. (மா-லெ) பின்னர் பின்பற்றிய 'இடது' தீவிரவாத, சந்தர்ப்பவாதத் தவறுகள் காரணமாக பின்னடைவுக்கும் பிளவுக்குமுள்ளானது. இப்போதும் சில குழுக்களாகவே இ.க.க. (மா-லெ) இயங்குகிறது. பழைய தவறுகளைக் களைந்து கொண்டு சரியான புரட்சிப் பாதையை வகுத்துக் கொள்வதற்கான முயற்சியில் சில குழுக்கள் இறங்கின. ஆனால் வேறு சில குழுக்கள் தனிநபர் அழித்தொழிப்பு முதற்கொண்டு 'இடது' சந்தர்ப்பவாத வழியில் வலிந்து நின்று தொடர்ந்து தவறிழைத்து, பின்னடைவு, தேக்க நிலை, நெருக்கடிக்குள் சிக்கின. பிறகு திடீரென்று இன்னொரு கடைகோடிக்குத் தாவி வலது சந்தர்ப்பவாத சகதிக்குள் வீழ்ந்தன. போலிக் கம்யூனிஸ்ட்டுகள், ஓடுகாலிகள், துரோகிகள், பிழைப்புவாதிகள், ஓட்டுப் பொறுக்கிகள், சாதிய - இனவாத சக்திகள் முதல் ஏகாதிபத்தியக் கைகூலிகளைக் கொண்ட தன்னார்வ - தொண்டு நிறுவனங்கள் வரை சகலருடனும் கூடிக் குலாவுவதை வழியாகப் பின்பற்றத் துவங்கினர். இரு அதிகாரபூர்வ போலிக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளைப் போலவே சீர்திருத்தங்கள் - சலுகைகளுக்காக வால்பிடித்துப் போவதே இந்தக் குழுக்களின் 'புரட்சி'ப் பணியாக உள்ளது. அப்படிப்பட்ட குழுக்களில் ஒன்றுதான் தினமணியில் செய்தி கொடுத்த இந்திய மக்கள் முன்னணியின் அரசியல் தலைமை. அதுவும், அதைப் போன்ற சில போலிப் புரட்சியாளர்கள் தம்மையும் இ.க.க. (மா-லெ) என்று கூறிக் கொள்ளுகின்றனர். அதன் முடிவுதான் இப்போது இடஒதுக்கீடு ஆதரவுப் போராட்டம் நடத்தும் மேல் சாதி-மேட்டுக் குடியை ஆதரிப்பது. இப்படிப்பட்ட குழுக்களுக்கு மாறாக மார்க்சிய - லெனினியப் பாதையில் மக்களைத் திரட்டுவதற்கான நிலைப்பாட்டைத்தான் புதிய ஜனநாயகம் முன் வைக்கிறது. ○



படிப்பகம்

www.padippakam.com



சத்துணவு ஊழியர்; ஏளனமான தாக்குதலின் இலக்கு!

# ஏப்பம் விடுவது ஊழியர்களா?

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழி எதற்கு பொருந்துகிறதோ இல்லையோ அரசின் சத்துணவு திட்டத்திற்கு அருமையாக பொருந்தும்! 'எம்.ஜி.ஆர். குழந்தைகளுக்கு வெறும் உணவுதான் போட்டார். கருணாநிதிதான் முட்டையோடு உண்மையான சத்துணவு போடுகிறார்' என்று மேடையில் சாராய நெடியின் நடுவே முழங்குகிறார்கள், கருணாநிதியின் தம்பிகள். 'கருணாநிதி போடும் சத்துணவை மகனும் சாப்பிடுகிறான்.அவன் அப்பாவும் சாப்பிடுகிறான். அம்மாவும் கூட அதிலிருந்து கொஞ்சம் வாங்கி சாப்பிடுகிறார்' என்று விருந்து போல் வர்ணிக்கிறார்கள்.

போதாக்குறைக்கு இன்னொரு அண்டபுளுகு வேறு! 'அரசு சத்துணவின் முழுமையான பலன் குழந்தைகளுக்கு போய் சேராமல் அதன் ஊழியர்களே பாதி விழுங்கி விடுகிறார்கள்' என்று கடுகளவு உண்மையுடன் மலையளவு பொய்யை கலந்து விடுகிறார்கள். இத்திட்டத்தைப் பற்றி ஏதும் அறியாத பாமர மக்களோ ஊட்டச் சத்து திட்டத்தில் அரசாங்கம் செய்யும் எந்த ஒரு மோசடியையும் அறிய வாய்ப்பில்லாமல் அதன் பொய் பிரச்சாரத்திற்கு பலியாகி விடுகின்றனர்.

அதில் நடக்கும் மோசடிகள், தில்லுமுல்லுகளுக்கு காரணம் யார்? கடந்த 8 ஆண்டுகளாக அத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களின் நலன்களில் அரசு நியாயமான அக்கறை காட்டியுள்ளதா? என்ற பல்வேறு கேள்விகளுக்கு பதில் தெரிந்தால் தான், குந்தைகளை காட்டி சத்துணவை சாப்பிடும் கூட்டத்தைப் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

○ ○ ○

சத்துணவு திட்டம் ஆண்டுக்கு 365 நாட்களும் செயல்பட வேண்டும். சத்துணவு சாப்பிடும் நடுநிலைப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் பள்ளி நாட்களில் மட்டுமே சத்துணவு! ஒரு லட்சத்திற்கும் அதிகமான சத்துணவு ஊழியர்கள் இதற்காக பணிபுரிகிறார்கள். குறைந்தது 3 பேர் ஒவ்வொரு மையத்திலும் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். சத்துணவு அமைப்பாளர், சமையல் செய்பவர், உதவியாளர் என்று பொறுப்புகளில் அமர்த்தப்படுகிறார்கள்.

இவர்களுக்கு சம்பளம் முறையே, ரூ.210, ரூ.100, ரூ.50 என்று வழங்குகிறது அரசு. ''பகுதிநேர நிரந்தர ஊழியர்கள்'' என்ற வரையறையில் மாவட்ட கலெக்டரின் அதிகாரத்தின் கீழ்வரும் சத்துணவு திட்ட துறை இவர்களை வேலைக்கு எடுக்கிறது. இதில் சத்துணவு அமைப்பாளரின் கல்வித் தகுதி பள்ளி இறுதி வகுப்பு கோரப்படுகிறது. சத்துணவு ஊழியர்களின் வேலை நேரத்தை ''பகுதி நேரம்'' என்று வரையறுத்து இருப்பதே மிகப் பெரும் அயோக்கியத் தனம். அவர்களின் வேலையை நியாயமாக பரிசீலிக்கும் எவரும் இதை ஒத்துக் கொள்வர்.

சராசரியாக 500 குழந்தைகளுக்கு ஒரு சத்துணவு மையம் என்ற ரீதியில் இப்போது இத்திட்டம் இயங்குகிறது. விதிவிலக்காக ஒரு சில மையங்களை தவிர 100க்கும் அதிகமான குழந்தைகள்தான் எல்லா மையங்களிலும் சாப்பிடுகின்றனர். மாதம் மொத்தமாக அரிசி, பருப்பு, எண்ணெய் ஆகியவைகள் தான் அரசு, தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் வழங்குகிறது. மற்ற தேவைகளான விறகு, காய்கறி, தண்ணீர் முதலியவைகளை ஊழியர்கள்தான் தினமும் வாங்க வேண்டும்.

கிராமப் புறங்களில் இருக்கும் ஊழியர்கள் அரிசி, பருப்பு எண்ணெயைக் கூட மாதம் ஒருமுறை தாலுக்கா நகரங்களுக்கு சென்றுதான் வாங்கிவர வேண்டும். ஒரு குழந்தைக்கு அரசு ஒதுக்கியிருக்கும் காய்கறி செலவு 13 பைசா! இதற்கு மிகாமல் மலிவாக விற்கும் காய்கறி வாங்குவது, விறகு வாங்குவது என்று காலை 8 மணிக்கு வேலை ஆரம்பித்தால்தான் காலை 10 மணிக்கு அடுப்பு மூட்ட முடியும்.

80% சத்துணவு மையங்களுக்கு சுத்தமாக தண்ணீர் வசதியே கிடையாது! குறைந்தது அரைகிலோ மீட்டரிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரம் வரை சென்று தண்ணீர் கொண்டு வந்துதான் சமைக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டம் பள்ளபட்டி கிராமத்தில் இயங்கும் கள்ளர் அரசு பள்ளி இன்னும் பல குக்கிராம பள்ளிகளை இதற்கு உதாரணம் காட்ட முடியும். தஞ்சாவூர் பர்மா காலனியில் இருக்கும் பள்ளி, நகராட்சி வண்டியில் வரும் தண்ணீரைதான் தினமும் நம்பிக் கொண்டிருக்கிறது. வராத நாட்களில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளே பக்கத்து வீடுகளுக்குச் சென்று தண்ணீர் 'பிச்சை' எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கிறார்கள்

அதன் பிறகு, ஒவ்வொரு குழந்தைக்கும் அரசு ஒதுக்கியுள்ள 100 கிராம் அரிசி (துர்நாற்றமடிக்கும் நான்காம் தர அரிசி) 15 கிராம் பருப்பு (அடிமாடு விலைக்கு விற்கும் மைசூர் பருப்பு), ஒரு கிராம் எண்ணெய், 3 பைசா மளிகை சாமான், 5 பைசா காய்கறி, 5 பைசா விறகு இவற்றை கொண்டுதான் ''சத்துணவு'' தயாரிக்க வேண்டும். 83-ஆம் வருடம் அரசு கொடுத்த அலுமினிய தட்டுதான் குழந்தைகளுக்கு பரிமாறுவதற்கு! டி.வியில் வரும் 'சாக்லெட்' குழந்தைகள் போல் சத்துணவை ருசித்து சாப்பிட முடியாது.

பல இடங்களில் சமையல் செய்வதற்கு சுகாதாரமான இடம் மருந்துக்கும் இல்லை. பன்றி, கழுதை வரை, பல்லி பாம்பு வரை சமையல் மறைவிடத்தில் வாசம் செய்யும். அவற்றின் நடுவேதான் சத்துணவு ஊழியர்கள் சுகாதாரமான உணவு சமைக்க வேண்டும்! சத்துணவு சாப்பிட்டு விட்டு குழந்தைகள் மயக்கம் அடைந்து விட்டால், முதல் இலக்கு சத்துணவு ஊழியர்கள் தான்! (அந்த சத்துணவை பழக்கமில்லாதவர் சாப்பிட்டாலே, மாரடைப்பு, அஜீரணம், மயக்கம், பேதி எல்லாம் வரும் என்பது வேறு விசயம்!)

கிராமப்புறங்களில் குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள் வசிக்கும் காலனிகளில் பெயர் கொடுத்தற்கும் அதிகமாக குழந்தைகள் வருகின்றன். திருப்பி அனுப்பாமல் அவர்கள் அனைவருக்கும் உணவை பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். தென் ஆற்காடு மாவட்டம் வந்தவாசி - சளுக்கை அரசு பள்ளியில் பதிவு செய்யப்பட்டிருப்பது 225 பெயர்கள். சாப்பிட வருவது 400 குழந்தைகள். அதே போல் தஞ்சாவூர் வேதாரண்யம் தாலுக்காவில் இடும்பாவனம் அரசு பள்ளியில் 211க்கு 670 குழந்தைகள் சாப்பிடுகின்றனர்.

குழந்தைகளை ஓரிடத்தில் உட்கார வைத்து சாப்பாடு போட்டோ அல்லது அவர்கள் வீட்டிலிருந்து எடுத்து வரும் தட்டில் சாப்பாடு போட்டோ வேலையை முடிப்



படிப்பகம்

www.padippakam.com

பதற்கு பகல் ஆகிவிடும். அதன் பிறகு பயன்படுத்திய சாமான்களை கழுவி - உப்பு, மிளகாய், அரிசி, பருப்பு, எண்ணெய், இருப்பு கணக்கு எழுதி - திரும்பவும் அவற்றை பாதுகாப்பாக பத்திரப்படுத்தி வைத்து விட்டு போவதற்குள் பகல் 3 மணி ஆகிவிடும்.

உணவுப் பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்க பெரும்பாலான இடங்களில் அரசு தனி அறைகள் ஏற்பாடு செய்து தரவில்லை. பள்ளியின் அறை மூலைகளில் வைக்கப்படும் உணவு பொருட்கள் காணாமல் போனால், சேதம் ஆனால், சத்துணவு ஊழியர்கள்தான் இரண்டு மடங்காக அபராதம் செலுத்த வேண்டும். கைக் குழந்தைகளை பாதுகாத்து சத்துருண்டை தயாரித்து தரும் ஊழியர்களின் வேலை நிலைமை கடுமையானது; சகிப்புத்தன்மை நிறைந்தது.

படிப்பறிவில்லாத, கடும் ஏழ்மை நிலையிலிருக்கும் குடும்பங்களிலிருந்து வரும் குழந்தைகள் ஒவ்வொரு விதமாக அடம்பிடிக்கும். ஒரு குழந்தை சிறுநீர் கழித்ததை சுத்தம் செய்தால் இன்னொரு குழந்தை காலோடு போய் 'வீல்' என்று அழுதுகொண்டிருக்கும். இவற்றையெல்லாம் பார்த்து சுத்தம் செய்து ஒரே இடத்தில் அக்குழந்தைகளை 5 மணி நேரம் வைத்து சமாளிப்பது என்பது பெரும் பாடு!

இந்த அவலத்தில் இவர்களை கண்காணிப்பது என்ற பெயரில் அதிகார வர்க்கக் கூட்டம் விரலில் அழுக்குப் படாமல் அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறது. சத்துணவு ஊழியர்கள் செய்யும் முறைகேடுகளை கண்டு பிடிப்பது அதற்காக அவர்களை தண்டிப்பது, அபராதம் விதிப்பது, வேலை நீக்கம் செய்வது என்று 2000, 3000 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு அரசாங்க ஜீப்புகளில் திரிகிறார்கள்.

இதில் அநீதி என்னவென்றால் வேலைக்கு எடுத்த மாவட்ட கலெக்டர் அலுவலக சத்துணவு துறை மட்டும் பார்வையிடுவதில்லை! அரசாங்கத்தின் 8 துறைகளில் உள்ள அதிகாரவர்க்கம் இவர்களை தண்டிக்கவும் வேலை நீக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. சமூக நலத்துறை, கல்வித் துறை, உள்ளூராட்சி, பஞ்சாயத்து யூனியன், நகராட்சி துறை, பிற்படுத்தப்பட்டவர் மற்றும் தாழ்த்தப் பட்டவர்கள்—பழங்குடிகள் நலத்துறை, காடு வளத்துறை(!), அரசு உணவு பொருட்கள் பங்கீட்டு கழகம் - இதில் எந்தத் துறை அதிகாரியும் திடீர் பார்வையிட்டு இவர்களை தண்டிக்கலாம்!

கும்பிடு போடாததற்காக, பிரியாணி வாங்கி தராததற்காக, பெண் ஊழியர்கள் தன்னிடம் பல்லிளிக்கவில்லை என்பதற்காக - இம்மாதிரி பல ''ஒழுக்க கேடு''களுக்காக பதவி நீக்கம் செய்வார்கள். 'இதற்கும் சத்துணவிற்கும் என்ன சம்மந்தம்?' என்று ஊழியர்கள் கேட்டால், 50 கிராம் எண்ணெய் காணவில்லை(!); வராத குழந்தைகள் வந்ததாக திருட்டு கணக்கு எழுதியிருக்கிறீர்கள்; அரிசி, பருப்பு, சோற்றை திருடிக் கொண்டு போய்விட்டீர்கள் என்று ஊழியர்களை மீசை துடிக்க குற்றம் சாட்டுவார்கள்!

சத்துணவு ஊழியர்கள் செய்யும் சிறு திருட்டுகளுக்கும், முறைகேடுகளுக்கும் காரணமாக உள்ள அவர்களது அவல நிலைமையை ஆராயமாட்டார்கள்! தங்களுடைய அதிகாரிகள் 'சிகரெட்' செலவுகளுக்கு கூட ஈடாகாத சம்பளத்தைதான் சத்துணவுகூட ஊழியர்கள் வாங்குகிறார்கள் என்பதை எருமை மாடுகள் போல் மறந்து விடுவார்கள். பார்வையிடும் போது கால் கிலோ, அரைகிலோ மளிகை பொருட்கள், அரிசி உபரியாக இருந்தால் கூட ''எப்படி வந்தது'' என்று கேட்டு அதற்கும் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் இருக்கிறார்கள்!

இதனால் சத்துணவு ஊழியர்கள் அனைவரையும் நாம் 'சுத்த தங்கம்' என்று சொல்லவில்லை. மற்ற அரசு துறைகளில் இருக்கும் பல ஊழியர்கள் லஞ்சம் வாங்குவது, பொறுப்பின்றி பொது மக்களிடம் நடந்து கொளவது போல இதிலும் இருக்கிறார்கள். இன்னும் கேட்டால் அவர்களுக்கு இருக்கும் சம்பளமோ, பணி சலுகையோ, விடுமுறைகளோ, ஊக்க ஊதியமோ, போனசோ, உரிமைகளோ இவர்களுக்கு இல்லை. அமைப்பு ரீதியில் அந்த அரசு ஊழியர்கள் திரண்டு இருப்பதால், ஒப்பீட்டளவில் அவர்களிடம் பவ்யமாக நடந்து கொள்ளும் அதிகாரிகளும் ஓட்டுப் பொறுக்கிகளும் இவர்களை வரைமுறையின்றி ஏறி மேய்க்கிறார்கள்.

''அமைப்பாளர் பேரவை'', ''சத்துணவு ஊழியர் சங்கம்'' என்ற அமைப்புகளை கடுமையான சிரமங்களுக்கு மத்தியில் கட்டி தங்கள் கோரிக்கைகளை ஆண்டுதோறும், மாநாடு பேரணி, ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்கள் மூலம் அரசுக்கு நினைவுபடுத்துகிறார்கள். இருந்தும் ஒரு விடிவும் வரவில்லை! அது மட்டுமல்ல அவர்களுடைய சங்கத்தையும அங்கீகரிக்கவில்லை அரசு.

இத்திட்டத்தில் வேலை செய்யும் பெண் ஊழியர்களுக்கு ஏற்படும் சிரமங்கள் இரட்டிப்பு வேதனை நிறைந்தது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திடமிருந்து உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ள மாலை 7 மணி வரை காத்திருக்க வேண்டிய நிலைமை. அவர்கள் குறைவாக கொடுக்கும் பொருளுக்கு (ஒரு மூட்டைக்கு 10 கிலோ அரிசி குறையும்) எதிராக புகார் கூட சொல்லமுடியாத நிலைமை. எவரும் பார்வையிடலாம் என்பதால் பார்வையிடும் நபர்களால் ஏற்படும் பிரச்சனைகள். பிரசவகால விடுப்பில் ஊதியமின்மை. சமையல் வேலைகளின் போது தீக்காயமோ, விபத்தோ ஏற்பட்டால் கூட மருத்துவ உதவி, விடுப்பின்மை. அறுவை சிகிச்சை மூலம் பிரசவம் செய்து கொண்ட பெண் ஊழியர்கள் நான்காம் நாளே வேலைக்கு வந்த வேதனை சம்பவங்கள் எல்லாம் நிறைய உண்டு.

தபால்-தந்தி மற்றும் தொலைபேசி துறைகளில் எப்படி மத்திய அரசு, தொழிலாளர்களை பல ஆண்டுகாலம் தினக்கூலியாக வைத்திருக்கிறதோ அதேபோல் மாநில அரசு சத்துணவு ஊழியர்களை தினக்கூலியாக வைத்து சுரண்டுகிறது.

'உலையில் போட்ட அரிசியைக் கூட, அதிகாரிகள் போன பிறகு திருடிக் கொண்டு செல்லும் சத்துணவு ஊழியர்கள் இருக்கிறார்கள்! தன் குடும்பத்துக்கு மட்டுமல்ல, திருடிக் கொண்டு செல்லும் உணவுப் பொருட்களை விற்று விடும் ஊழியர்களும் இருக்கிறார்கள்! இவர்களுக்கெல்லாம் பரிந்து பேசுகிறீரே' என்று கேட்கலாம்! குறிப்பாக விவசாயிகள் கொதிப்படையலாம்! ஆழமாக பார்த்தால் அவர்களும் அந்த ஊழியர்கள் மீது அனுதாபப்படுவார்கள். அதற்காக அவர்களின் முறைகேடுகளை நாம் எதிர்க்கக் கூடாது என்பதல்ல! கௌரவமாக வாழ்வதற்கான அவர்களது நியாயமான போராட்டத்திற்கும் நாம்தான் முன்னணியில் நின்று தோள் கொடுக்க வேண்டும்.

சத்துணவு ஊழியர்களும் தங்களை திருத்திக் கொண்டு சிறு திருட்டுகள், முறைகேடுகள் மூலம் தங்கள் நியாயமான வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு வெட்கப்பட வேண்டும். விட்டொழிக்க வேண்டும்! சத்துணவு சாப்பிட வரும் குழந்தைகளின் பெற்றோர்களிடம் சொல்லி அவர்களையும் தங்களுடைய போராட்டத்திற்கு ஆக்கபூர்வமான பங்களிக்க கோர வேண்டும்.

● பச்சையப்பன்

குழந்தைகளைப் பராமரிக்கும் தாய்சேய் நல ஊழியர்: வேலைக்கு அங்கீகாரம் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com

# இடஒதுக்கீடும் ஓட்டுக்கட்சிகளும்

வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் என்று ஒருமைப்பாட்டுவாதிகள் ஓயாமல் உபதேசித்து வருவதை இந்திய மக்கள் ஏற்கிறார்களோ, இல்லையோ; இந்திய ஓட்டுக் கட்சிகள் இந்தக் கொள்கையில் உறுதியாக இருக்கின்றன. மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுல்படுத்தப் போவதாக வி.பி.சிங் அறிவித்ததும் தேசிய கட்சிகள் முதல் பிராந்திய கட்சிகள் வரை அனைத்தும் ஒரே குரலில் ஒற்றுமையாக ஆதரித்து நின்றன. அதே சமயம் அதை அமுல்படுத்தும் விவகாரத்தில் ஒவ்வொரு கட்சியும் தனது சாதிய தன்மைக்கேற்ப முரண்பட்டு நின்று மறைமுகமாக எதிர்க்கின்றன. இது தவிர ஒவ்வொரு கட்சிக்குள்ளேயும் ஆதரவு எதிர்ப்பு கோஷ்டிப் பூசல்கள் முற்றுகிறது.

இருப்பினும் ஓட்டுவங்கியை இழந்து விடாமல் இருக்க மக்கள் முன்னே மண்டல் கமிஷன் முடிவுகளை ஆதரிப்பது போல் நாடகமாடுவது; அதே சமயம் தமது மேல் சாதி தன்மைக்கேற்ப அதை எதிர்ப்பது, இடஒதுக்கீடு எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு அரசை நிர்பந்திப்பது, அமுல்படுத்தும் முடிவையே நீர்த்துப் போகச் செய்வது என்ற சாணக்கிய அரசியலில் எல்லா தேசிய கட்சிகளும் இன்று இறங்கிவிட்டன. மண்டல் கமிஷன் முடிவுகளை அமுல்படுத்துவதாக வி.பி.சிங் அறிவித்ததிலிருந்து தொடங்கி கடந்த ஒருமாத காலத்தில் இக்கட்சிகள் நடத்திய கபடநாடகங்களும், சந்தர்ப்பவாத 'பல்டி'களும் சர்க்கஸ் வித்தைகளையே விஞ்சிவிட்டன.

### பாசிச காங்கிரசின் பச்சோந்தித்தனம்

'ஆகஸ்ட் 8-ம் தேதியன்று மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்று பிற்பட்டோருக்கு 27% இடஒதுக்கீடு செய்வதாக வி.பி.சிங் அறிவித்ததும் காங்கிரசு கட்சியும் அதன் தலைவர் ராஜீவும் வரவேற்று ஆதரித்தனர். ''மண்டல் கமிஷன் பரிந்துரையில் குறிப்பிட்டுள்ள சாதிகள் மட்டுமின்றி மத்திய - மாநிலப் பட்டியலில் உள்ள சாதிகளுக்கும் இடஒதுக்கீடு செய்ய வேண்டும். வேலைவாய்ப்பில் மட்டுமின்றி பள்ளி-கல்லூரிகளிலும் இதை அமுல்படுத்த வேண்டும்'' என்று சமூக நீதிக் காவலனாக ராஜீவ் முழங்கினார்.

அடுத்த ஒருவார காலத்திற்குள் வடமாநிலங்களில் இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சி பரவத் தொடங்கியதும் கருத்து ஏதும் கூறாமல் வாய்மூடிக் கிடந்த காங்கிரசுக் கட்சி, இப்போராட்டத்தை பின்னாலிருந்து கொண்டு ஊக்குவித்தது. அதன்பிறகு பாரதீய ஜனதா கடசி, மற்ற கட்சிகளின் கருத்தைக் கேட்காமல் வி.பி.சிங் அவசரமாக இம்முடிவை அறிவித்ததைச் சாடியதும் காங்கிரசு கட்சியும் கூட்டுச் சேர்ந்து கொண்டு ஒத்தூதியது. ஆகஸ்ட் இறுதியில் இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சி தீவிரமாகியதும், முன்னாள் காங்கிரசு மந்திரி தினேஷ்சிங், ''இளைஞர்கள் இப்போராட்டத்தில் சிந்தும் ஒவ்வொரு துளி இரத்தத்துக்கும் தேசிய முன்னணி அரசு பதில் சொல்லியாக வேண்டும்'' என்று கொக்கரித்தார்.

இடஒதுக்கீட்டு முடிவை காங்கிரசுக் கட்சி எதிர்ப்பது போன்ற தோற்றத்தை பத்திரிக்கைகள் ஊதிப் பெருக்கின. இதனால் பீதியடைந்த முன்னாள் காங்கிரசு மந்திரி, வசந்த் சாத்தே, ''இடஒதுக்கீடு முடிவை நாங்கள் எதிர்க்கவில்லை. அமுல்படுத்தும் வழிமுறைகளில்தான் சில மாற்றங்களைக் கோரினோம்'' என்று திடீர் பல்டி அடித்தார். அதன் பிறகு அவரே, வி.பி.சிங் பின்னர் அறிவித்த பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்க 5 முதல் 10 சதவீதம் வரையிலான இடஒதுக்கீட்டு முடிவை நாடாளுமன்றத்தில் அறிவிக்காமல் தன்னிச்சையாக தீர்மானித்ததற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார். நாடாளுமன்றக் கூட்டத்தில், நாட்டை சாதியப் போரில் மூழ்கடித்து விட்டதாக பாரதீய ஜனதாவுடன் சேர்ந்து கொண்டு காங்கிரசு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது.

பின்னர் ஆகஸ்ட் 29, 30 தேதிகளில் கூடிய காங்கிரசு செயற்குழு, ''இடஒதுக்கீட்டு முடிவை ஆதரிப்பதாக தீர்மானம் போட்டது. அதேசமயம், அரசியல் உள் நோக்கத்துடன் கவர்ச்சிவாத அடிப்படையில் வி.பி.சிங் இம்முடிவை அறிவித்துள்ளார். இடஒதுக்கீட்டை அமுல்படுத்துமுன்னர் தேசிய கொள்கை வகுக்கப்பட வேண்டும்'' என்று முடிவு செய்தது.

''சரி, வாருங்கள். எல்லோரும் கூடி தேசியக் கொள்கையை வகுப்போம்'' என்று வி.பி.சிங் சர்வகட்சி கூட்டத்திற்கு காங்கிரசை அழைத்தார். ''முடியாது. நீங்கள் எற்கனவே முடிவை அறிவித்துவிட்ட பிறகு சர்வ கட்சி கூட்டத்தினால் உருப்படியாக ஒரு பலனும் ஏற்படாது'' என்று காங்கிரசுக் கட்சி இக்கூட்டத்தைப் புறக்கணிப்பதாக அறிவித்தது. அடுத்த நாளே திடீர் பல்டியடித்து ராஜீவும் அவரது சகபாடிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். அதன்பிறகு, முன்பு தனது அமைச்சரவையில் வி.பி.சிங் இருந்த போது மண்டல் கமிஷன் பரிந்துரைகளை எதிர்த்தார் என்று ஒரு அண்டப்புளுகை ராஜீவ் அவிழ்த்து விட்டார். பிரதமர் அலுவலகம் அதற்கு மறுப்பு தெரிவித்ததும் வாயை மூடிக் கொண்டார்.



நாடாளுமன்றக கூட்டத் தொடர் தொடங்கியதும், நாட்டில் சாதியப் போரை மூட்டி விட்டுள்ளதாகக் கூறி வி.பி.சிங்கை பதவி விலகுமாறு காங்கிரசு கட்சி கூப்பாடு போட்டது. செப்.6 அன்று மண்டல் கமிஷன் பரிந்துரைகளுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் ராஜீவ் சண்டமாருதம் பொழிந்தார். ''பிற்பட்ட சாதிகள் எவை என்பதற்கு மண்டல் பின்பற்றிய முறை விஞ்ஞான பூர்வமானதல்ல; துல்லியமான மதிப்பீடும் அல்ல. எனவே மறுஆய்வு செய்ய வேண்டும்; வருமான வரி கட்டுவோருக்கு இடஒதுக்கீட்டு சலுகைகள் தரக்கூடாது. பொருளாதார அடிப்படையில் ஒதுக்கீடு அமையவேண்டும். அனைத்து இட ஒதுக்கீட்டு சலுகைகளுக்கும் காலவரம்பு நிர்ணயிக்க வேண்டும். வேலைவாய்ப்பு மட்டுமின்றி கல்வித்துறையிலும் இடஒதுக்கீட்டை விரிவுபடுத்த வேண்டும்'' என்றார். ''சரி; காங்கிரசு ஆளும் ஆந்திராவிலும் கர்நாடகாவிலும் இதைப் பின்பற்றத் தயாரா?'' என்று வி.பி.சிங் சவால்விட்டதும், ராஜீவ் கும்பல் மேல் வாயையும் கீழ்வாயையும் பொத்திக் கொண்டது.

### இந்து வெறியர்களின் இரட்டைநாக்கு

பாசிச காங்கிரசின் சந்தர்ப்பவாத சதிராட்டங்களுக்கு சற்றும் சளைக்காமல் மத வெறி பாசிசக் கட்சியான பாரதீய ஜனதா ஆதரவு - எதிர்ப்பு முகமூடிகளை மாற்றி மாற்றிப் போட்டுக் கொண்டது. ராமஜென்ம பூமி விவகாரத்தைக் காட்டி இந்துக்களை வெறியூட்டி தன்பக்கம் திரட்டி வைத்திருந்த நிலையில், அதையே நாட்டின் முக்கிய பிரச்சினையாகக் காட்டிவந்த நேரத்தில் இந்துக்களை மண்டல் கமிஷன் சாதி ரீதியாகப் பிளவுபடுத்திவிட்ட ஆத்திரத்தில் பாரதீய ஜனதா பின்னாலிருந்து கொண்டு இடஒதுக்கீடு எதிர்ப்புப் போராட்டத்தை உசுப்பிவிட்டது. அதன் துணை அமைப்பான விசுவ ஹிந்து பரிஷத் இடஒதுக்கீட்டிற்கு வெளிப்படையாக எதிர்ப்பு தெரிவித்தது. மதவெறி பாசிஸ்டுகளின் மையக் கொள்கை பரப்பு வார ஏடான 'ஆர்கனைசர்' வி.பி.சிங்கின் முடிவை கடுமையாகச் சாடியது.

இருப்பினும், தனது தேர்தல் அறிக்கையிலேயே மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்குமாறு குறிப்பிட்டுள்ளதாகவும் வி.பி.சிங்கின் முடிவுகளை வரவேற்பதாகவும் பாரதீய ஜனதா பசப்பியது. இடஒதுக்கீடு எதிர்ப்ப கிளர்ச்சி வலுக்கத் தொடங்கியதும் அதுவரை அமைதி காத்த அத்வானி 'மற்ற கட்சிகளின் கருத்து கேட்டு ஒரு தேசி



படிப்பகம்

www.padippakam.com

யக் கொள்கையை வகுக்காமல் வி.பி.சிங் தன்னிச்சையாக முடிவு செய்தது மாபெரும் தவறு; பொருளாதார ரீதியின் பின்தங்கிய முற்பட்டவர்களுக்கும் இடஒதுக்கீடு தரப்பட வேண்டும்'' என்றார். அதன்பிறகு ஒர வாரம் கழித்து. ''இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சியைக் கண்டும் காணாமல் இருக்க முடியாது; ஆதரவு - எதிர்ப்பு எனும் இரு தரப்பினரையும் கலந்து பேசி இணக்கமான முடிவுக்கு வரவேண்டும்'' என்று உபதேசித்தார்.

வட மாநிலங்களில் இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சி மேலும் தீவிரமடையத் தொடங்கியதும், ''சிறுபான்மை அரசான தேசிய முன்னணி அரசு, தனது ஆதரவுக் கட்சிகளைக் கலந்தாலோசிக்காமல் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமுலாக்க முடிவு செய்தது தவறு; அதைவிட நாட்டின் பொருளாதார நிலையைக் கணக்கில் கொள்ளாமல் இம்முடிவை அறிவித்தது மாபெரும் தவறு'' என்று வெளிப்படையாக குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே மேல்சாதி இளைஞர்களின் இடஒதுக்கீட்டு எதிர்ப்பு கிளர்ச்சிக்கு எதிராக ஜனதாதள மத்திய மந்திரிகளான சரத்யாதவும், ராம்விலாஸ் பஸ்வானும் பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் இடஒதுக்கீட்டை ஆதரித்து வீதிகளில் திரண்டு போராடுமாறு அறைகூவல் விடுத்தனர். அதுவரை ஏதோ சில திருத்தங்களை மட்டுமே கோருவது போல் நாடகமாடிய பாரதீய ஜனதா கட்சி, இந்த விவகாரத்தை சாக்கிட்டு எதிர்க்கத் தொடங்கியது. ''மந்திரிகள் சாதிக் கலவரத்தக்கு வித்திடுகின்றனர். இந்தியருக்கு எதிராக இந்தியரை நிறுத்துகின்றனர். இதனால் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே ஆபதது ஏற்பட்டுள்ளது'' என்று சாடத் தொடங்கினர். அதன்பிறகு போலிக் கம்யூனிஸ்டுகளுடன் கூடிப் பேசி, ''இடஒதுக்கீட்டை எதிர்க்கவில்லை; பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்; இடஒதுக்கீட்டிற்கான புதிய கொள்கை வகுக்கப்பட வேண்டும்'' என்று ஆகஸ்ட் இறுதியில் அறிவித்தனர்.

பாரதீய ஜனதாவின் பிடியிலுள்ள இமாசல பிரதேசத்தில் ''இடஒதுக்கீட்டு முடிவை அமுல்படுத்த மாட்டோம்'' என்று மாநில முதல்வர் கொக்கரித்தார். பாரதீய ஜனதா எம்.பி. டாக்டர் ஜே.கே.ஜெயின் இடஒதுக்கீட்டை எதிர்த்து காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டார். ஆனால் தாம இதை ஆதரிக்கவில்லை. அவரது தனிப்பட்ட முடிவு என்று பாரதீய ஜனதா மழுப்பியது. மத்திய பிரதேச முதல்வர் பட்வா, ''இடஒதுக்கீட்டு முடிவை ஆழமாக விவாதித்த பிறகுதான் அமுலபடுத்த முடியும்'' என்று கிடப்பில் போட்டார்.

அதன்பிறகு பாரதீய ஜனதா மாநில முதல்வர்கள் டெல்லியில் கட்சித் தலைவர்களுடன் கூடிப் பேசினார். ''இடஒதுக்கீட்டு முடிவை நாங்கள் எதிர்க்கவில்லை. அதேசமயம் சில திருத்தங்கள் செய்ய வேண்டும்'' என்று தட்டைத் திருப்பிக் கொண்டு தாளம் போட்டனர். சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொண்டு அரசின் முடிவை ஏற்பதாக கூறிய பாரதீய ஜனதா. பின்னர் ''இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை'' என்று சாடியது. ''முஸ்லீம்கள் மதரீதியாக இப்போது இடஒதுக்கீட்டைக் கேட்கிறார்கள். மண்டல் கமிஷன் முடிவுகளை அமுல்படுத்த தொடங்கியதால் ஏற்பட்டுள்ள மோசமான நிலை இது என்று ''ஆர்கனைசர்'' பத்திரிக்கை இந்து வெறியைக் கக்கியது.




### போலிக் கம்யூனிஸ்ட்டுகளின் சந்தர்ப்பவாத சதிராட்டம்

இரு துருவங்களாக வர்ணிக்கப்படும் பாரதீய ஜனதாவும் 'மார்க்சிஸ்டு'களும் இடஒதுக்கீடு விவகாரத்தில் ஒரே நிலைப்பாட்டன் கூடிக் குலாவினர். பாரதீய ஜனதாவைப் போலவே போலிக் கம்யூனிஸ்டுகளும் இடஒதுக்கீட்டு முடிவை ஒருபக்கம் ஆதரித்துக் கொண்டே மறுபக்கம் பொருளாதார அடிப்படையிலான இடஒதுக்கீட்டைக் கோரினர். பாரதீய ஜனதா கட்சி அலுவலகத்திலேயே கூடிப் பேசி அதன் கருத்தையே நாடாளுமன்றத்தில் எதிரொலித்தனர்.

இடஒதுக்கீடு ஒரு முதலாளித்துவ சீர்திருத்த நடவடிக்கை என்றும், இப்போது நடக்கும் ஆதரவு - எதிர்ப்புப் போராட்டங்கள் அரசு பதவிகளைக் கைப்பற்றுவதற்கான போட்டியே என்றும் அம்பலப்படுத்துவதற்குப் பதில், இடஒதுக்கீட்டில் இன்னும் பல திருத்தங்களைக் கோரும் சீர்திருத்தவாதக் கட்சியாக போலிக் கம்யூனிஸ்டுகள் தங்களை நிருபித்துக் கொண்டனர். இடஒதுக்கீடு பற்றி மத்தியக் கமிட்டி கூட்டம் நடத்தி முடித்த கையோடு, 'மார்க்சிஸ்ட்' கட் பொதுச் செயலாளர் நம்பூதிபாடு. ''பீகார் பாணியிலான இடஒதுக்கீட்டு முறையை அமுல்படுத்து''மாறு கோரினார். பீகாரில் கர்பூரிதாக்கூர் ஆட்சியின் போது, 12% இடஒதுக்கீடு பொருளாதார அடிப்படை இல்லாமலும், 8% இதர பிற்பட்ட மக்களுக்கும், 3% பெண்களுக்கும், 3% முற்பட்ட சாதிகளிலுள்ள ஏழைகளுக்கும் இடஒதுக்கீடு செய்யப்பட்டது. இதிலே முற்போக்கை கண்டு போலிக் கம்யூனிஸ்டுகள் இத்தகைய முறையை ஆதரித்தனர். மறுபுறம் இடஒதுக்கீட்டு முறையால், வறுமையும் வேலையின்மையும் ஒழிந்துவிடாது என்று தத்துவ விளக்கம் கொடுத்தனர்.

### வி.பி.சிங்கின் களிமண் கொள்கை

இவர்கள் எல்லோரையும் விட 'கொள்கைத் தங்கம்' வி.பி.சிங் அடித்த அந்தர்பல்டிதான் சுவாரசியமானது. தங்கத்தை நீட்டியும் சுருக்கியும் உருமாற்றம் செய்வதைப் போல, வி.பி.சிங்கின் இடஒதுக்கீட்டுக் கொள்கையும் நாளுக்கொரு மாற்றம் பெற்றது.

பிற்பட்ட சாதியினருக்கு 27% இடஒதுக்கீடு செய்வதாக அறிவித்த வி.பி.சிங் அடுத்தநாளே இது வேலைவாய்ப்புத் துறையில் மட்டுமே அமுல்படுத்தப்படும். கல்வித் துறையில் அல்ல என்றார். பின்னர் இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சிகள் வடமாநிலங்களில் தீவிரமானதும், மேல்சாதியினரின் நிர்பந்தம் காரணமாக பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு 5 முதல் 10% இடஒதுக்கீடு செய்வதாக அறிவித்தார். அதன் பிறகு, மத்திய அரசுத் துறை நிறுவனங்களில் மட்டுமே இட ஒதுக்கீடு முறை அமுல்படுத்தப்படும். மாநில அரசுக்ளை நிர்பந்திக்க மாட்டோம் என்றார். பிறகு, இடஒதுக்கீட்டுச் சலுகை வேலைவாய்ப்புக்காக மட்டும்தான்; பதவி உயர்வு பெறுவதற்கல்ல என்ற முடிவை அறிவித்தார்.

இடஒதுக்கீடு எதிர்ப்பு கிளர்ச்சியின் தீவிரம், எதிர்க்கட்சிகள் மற்றும் தோழமைக் கட்சிகளின் நிர்ப்பந்தம், ஜனதாதள கட்சிக்குள்ளேயே கிளம்பிய எதிர்ப்பு ஆகியவற்றை ஒட்டி அவரது இடஒதுக்கீட்டு கொள்கை முடிவும் வளைத்து முறுக்கப்பட்டது. யாரையும் கலந்தாலோசிக்காமல் ''தைரியமான' முடிவை அவசரமாக அறிவித்த வி.பி.சிங், அதே வேகத்தில் தனது உறுதியான கொள்கையிலிருந்து பின்வாங்கத் தொடங்கினார். கடைசியாக, அரசு ஊழியர் மத்தியில் நிலவும் இடஒதுக்கீட்டு எதிர்ப்பைச் சமாளிக்க இப்போது போனஸ் சலுகைகளை வாரியிறைத்துள்ளார்.

இடஒதுக்கீட்டு முடிவை வி.பி.சிங் அறிவித்ததன் மூலம் 'சமூக நீதி' நிலைநாட்டப்பட்டு விட்டதாக பிற்பட்ட சாதியைச் சேர்ந்த கட்சிகளும் அமைப்புகளும் பெருமையில் பூரித்துப் போகின்றன. ஆனால் இவ்வளவுக்குப் பிறகும் பிற்பட்ட சாதியினருக்குக் கிடைக்கப் போவது 1% வேலைவாய்ப்புச் சலுகைதான். அதாவது நாட்டின் மொத்த வேலைவாய்ப்பைக் கணக்கிடும் போது மத்திய அரசுத் துறையில் ஒரு சதவீதம்தான் வேலைவாய்ப்புள்ளது. இதிலேதான் 27% ஒதுக்கீடு கிடைக்கும். அதுவும் கட இப்போதைக்கு சாத்தியமில்லை. ஏனெனில் புதிதாக வேலைக்கு ஆளெடுப்பதை மத்திய அரசு மூன்றாண்டுகளாக நிறுத்தி வைத்துள்ளது. இருக்கின்ற காலியிடங்களில் தான் இப்போதைக்கு இட்டு நிரப்ப முடியும். ஒருவழியாக, ஆதரிப்பது போல் நடித்துக் கொண்டே இடஒதுக்கீட்டு முடிவை நீர்த்துப் போகச் செய்வதில் மேல்சாதிக் கட்சிகள் வெற்றி பெற்றுள்ளதைத் தான் கடந்த ஒருமாத கால அரசியல் நிகழ்ச்சிப் போக்குகள் காட்டுகின்றன.

● குமார்.

படிப்பகம்



# ‘தாழ்த்தப்பட்டோர்’ மீது சாதிவெறித் தாக்குதல்!

சாதி ரீதியான இழிவு - அவமானம் தாக்குதல் - இழப்பு... என மேல்சாதி வெறியர்களின் அடக்கு முறைக்கு பலியாகி ‘தாழ்த்தப்பட்ட’ மக்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ராவுத்த நல்லூர் கிராமத்தில் கடந்த 10-8-90 அன்று வன்னியர் சாதியைச் சேர்ந்த கும்பல் ஒன்று ஆயுதங்கள் சகிதமாக ‘தாழ்த்தப்பட்டவர்கள்’ காலனிக்குள் புகுந்து வெறித் தாக்குதலை நடத்தியது.

கடப்பாரை, கொடுவாள், ஈட்டி, சைக்கிள்செயின், கம்பு முதலானவைகளைக் கொண்டு நிராயுதபாணியாக இருந்த மக்களை கொடூரமாகத் தாக்கியது. பிரசவமாகி மூன்றே நாளான ஒருதாய் கடுமையாக தாக்கப்பட்டார். பலர் மானபங்கப்படுத்தப் பட்டனர். பலருக்கு அரிவாள் வெட்டுபட்டும், கை-கால் முறிந்தும் உள்ளது. பூட்டியிருந்த வீடுகளையும் விட்டு வைக்காமல் கதவை உடைத்து புகுத்து ரேடியோ, சைக்கிள், சட்டி, பானை என அனைத்து பொருட்களையும் நொறுக்கினர். கடப்பாரையால் கதவு அருகால்களைப் பிடுங்கி எரிந்தனர். பலரது வீடுகளில் பெட்டியை உடைத்து நகை, பணம், துணிமணிகளையெல்லாம் சூறையாடினர். தடுக்க வந்தவர்களை காட்டுமிராண்டித்தனமாக தாக்கினர். குதிர்களையும் நொறுக்கி சேமித்து வைக்கப்பட்டிருந்த தானியங்களை சிதறடித்து நாசமாக்கினார்.

இக்கிராமத்தையும் உள்ளிட்ட புதுப்பேட்டை ஊராட்சி மன்றத் தலைவர் (தி.மு.க. வைச் சேர்ந்தவர்) கண்ணுக்கவுண்டர் ஏவலின் பேரில்தான் இத்தாக்குதல் நடந்தது. தன் மனைவியை ‘தாழ்த்தப்பட்டவர்கள்’ தாக்கி விட்டதாக சுற்றுவட்டார கிராமங்களிலிருந்து தனது சாதிக்காரர்களை டிராக்டரில் அழைத்துவந்து இத்தாக்குதலை நடத்தினார். ஆனால், கண்ணுக்கவுண்டரின் மனைவி தாக்கப்படவேயில்லை. நடந்த உண்மைச் சம்பவமோ வேறு.

சென்ற மாதம் ‘தாழ்த்தப்பட்டவர்’ காலனியில் நடந்த திருவிழாவில் சாமி கும்பிடுவதில் இரு கோஷ்டிகளுக்கிடையே சண்டை வந்தது. இதில் ஒரு கோஷ்டி கண்ணுக்கவுண்டரின் ஆதரவு பெற்ற கள்ளச்சாராய கோஷ்டி; இன்னொன்று போட்டி சாராயக்கடை வைத்துள்ள கோஷ்டி. மத்தியஸ்தம் செய்கிற போர்வையில் இப்பிரச்சினையில் கண்ணுக்கவுண்டர் தலையீட்டு தனது கோஷ்டிக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியுள்ளார். திருவிழாவுக்கு என்று பெங்களூரிலிருந்து வந்திருந்த சில இளைஞர்கள் இதனை எதிர்த்தனர். ‘நாம் ஒன்றுபட்டு நிற்கவேண்டும். மேல்சாதிக் காரர்களின் தந்திரத்துக்கு பலியாகக் கூடாது என்ற அடிப்படையில் அவர்கள் பேசினர். இதனால் ஆத்திரமடைந்த கண்ணுக்கவுண்டர், தனது மனைவியை கேவலமாக பேசியதாக இட்டுக்கட்டி அந்த இளைஞர்களை தாக்கவே கைகலப்பாகி இருக்கிறது. அவமானப்பட்ட கண்ணுக்கவுண்டர் மேலும் பழிவாங்கத் திட்டமிட்டு தனது மனைவியை அந்த இளைஞர்கள் தாக்கி விட்டதாக வதந்தியை கிளப்பி சாதிவெறியைத் தூண்டினார்.

‘தாழ்த்தபபட்டவர்’களிடையே இரு கோஷ்டியுமே சமாதானமாக சாமி கும்பிட தூரத்திலுள்ள கோயிலுக்கு சென்ற பிறகு தனது அடியாட்கள் மூலம் சுற்று வட்டாரத்திலுள்ள தனது சாதிக்காரர்கள்ளத் திரட்டி வந்து இத்தாக்குதலை தொடுத்தார் கண்ணுக்கவுண்டர். காலனி மக்களிலும் பலர் கோயி

சாகிவெறியர்களின் அட்டூழியம்! தாழ்த்தப்பட்ட மக்கள் நடுவீதியில்...





www.padippakam.com

லுக்கு சென்று விட்டதால் எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் புகுந்து வெறியாட்டம் போட்டனர். காலனி மக்கள் திரும்பி வந்து ஒன்றுபடுவதற்குள் தமது கும்பலுக்கு பாதுகாப்பாக போலீஸ் படையை கொண்டுவந்து நிறுத்திக் கொண்டார் கண்ணுக்கவுண்டர்.

போலீஸ் நிலையத்திற்கு கள்ளச்சாராயப் பேர்வழியான கண்ணுகவுண்டரிடம் இருந்து தவறாமல் மாமூல் போய்க் கொண்டிருக்கிறது. மேலும் ஏதாவது தகறாறு - பிரச்சினைகளில் கண்ணுக்கவுண்டருக்கு சாதகமாக நடந்து கொண்டால் போலீசுக்கு சிறப்பு போனசும் கிடைப்பதுண்டு. அதன்படி போலீஸ் கும்பல் 'தாழ்த்தப் பட்டவர்கள்' பலரைக் கைது செய்து சிறையிலடைத்தது. கண்துடைப்பிற்காக கண்ணுக்கவுண்டர் ஆட்களில் சிலரையும் கைதுசெய்து மறுநாளே அவர்கள் ஜாமீனில் வருவதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தது. "போலீசிற்கு 5000 ருபாய் கொடுத்து விட்டுத்தான் வந்திருக்கிறோம், எங்களை யாரும் ஒன்றும் புடுங்க முடியாது" என்ற திமிருடன் போலீசுக்கும், தமக்கும் இருக்கும் உறவை பகிரங்கமாக கூறி தாக்கி இருக்கிறார்கள், சாதிவெறியர்கள்.

ஒவ்வொரு ஆகஸ்டு 15-லும் ராவுத்தநல்லூர் கிராமத்து கோயிலில் ஓட்டுக்கட்சித் தலைவர்களும், பிரமுகர்களும், அதிகாரிகளும் கூடி 'தாழ்த்தப்பட்ட' மக்களில் சிலரை அழைத்து எல்லோரும் சமம் என உதட்டளவில் சிரித்துப் பேசி நடக்கும் சம்பிரதாய சடங்கிற்கு முன் உண்மை சொருபம் வெளிச்சமாகிவிட்டது. ரத்தத்தின் ரத்தம், உடன்பிறப்பு என்றெல்லாம் பேசும் இவர்கள்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக சாதிவெறியைத் தூண்டி தாக்கும் சாதிவெறியர்கள் என்பதை பகுதி மக்கள் உணர்ந்துள்ளனர். உழைக்கும் மக்கள் வர்க்க அடிப்படையில் ஒன்றுபடும் போது மட்டுமே இத்தகைய சாதிவெறியர்களை துடைத்தொழித்து சாதியக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

— தகவல்:
விவசாயிக்ள் விடுதலை முன்னணி
கல்லை வட்டம்.

# நெருப்பை பொட்டலம் கட்டும் போலீசு!

புரட்சியாளர்கள் ஆளும் வர்க்கத்தின் - அரசு எந்திரத்தின் மிரட்டலுக்கும் அடக்கு முறைக்கும் பணிந்ததாக வரலாறு இல்லை. இருந்தாலும் சில போலீசு அதிகாரிகள் புரட்சியாளர்கள் மீது அடக்கு முறையை ஏவி குட்டுப்பட்டுப் போவது தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு இன்னும் ஒரு எடுத்துக்காட்டுதான் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள சங்கராபுரம் போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த எஸ்.ஐ. விஜயபாஸ்கர். இவர் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு சங்கராபுரத்திற்கு வந்தார். வந்ததிலிருந்தே ஏதாவது வழக்கு தொடர்பாக ஸ்டேஷனுக்கு வரும் அப்பாவி மக்களை இழிவாக திட்டியும் - தாக்கியும், அவர்களை மிரட்டி பணம் பறித்தும் வருகிறார். அதே சமயம் மக்கள் துரோகிகளுடன் - கள்ளச்சாராய பேர்வழிகளுடன் உறவாடி அதிகார முறைகேடுகளின் மூலம் அவர்களுக்கு 'சேவை' செய்தும் வருகிறார். இப்பகுதியில் செயல்படும் விவசாயிகள் விடுதலை முன்னணி இவற்றை பொதுக்கூட்டம், ஊர்வலம், தெருமுனைப் பிரச்சாரங்கள் மூலம் அம்பலப்படுத்தி வருகிறது. மேலும் போலீஸ் ஸ்டேஷன் வரை செல்லும் மக்கள் பிரச்சினைகள் சிலவற்றில் தலையிட்டு நியாயமான தரப்பினருக்காக வாதாடியும், அவர்கள் ஏமாந்து பணம் தருவதை தடுத்தும் வருகிறது.

வி.வி.மு. - வின் நடைமுறைகளை தாங்கிக் கொள்ள முடியாத விஜயபாஸ்கர் பலவழிகளில் அமைப்புத்தோழர்களை பழி வாங்க முயற்சித்து வருகிறார். வி.வி.மு-வினர் ஸ்டேஷனுக்கு வந்தால் தொல்லை கொடுப்பது. அவர்களை பிடித்து வைத்து உறவினர்களுக்கு பீதியை ஏற்படுத்துவது. இதன் மூலம் உறவினர்களிடம் பணம் பறிக்க முயல்வது என கேவலமாக செயல்பட்டு வருகிறார். வி.வி.மு. கூட்டங்களில் தகறாறு செய்யச் சொல்வது. ஊரில் அமைப்புத் தோழர்களை அடிக்கச் சொல்வது என சமூக விரோதிகளை தூண்டிவிட்டும் வருகிறார்.




அண்மையில் குளத்தூரில், அக்கிராமத்து ஆதிக்க சக்திகள் வி.வி.மு. தோழர் ஒருவரை தாக்கினார்கள். இது தொடர்பாக புகார் கொடுக்கச் சென்ற வி.வி.மு. வினரை பேட்மிட்டன் விளையாடிக் கொண்டிருந்த விஜயபாஸ்கர் நேரமில்லையென மனுவை வாங்க மறுத்து திருப்பி அனுப்பினார். மறுநாள் ஊர் ஆதிக்க சக்திகளிடமே பொய்யான புகார் ஒன்றைப் பெற்றுக் கொண்டு வந்து வி.வி.மு.வினரை கைது செய்து வழக்கு போட்டார். இருதரப்பினரும் சமாதானமாக போக விரும்பியும் ஏற்காமல் இவ்வாறு செய்தார். பின்னர் வி.வி.மு. வின் நிர்ப்பந்தத்தினால் - போராட்டத்தினால் ஆதிக்க சக்திகள் மீதும் பேருக்கு வழக்கு தொடுத்துள்ளார்.

ஆகஸ்டு 28ல் மேல்சாதியைச் சேர்ந்த இருவருக்கும் 'தாழ்த்தப்பட்ட' சாதியைச் சேர்ந்த இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. மேல்சாதிக்காரர்கள் தாழ்த்தப்பட்ட இளைஞர்களை கேவலமாக திட்டியும், கொடுவாளால் வெட்டி காயமும் ஏற்படுத்தினார்கள். இதில் தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் வி.வி.மு. ஆதரவாளர்கள் என்பதால் அவர்கள் கொடுத்த புகாரை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு தோழர்கள் மீதே வழக்குப் போட்டார் எஸ். ஐ. விஜயபாஸ்கர்.

மேல்சாதியைச் சேர்ந்த அந்நபர்கள் பின்னர் வி.வி.மு.வுடன் சமாதானம் செய்து கொண்டதை அறிந்ததும் அவசர அவசரமாக கோர்ட் மூலம் ஜெயிலுக்கு அனுப்பி வைத்தா. ஜெயிலுக்கு தொலைபேசி மூலம் பலமுறை தொடர்பு கொண்டு "இவர்கள் வி.வி.மு.க்காரர்கள் - தீவிரவாதிகள்; இஷ்டம்போல் அடித்து நொறுக்குங்கள்; எதுவந்தாலும் நான் பார்த்துக் கொள்கிறேன்" என பேசினார்.

வி.வி.மு.-வை பழிவாங்க வெறிபிடித்தலையும் எஸ்.ஐ. விஜயபாஸ்கரை அம்பலப்படுத்தியும் கண்டித்தும் வி.வி.மு. பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறது. சுவரொட்டி துண்டு பிரசுரம், தட்டி மூலம் அம்பலப்படுத்தியும், மேலதிகாரிகளுக்கு புகார் ஒன்றை அனுப்பும் பொருட்டு பகுதி மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடத்தியும் வருகிறது.

— தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி
கல்லை வட்டம்


ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ்.மதியழகன், 21, [illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.

www.padippakam.com

அறிந்து விடாமல் தடுக்க மலிவு விலை மதுவை திறந்து விட்டு அவர்களின் பகுத்தறிவுச் சிறகை சுலபமாக கிள்ளியெறிந்து விட்டார்! தமிழர் அறிவு, தமிழர் தன்மானம், தமிழர் கலாச்சாரம் 'தமிழினத் தலைவர்'களால் இப்படி வீதியில் வீசியெறியப்பட்டு சின்னா பின்னாப் படுத்தப்பட்டுவிட்டன.

இதோ, இது சென்னையில் இம்மாதம் 15, 16 தேதிகளில் கருணாநிதி நடத்திய ஐம்பெரும் விழா! அண்ணா பிறந்த நாள், பெரியார் பிறந்தநாள், தி.மு.க. கழகம் தோன்றிய நாள், அம்பேத்கார், பாரதிதாசன் நூற்றாண்டு விழா ஆகியவற்றுடன் திராவிட இயக்க வைரவிழா, மண்டல் கமிஷன் வெற்றி விழா இப்படி விழா கோலத்தில் மூழ்கிப் போனது சென்னை மாநகரம்! கருணாநிதியே போற்றி புகழும் இந்த தலைவர்களின் கொள்கைகளில் கூட அவர் உறுதியாக இல்லை. குறிப்பாக, பெரியார், சுயமரியாதையுடனும், பகுத்திறிவுடனும் தமிழர்கள் வாழவேண்டும் என்று இறுதி மூச்சுவரை பாடுபட்டார். மனிதர்களிடம் இருக்கும் பகுத்தறிவையும், நாகரீகத்தையும் அம்மணமாக்கும் போதைப் பழக்கத்திற்கு எதிராக சமரசமின்றி போராடினார். செயல் ரீதியில் சிறுபிள்ளைத் தனமாக இருந்தாலும், கள் இறக்கப் பயன்படும் தன் வீட்டு தோப்பு தென்னமரங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்து 'குடி'க்கெதிராக எதிர்ப்பைத் தெரிவித்தார். கருணாநிதியோ மலிவுவிலை மதுக் கொடுத்து தமிழர்களை வேகமாக மிருகங்களாக மாற்றுகிறார்.

கழகங்க[illegible] ஆட்சியால் மானமிழந்து வாழ்விழந்து குப்பையாக வீசப்பட்ட தமிழர்கள் ஒருபுறம், பிரம்மாண்டமான விழாக்கள், அலங்காரமான விளம்பரங்கள் இவற்றில் பவனி வரும் 'தமிழினத்'த் தலைவர்கள் மறுபுறம்! இந்த மோசடி அரசியல் கும்பலை தோலுரிப்பது எப்போது?





# இதுதான் இன்றைய இந்தியா

இவரை வீழ்த்தியது எது? லாரியா, பேருந்தா, பசியா? எதுவும் இல்லை! கருணாநிதியின் மலிவு விலை மது! தன்மானத்தைப் பறித்துக் கொண்டு பதிலுக்கு மலிவான சுகத்தை வாரி வழங்கியிருக்கிறது! கருணாநிதியின் மொழியில் சொல்வதானால், சோமபானம், சுராபானம் அருந்திய பெருமைமிகு தமிழ் மன்னர்களின் சீரிய கலாச்சாரத்தை சிந்தையில் ஏந்தி வந்து வீழ்ந்து விட்ட அடலேறு! மண்ணின் மைந்தர்! மறத்தமிழர்!

"வீதியோரம் வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் நெஞ்சங்களில் விபரீத எண்ணங்களை... வெந்த புண்ணிலே வேல்... மரக்கிளையிலே பிணம்" இப்படி 50 ஆண்டுகளில் காங்கிரசுக் கட்சிக்கெதிராக சமூகத்தில் நிலவிய அவலத்தைப்பற்றி வசனம் பேசினார் அண்ணாதுரை! அவரின் வழிவந்த கருணாநிதி, "வேலையற்றதுகள் அதற்கான உண்மையான காரணத்தை

படிப்பகம்